Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்ட படியால் மேற்கொண்டு விளம்பரம் எது காரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி
'உற்பத்தியாளர்'
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | கார்த்திகை 27 | ஷவ்வால் 12 | (12—12—70) | சனிக்கிழமை | இதழ் 303


# சுவாமி சிதானந்தஜி மகராஜ் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

## பலாலியில் அமோக வரவேற்பு

### திவ்ய ஜீவன ஆச்சிரமத்தில் சுவாமி சிவானந்தருக்குச் சிலை

— எஸ் கே காசிலிங்கம் —

**இன்று காலை 8-45 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கும், திவ்விய ஜீவன சங்கத்தலைவர் ஸ்ரீ சுவாமி சிதானந்தஜி மகராஜ் அவர்களுக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. சுவாமி சிதானந்தஜி மூன்றுநாட்கள் இங்கு தங்கியிருந்து அருளுரை வழங்குவார். இன்று காலை 10 மணிக்கு நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்கஆச்சிரமத்தை அவர் திறந்து வைக்கிறார்.**



ரிஷிகேசத்து தவமுனிவரும் திவ்வியஜீவன சங்கத்தின் ஸ்தாபகருமான ஜகத்குரு ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி மஹராஜ்அவர்கள் சமாதியடைந்த பின்னர், திவ்விய ஜீவன சங்கத்தலைவராக ஸ்ரீ சுவாமிசிதானந்தஜி விளங்குகிறார்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, தூரகிழக்கு நாடுகள், பிஜிதீவுகள், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், ஹொங்கொங், மலேசியா முதலிய நாடுகளில் திவ்வியஜீவனபிரசங்கங்களை நடத்திவிட்டு இமயமலைச்சாரலிலே சிவானந்த நகரிலேயுள்ள திவ்விய ஜீவன சங்கத்தலைமைக் காரியாலயத்திற்குத் திரும்பும் வழியில் இலங்கையில் சில தினங்கள் தங்கி அருளுரைகளைவழங்கும் பொருட்டு நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினார். கொழும்பில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவிட்டு சுவாமி சிதானந்தஜி இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேருவார்.

### ஆச்சிரமத் திறப்புவிழா

இன்று காலை 8-45 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் சுவாமி சிதானந்தஜி வரவேற்கப்பட்டு, அழைத்து வரப்படுவார். நல்லூர் சட்டநாதர் கோவிலுக்குஅண்மையில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம்திவ்வியஜீவன சங்க ஆச்சிரமத்தை இன்று

(16-ம் பக்கம் பார்க்க)

# "கலாசார மறுமலர்ச்சியே சோசலிசத்தைஉருவாக்கும்"

## பரிசளிப்பு விழாவில் பிரதமர்

கோட்டை, வெள்ளி

"கலாசார மறுமலர்ச்சியின் மூலமே சோஷலிஸ திட்டத்தை அமுலாக்கும் புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்கலாம். கலாசார மறுமலர்ச்சியின்மூலம் உருவாகும் மாற்றம் ஸ்திரமான நிலையை ஏற்படுத்தும்."

இவ்வாறு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று நடைபெற்ற இலங்கைச் சாகித்திய மண்டல பரிசளிப்பு விழாவில் கலந்துரையாற்றியபோது தெரிவித்தார்.

1969-ம் ஆண்டுக்குரிய இலக்கிய சிருஷ்டிகளுக்குப் பரிசு வழங்குவதற்காக நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதம மந்திரி பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

"சோஷலிஸ நாடுகளிற் கூட கலாசார மறுமலர்ச்சி ஏற்படாத பொழுது இலங்கையில்ஏற்பட்டுள்ளது இந்த மறுமலர்ச்சிக்கு மகாசங்கம், எழுத்தாளர்கள் மக்கள் மற்றுமுள்ளவர்கள் உதவியிருக்கிறார்கள். சோஷலிஸத்தை அமைக்க எழுத்தாளர்களும் விமர்சகர்களும் பெரும் பங்கைத் தந்துள்ளனர்.

ஒரு நாட்டை உருவாக்கும் பணியின் முக்கிய பங்கு எழுத்தாளர்களிடமே உள்ளது. இதை உத்தேசித்தே கலாசார விருத்திக்கென தனியான அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. இரத்தப்புரட்சியின்றி கலாசாரமறுமலர்ச்சியினால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். புரட்சிமூலம் மாற்றங்களை அடைந்தநாடுகளிலும் கூட கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்ட பின்பே சோஷலிஸம் அங்கு நிலைபெற்றது.

கலாசார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா பேசுகையில்எழுத்தாளர்களினதும், இலக்கியசிருஷ்டியாளர்களினதும் முன்னேற்றம் கருதி பல்வேறு திட்டங்களை தமது அமைச்சு அமுலாக்குகின்றதென தெரிவித்தார்.

# நுவரெலியாவில் வெள்ளத்துக்கு 33 பேர் பலி

நுவரெலியா, வெள்ளி

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹைபோரஸ்ட் தோட்டத்திலுள்ள பாலமொன்று உடைந்ததால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கு 5 குழந்தைகளும், 5 முதியவர்களும் பலியாகினர்.

22 பேரை வெள்ளம் அடித்துச் சென்றுள்ளதாகவும் அஞ்சப்படுகிறது. 7 வீடுகள் இந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டதாகவும் தெரிகிறது. இறந்தோரில் 13 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

# சுவாமி சிதானந்தஜி சரிதம்

ஸ்ரீராமதாஸ் சுவாமிகள் ஆனந்தாச்சிரமம் திருவிமந்திரநாதம் எழுப்பிய கண்ணன் காட்டிற்கு அருகேயுள்ள மங்களூரிலே சுவாமி சிதானந்த மகரிஜி அவர்கள், ஸ்ரீதர் என்னும் பெயருடன் பிறந்து வளர்ந்து கல்வி கற்றார். 24-7-1916-ம் ஆண்டில் குபேரக் குடும்பமொன்றில் இவர் பிறந்தார். இவரது தகப்பனார் ஸ்ரீநிவாசராவ்; தயார் பெயர் சரோஜினி.

சுவாமி சிவானந்தஜி மானிட வாழ்வின் குறிக்கோளைச் சிந்தித்து தெய்வ வழியிலே கருத்தூன்றிய தினமான 24-7-1916ல் ஸ்ரீதர் என்னும் பெயருடன் சுவாமி சிதானந்தஜீ பிறந்தார்

அன்பும், அறிவும், பணிவும் பண்பும், மாசற்ற உள்ளமும் கொண்ட ஸ்ரீதர் சிதானந்தராகி சிவானந்தருக்குப் பிறகு திவ்வியஜீவன சங்கத் தலைவரானார்.

ஸ்ரீதர் சென்னை லயோலாக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றார். தனக்கெனத் தனியாக உறையுள் அமைத்துக்கொண்டு, அதில் மகான்கள் படத்தை வைத்து நீண்டநேரம் தியானித்தார், சுற்றத்தாரையும் நண்பரையும் கூட்டிப் பரவசத்துடன் ஆன்மீக விஷயங்களைப் பேசினார். சிவானந்தர் நூல்களையும் அவர் கரைத்துக் குடித்தார் சிவானந்தரைப் போன்று சிதானந்தரும் குஷ்டரோகிகளுக்கு தொண்டுசெய்தார். ஜீவகாருண்யத்துடன் பிராணிகளுக்கு உதவினார்; ஏழை எளியவர் பசியைத் தீர்த்தார். மனம் பழுத்தது. கட்டை வெறுத்தது; வீடு புளித்தது; விடுதலை

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வழி ஆன்மீகம் வளர்க்கும் திவ்விய ஜீவன சங்க மண்டபம்

எல்லா நதிகளும் கடலையே சென்றடைகின்றன. இது பூமிசாஸ்திரம் சுட்டிக்காட்டும் உண்மை. மனிதனின் புறவிழிகளும் இதனை நிதர்சனமாகவே காண்கின்றன இதனை ஒப்ப சமயங்களும் இறுதியில் இறைவனையே சென்றடைகின்றதென்பது ஆத்மீகவாதிகள் கண்டமுடிவு.

இந்த பாரியதத்துவ அடிப்படையில் அமைக்கப்பட்டதே உலக திவ்விய ஜீவன சங்கம். உலகில் கடவுள் கொள்கையைப்பற்றி நமது கவிஞர் ஒருவர்;

''அல்லா என்பார் சில
பேர்கள்
அரியரன் என்பார் சில
பேர்கள்
வல்லான் பர மண்டலத்
தில்
வாழும் பிதா
வென்பார்கள்''

என்று பரந்த அடிப்படையில் பாடுகிறார். இந்தக் கவிதையின் உள்ளர்த்தத்தின் நிதர்சன செயலைச் செய்வது உலக திவ்வியஜீவன சங்கம்.

உலக திவ்விய ஜீவன சங்கத்தின் அங்கமாக மிளிர்வது யாழ்ப்பாண திவ்விய ஜீவன சங்கம். இதற்குரிய மணிமண்டபத்துக்கு 1961ம் ஆண்டில் அஸ்திபாரக்கல் நாட்டியவர் சுவாமி சச்சிதானந்தா அவர்கள்,

பல்லாண்டு காலம் இதன் வேலைகள் நடைபெற்றன. 1964-ம் ஆண்டில் இலங்கைக்கு விஜயஞ்செய்த சுவாமி சிதானந்தாஜி யாழ்ப்பாணத்துக்கும் தரிசனம் செய்வதற்கு வந்திருந்தார். அவ்வேளையில் இம்மண்டபம் நிறைவுறு நிலையில் இருப்பதைக் கண்டனர், அவருடைய நெஞ்சில் அது நிறைவுறவேண்டுமென்ற எண்ணம் எழுந்தமையால் அடியார்களைப் பார்த்து இம் மண்டபத்தின் திறப்பு விழாவுக்காகவே யான் இலங்கைக்கு விஜயஞ்செய்வேன் என்றார்.

அன்னாரது வாக்குப்பொன் வாக்கன்றோ. தொடர்ந்து அடியார்கள் செய்துவந்த தளராத முயற்சியின் காரணமாக ஆச்சிரம மணிமண்டபம் இன்று நிறைவெய்தியுள்ளது. இந்த நிறைந்த மணிமண்டபத்தைத்திறந்து வைப்பதற்காகவே சுவாமிஜி வருகைதரும் நாளிலேயே அகில இலங்கை திவ்விய ஜீவனசங்க மாநாடும் நடைபெறுகின்றது.



# சமசமாஜ மொழிக் கொள்கையும் இலங்கை பெற்றசுதந்திரமும்

## அரசியல் அரங்கு

1957-ம் வருடம் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை பத்திரிகைக்காரரில் மூவரை பிரிட்டனுக்கு அழைத்திருந்தது. அவர்களில் ஒருவனாக நானும் சென்றிருந்தேன். காமன்வெல்த் உறவு அமைச்சுதான் அழைத்திருந்தது. ஒருமாத காலம் நாடெல்லாம் அழைத்துச் சென்று காட்டினார்கள். லண்டனில் ஒரு நாள் பார்லிமெண்ட் சபைக்குச் சென்று கவனித்தோம். அன்று ஒரு கமிட்டி அறையில் பகல் விருந்தும் அளித்தனர் மூன்று முக்கிய பிரிட்டிஷ் கட்சிகளையும் சேர்ந்த எம். பி. மார்களும் விருந்தில் கலந்துகொண்டனர். விருந்துக்கு முன் கன்சர்வேடிவ்கட்சி எம். பி. எங்களுடன் பேசுகையில் சுடாமல் சுட்டு சில வார்த்தைகள் சொன்னார். ''போரில் வென்று இலங்கை அரசியல் சுதந்திரம் பெறவில்லை. நாங்களே விரும்பி இந்த சுதந்திரத்தை உங்களுக்கு அளித்தோம்........'' என்ற பொருள்படப் பேசினார்.

உண்மைதானே. 'சர்வ வல்லமை பொருந்திய பிரிட்டனுடன் போர்செய்து நாம் இந்த அரசியல் சுதந்திரத்தைப் பெற்றிருக்க முடியுமா? உலக சரித்திரமே காணாத ஒரு அதிசயமாக இலங்கையிலுள்ள நாம் திடீரென சுதந்திரம் பெற்றோம். இதற்காக பிரிட்டனுக்கு நன்றிதெரிவித்து, ''பார்லிமெண்ட் ஜனநாயகமென்பது எங்களுக்குப் புதிது. பல தவறுகள் செய்யப்படலாம். இந்த அரசியல்முறையில் அனுபவமிக்க பிரிட்டிஷ் பார்லிமெண்ட் பிரதிநிதிகள் அடிக்கடி இலங்கைக்கு வந்து தங்கள் யோசனைகளைக் கூறி உதவ வேண்டுமென்றும் அமைதியான முறையில் விடுதலைபெற்ற இலங்கையின் அபிமானமும் நல்லெண்ணமும் பிரிட்டனுக்கு இருக்குமென்றும் பத்திரிகைக்காரர் சார்பாக பதில் அளிக்கப்பட்டது.

சென்ற வாரம் இலங்கை காமன்வெல்த் பார்லிமெண்ட் சங்கக் கிளையின் அழைப்புக்கிணங்க பிரிட்டனிலிருந்து பார்லிமெண்ட் பிரதிநிதிகள் நம் இலங்கைக்கு விஜயம்செய்ததைக் கண்டதும் அந்தப் பழைய நினைப்புகள் வந்தன. காமன்வெல்த் பார்லிமெண்ட் மகாநாடுகளுக்கு இலங்கையிலிருந்துதொடர்ந்து நமது பிரதிநிதிகள் பலர் செல்லுகின்றனர். பார்லிமெண்ட் ஜனநாயகமுறை பற்றி அங்கு விவாதங்கள் நடைபெறுகின்றன. இக் குடும்பத்தைச் சேர்ந்த பல நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கு கூடுகின்றனர். குடியரசுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் காமன்வெல்த் குடும்பத்திலிருந்தே வருகின்றன. இலங்கையும் சுதந்திரமடைந்து 23 வருடங்களாகியும், இந்த உறவை துண்டிக்கவில்லை. இலங்கை குடியரசானாலும் கூட இந்த உறவு அநேகமாக நீடிக்கக்கூடும். பிரதமர் ஸ்ரீமா தமது புதல்வரையும் புதல்வியையும் பிரிட்டனுக்கே அனுப்பி படிக்கவைப்பதும் குறிப்பிடத்தக்கது. அமைதியான முறையில் தானாக சுதந்திரமளித்த பிரிட்டனுடன் பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் தொடர்ந்து வாழவேண்டுமென்றே இலங்கையும் விரும்புவது இயற்கை.

12 நாட்களாக இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்த 4 பிரிட்டிஷ் எம். பி. மார்களும் பிரதமர் ஸ்ரீமாவை சந்தித்துப் பேசியபோது ''இலங்கையில் பார்லிமெண்ட் ஜனநாயகத்துக்கு ஆபத்து இல்லை'' என்று பிரதமர் கூறியது தங்களுக்கு நம்பிக்கை அளித்ததாக அவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால் தொழிற்கட்சி எம். பி யான ஹாமில்டன், இலங்கை போன்ற நாடுகளுக்கு வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியான அரசாங்க முறையை [illegible] செய்துவிட்டதாகவே கருதுகின்றார். தங்கள் தேவைக்கான முறையில் ஓர் அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதே இலங்கை போன்ற நாடுகளுக்கு விரும்பத்தக்கதென்றும் தெரிவித்தார். இவ்விஷயத்தில் தாங்கள் ஒரு தவறுசெய்து விட்டதாக அவர் கூறியதற்குக் காரணம் இருக்கத்தான் வேண்டும். அக் கோஷ்டியினர் இங்கு தங்கியிருக்கையில் தமிழரசுக் கட்சித் தலைவரை சந்தித்தார்களா? மொழிப்பிரச்னை வகுப்புக்கலகம் முதலியவை அவர்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது.

**— பராசரன் —**

தவறுகள் செய்யவும் உரிமை இருப்பதுதான், உண்மையான சுதந்திரத்துக்கு அடையாளம் என்பார் மகாத்மாகாந்தி. ஆனால் செய்த தவறுகளை உணர்ந்தபின், அவற்றைத் திருத்திக்கொள்வதே அறிவுடைமையாகும். நாம் சுதந்திரம் பெற்றபின் சென்ற 23 ஆண்டுகளில் இங்கு பல அரசியல் தவறுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனால் நாட்டின் அமைதியும், ஒற்றுமையும் குலைந்து, முன்னேற்றம் பெரிதும் தடைபட்டுள்ளது. இந்த அவல நிலையை இலங்கையின் அரசியல் நிர்ணயசபை மாற்றுமா? பிரிட்டன் செய்த பெரிய தவறை திருத்திக்கொள்ள இப்போது இலங்கைக்கு நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதைத் தக்கபடி பயன்படுத்த மேலான அரசியல் ஞானமும் தீர்க்கதரிசனமும் தேவை. சிறுபான்மைச் சமூகத்தவர்கள் பயமின்றி நிம்மதியாக வாழமுடிவதே ஜனநாயகத்தின் வெற்றிக்கு அடையாளம் என்றார் மகாத்மா. இலங்கையிலே சிறுபான்மைச் சமூகத்தினரின் இன்றைய நிலைமையை கவனிப்பவர்கள், இங்கு ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளதாகக் கூறமுடியுமா?

0 0 0

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா சென்ற வாரம் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், மொழி விஷயமாக சமசமாஜக் கட்சியின் கொள்கையும் மாறிவிட்டதென்றார். இது இந்நாட்டிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் அளிப்பதாகவுள்ளது தனிச்சிங்களச் சட்டத்தை பார்லிமெண்டிலும் வெளியிலும் பலமாக எதிர்த்தது டாக்டர் என். எம்.மும் அவரது சமசமாஜக் கட்சியும். தமிழருக்கு அநிதி செய்யப்பட்டதை அன்று உணர்ந்த டாக்டர் அவர்கள் இப்போது தமது மொழிக்கொள்கையை மாற்றவேண்டியகாரணமென்ன? ''தமிழரசுக் கட்சியும் தனிச்சிங்கள கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்ட''தாகவும் அதனால் தாங்களும் மாறியுள்ளதாகவும் சமாதானம் கூறுகின்றார் அவர்.

ஆனால் தனிச்சிங்கள சட்டத்தைத் தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்பதே தங்கள் கொள்கையென்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. விடுத்துள்ள அறிக்கையில் அறிவுறுத்துகின்றார். சாதாரணமாகப்

(16-ம் பக்கம் பார்க்க)

நத்தார் - புதுவருட
மலிவு விற்பனை
13-12-70 முதல்
போன் 7099
இலவசம்!
இலவசம்!!
இலவசம்!!!
ரூபா 50/-க்கு மேல் ஜவுளி (சேட்டுகளுக்கு இல்லை) வாங்கும் ஒவ்வொருவருக்கும் வெகுமதி வழங்கப்படும்.
31-12-70 வரை
சகலவித
சேலைவகைகள், சேட்டிங், சூட்டிங், றெடிமேட் உடுப்புகள்
மற்றும் எல்லாத் துணிவகைகளினதும் விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.
ரோலெக்ஸ்
46, மெயின் வீதி — யாழ்ப்பாணம்

யோகர் சுவாமிகள் நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

தித்திக்கும் ஒருமொழியால் எங்கள்குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தான் எங்கள் குருநாதன்
எத்திக்குமாகிநின்றான் எங்கள் குருநாதன்
எல்லாம் நீஎன்றுரைத்தான் எங்கள் குருநாதன்
வித்தின்றிராது செய்வான் எங்கள் குருநாதன்
விண்ணவரும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
தத்துவாதீதனானான் எங்கள் குருநாதன்
சகலசம்பத்தும் தந்தான் எங்கள் குருநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் நூற்றாண்டு கல்விப்பணி ஆற்றிய அதிபர் சூடாமணி ஐயர்

ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு வடமொழியும் தென்மொழியும் உலகப் பொதுமொழியாம் ஆங்கிலமும் நன்கு கற்பித்து அவர்களை நன்னிலையடையச் செய்த ஆசிரியமணிகளுள் சந்திர சூடாமணிஐயரை யாழ்ப்பாணம் என்றும் மறவாது. காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியராயும், அதிபராயும் கால் நூற்றாண்டுக்குமேல் கல்விப் பணியாற்றி, நூற்றுக்கணக்கான நற்பிரஜைகளை உருவாக்கிய செந்தண்மை பூண்டொழுகிய அந்தணச் செம்மல் சூடாமணிஐயா, இன்று எம்மிடையேஇல்லை. சென்ற நவம்பர் மாதம் 25-ந் திகதி புதன்கிழமை இரவு இறவா யாக்கைப் பெரியோன் பாதங்களை அடைந்து பிறவிப்பெருங்கடல் நீந்தும் பெரும்பேறு பெற்றார்.

## வித்துவப் பரம்பரை

இராமச்சந்திரன் என்னும் சிவசந்திர சூடாமணி அவர்கள் ஜதுராபுரியிலே1899-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ந் திகதி ஆடிப் பூரத்திலன்று ஏ. கிருஷ்ணசாமிஐயர் அவர்களுக்கும் கமலாம்பாள் அம்மையாருக்கும் சத்புத்திரராய்த் தோன்றினார்.

உயர்ந்த வித்துவ பரம்பரையைச் சேர்ந்தவராகிய இவரது பாட்டனார் அப்பு சாஸ்திரி ஆவர். இவரது பிரபிதாமகராகிய சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் மைசூர், பரோடா சமஸ்தானாதிபதிகளுக்கு ஆஸ்தான வித்துவானாக விளங்கியவர். இவர்கள் எல்லோரும் வடமொழியில் சிறந்த பாண்டித்தியம் படைத்தவர்களாக விளங்கினர்.

குடும்பத்திலே இளையோனாய்த் தோன்றிய இப்பெரியாரது முன்னோர்கள் இருவரும் சிறந்த அறிஞர்களாய் விளங்கினர். அவருள் இ. கி. சிவசுப்பிரமணிய ஐயர் பி ஏ. எல். ரி. காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபராய் விளங்கி 1929-ம் ஆண்டு சிவபதம் எய்தினார். அடுத்தமுன்னோனாகிய இ. கி. ஹாலாஸ்ய சுந்தரேச ஐயர் ஆயிரம்பிறைகண்ட சிரஞ்சீவியாய் (வயது 82) இன்றும் மலேஷியாவில் ஜீவந்தராய்விளங்குகிறார்.

## கல்விப்பேறு

ஐந்து வயதுப் பராயத்திலேயே அருமைத்தந்தையையும், பின்னர் ஈராண்டுகளுக்குப் பின்னர் அன்னையாரையும் இழந்த இராமச்சந்திரன் தன் மூத்தோனாகிய சிவசுப்பிரமணிய ஐயரவர்களின் அரவணைப்பிலேவளர்ந்தார்.



இன்று காரைநகர் இந்துக் கல்லூரியாக விளங்கும் திருஞான சம்பந்த வித்தியா சாலையிலே இவர் ஆரம்பக் கல்வி பயின்றார். அப்பொழுது திரு. சிவசுப்பிரமணிய ஐயர் அதிபராக விளங்கினார்.

பின்னர் இவர் கல்லூரிப் படிப்புக்காக இந்தியாசென்றார். இவரது பிதாவழிப் பாட்டியார் தம் பேரப்பிள்ளைகளுள் ஒருவரைத் தம் சமீபம் வைத்திருக்கவேண்டுமென்று விழைந்தமையால் இவர் லால்குடி உயர்தரப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு தானே எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையிலும் தேறினார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற்சேர்ந்து 1918-ம் ஆண்டு ஆனிமாதம் லண்டன் மெட்ரிகுலேஸன் பரீட்சையில் திறம்படச் சித்தியெய்தியதோடு திருச்சி சென்று தமது கல்வியைத் தொடர்ந்தார். அவர் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் இன்டர்மீடியேற் வகுப்பிற்சேர்ந்து பல அதிதிறமைச் சித்திகளுடன் முகலாம் பிரிவிற் தேறினார். பின்னர் அவர் அர்ச் சூசையப்பர் கல்லூரியில் பொருளியல் விசேடவகுப்பிற் சேர்ந்து 1929-ம் ஆண்டு எம் ஏ பட்டமும் பெற்றார்.

**— கு. பாலசுந்தரசர்மா —**

## ஆசிரியப் பணி

1926-ம் ஆண்டு காங்கேசன்துறையில் இன்று நடேஸ்வராக் கல்லூரியாக விளங்கும் இந்து ஆங்கில வித்தியாசாலையில் உதவி ஆசிரியராகச்சேர்ந்தார், அப்பொழுது வித்தியாலய அதிபராக விளங்கியவர் இவரது தமையனாராவர். மூன்று ஆண்டுகளின்பின் முன்னோன் தமது 49-ம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தாராக. பாடசாலைப் பொறுப்பும், முன்னோன் பிள்ளைகள் நலம் பேணும் பொறுப்பும் தியாகமே வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட எம்மாசிரியரைச் சார்ந்தன.

இலங்கையில் இலவசக் கல்வி ஏற்பட்டதன் விளைவாக கல்லூரி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கிற்று. திரு. சூடாமணி அவர்களது கண்காணிப்பில் மூன்றாந்தரப் பாடசாலையாக விளங்கிய இந்து ஆங்கில வித்தியாசாலை இரண்டாந்தரக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. அப்பொழுதுதான் நடேஸ்வரக் கல்லூரி என நாமகரணஞ் சூட்டப்பட்டது. படிப்படியாக விஞ்ஞானகூடம், நூல் நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டன. பௌதிகம், இரசாயனம் என்பன போதிப்பதற்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்களும் வரவழைக்கப்பட்டனர். இவரது பெருமுயற்சி காரணமாக ஆசிரியர்கள் 'டென்னிஸ்' அரங்கும் கொங்கிறிட்டினால் அமைத்தனர். இங்ஙனம் பல்வேறுதுறைகளிலும் முன்னேற்றம் கண்ட கல்லூரி முதலாந்தரத்துயர்த்தப்படும் நிலையை அணுகிய போது உடல் நலக்குறைவு காரணமாக அவர் 1950-ம் ஆண்டு தமது 51வது வயதில் இளைப்பாற வேண்டியவரானார். இன்று எத்தனையோ கல்லூரிகளில் அதிபர் பதவிகளிலிருந்து இளைப்பாறுவோரும் உயர் பதவிகளிலிருப்போரும் இவர் நன்னெறிப்படுத்திய சிஷ்யகோடிகளேயாவர்.

இப்பெரியார் மகாத்மா காந்தி சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ணர், இரமணரிஷி, ஆசார்ய சுவாமிகள் முதலிய ஞானிகளது பொன்மொழிகளைச் சிரமேற்கொண்டு ஒழுகுபவர். அந்தணனாகப் பிறந்தவன் ஒரு வேளையாவது காயத்ரியை ஜெபிக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். போதனையின்படியே சாதனையையும் கொண்டிருந்தார். தமது ஓய்வு நேரங்களை அறிவுக்குரிய நூல்களை வாசிப்பதிலும் ஆசார்ய சுவாமிகளைப் பற்றிக் கலந்துரையாடலிலுமே செலவிடுவார். வேதாந்தமோ விஞ்ஞானமோ எதுவாயினும் சரளமாக விவாதிப்பதில் ஆற்றல் மிக்கவர். மிக இளமைப் பருவத்திலேயே அவரிடத்து விளங்கிய ஆத்ம சிந்தனை இவரை வாணாள் முழுவதும் நைட்டிகப் பிரமசாரியாக ஒழுகவும் வாழவும் உதவியது.

இவர் மிகவும் இளகிய உள்ளம் படைத்தவர். பிறர் துன்பம் காணச் சகியார். நேருவைப்போலவே தம்மைச் சூழ்ந்து குழந்தைகள் இருக்கவேண்டும் என்று விரும்புபவர். இறக்கும் நாள்வரை அண்டை அயலிலுள்ள பள்ளிச் சிறுவர்களை தம்பாலழைத்து அவர்க்கு நலலறிவுச்சுடர் கொளுத்தியவண்ணமிருந்தார்,

## தபோபலமிக்கவர்

இவரது வாழ்வு உண்மையில் தெய்வீகமுடையது என்றே கூறவேண்டும் இவர் தம் தபோபலத்தினால் எவ்வித மரணாவஸ்தையுமின்றி இறைவன் பாதத்தையடைந்தார். கடைசி மூச்சிருக்கும் வரை 'தன்கைவே தனக்குதவி' என வாழ்ந்து காட்டிய உத்தமர், 1970-ம் ஆண்டு நவம்பர்மாதம் 25ந்திகதி இரவு 7.15மணிக்கு வழமை போல் நூல்கள் வாசித்துக் கொண்டிருந்தவர் திடீரென நாற்காலியிலே சமாதியானார். அவ்வளவுதான் 7:25 க்கு அவரது ஆத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்தது.

# விளையாட்டு வீரர்கள் கிழவராவதில்லை

'ஒன் யுவர் மார்க்ஸ்'

நல்ல சிவந்த பையன்-உருண்டு திரண்ட உருவம் கவர்ச்சியான தோற்றம், மெதுவாக நடந்து ஆரம்பக் கோட்டில் கால் மடித்து உதை கொடுத்து கைகளை ஊன்றுகிறது.

'கெட் செட்'

உடல் நிமிருகிறது.

'டுமீல்'

புள்ளாய்ப் பறக்கிறது. முடிவு நாடாவை மின்னலாய்த் தாண்டிச் செல்கிறது. கைதட்டல், ஆரவாரம். 'கம் ஒன் தியாகு' என்று கத்திய வாய்கள் 'வெல்டன்' என்று ஓலமிடுகின்றன. சற்றே இளைத்தபடி விளையாட்டுவீரர் கூடாரத்துக்கு திரும்பிச் செல்கிறது, இன்னும் அரைமணி நேரத்தில் மறு ஓட்டம் (ஹெர்டில்ஸ்) இது நடந்தது பரியோவான் கல்லூரியில்.



ஆண்டு 1927- அன்று தொடங்கி இடைவிடாத ஓட்டமும் ஆட்டமும் தான். கிரிக்கட், உதைபந்தாட்டம் எல்லாவற்றிலும் மன்னன் மேதாவி தான். அன்று புடமிடப்பட்ட பொன் துலங்க ஆரம்பித்தது. இன்றும் ஒளி குன்றவில்லை தேஜஸ் மங்கவில்லை.

அறுபதாவது வயதில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராய் முப்பத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றி இன்று ஓய்வுபெறும் திரு பொன்னம்பலம் தியாகராஜாதான் இந்தத் தங்கம், இந்தமுப்பத்திரண்டு ஆண்டுகளில் பதினேழு தடவை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உதைபந்தாட்ட முதலிடத்தை ஈட்டியது என்றால் அதைப் பார்த்து எல்லா விளையாட்டு ஆசிரியர்களும் பொறாமைப்படவேண்டியது தான்.

பரியோவான் கல்லூரியில் ஒநாய்க்குருளை, சாரணர் படைபயில் குழுவில் உயர் பதவி இவையெல்லாம் இவரையோர் பண்பட்ட மனிதராய் வளர்த்து விட்டன. அதன்பேற்றை அனுபவிக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கே கிடைத்தது. இங்கு வருவதற்குமுன் நான்காண்டுகள் தான் கற்ற கல்விக்கூட விளையாட்டுப் பயிற்சிக்கு ஊதியமற்ற ஊழியமும் செய்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கம், யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம், யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். பத்து ஆண்டுகள் இந்துக்கல்லூரியின் படைபயில் குழுவுக்குப் பொறுப்பாளராக இருந்திருக்கிறார். இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதியாக பல்லாண்டுகள் இருந்திருக்கிறார். அந்நிய உதைபந்தாட்டக் குழுவொன்று யாழ்ப்பாணத்தில் வந்து ஆடக் கிடைத்தது, திரு. தியாகராசா யழ்ப்பாண உதைபந்தாட்ட சங்க செயலாளராய் இருந்தபோது தான். அதற்கு முன் விருந்தினர் கோஷ்டிகளால் அலட்சியப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்துக்கு பலங்கொண்ட சென்னைக் கோஷ்டி வருகை தந்தது,

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆரம்பிக்க முன்னர் அடிதடி சண்டை அமளி எதுவுமில்லாமல் ஆட்டங்களைக் கண்காணித்த பெருமைபெறும் சிலருள் தியாகராசா ஒருவர். நேர்மை, கண்ணியம், திறமை, நுணுக்க அறிவு எல்லாம் படைத்த ஒருவர் நடுவராகக் கடமையாற்றுகிறார் என்றநம்பிக்கையும் நிம்மதியும் பொதுமக்களுக்கு இருந்தது.

மலேசியா சென்ற இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் பார்வையாளராகவும் தென்னிந்தியா சென்ற யாழ்ப்பாண மாணவர் கிரிக்கட் கோஷ்டியுடன் முகாமையாளராகவும், பயிற்சியளிப்பவராகவும், தென்கிழக்காசியாவில் பிரசித்தி பெற்ற குவாலாலம்பூர் மேர்டேகா (சுதந்திர) விளையாட்டு திறப்பு விழாவுக்கு பார்வையாளராகவும் சென்றிருக்கிறார்.

இலங்கையின் பிரதேச கிரிக்கட் போட்டி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணக் கோஷ்டியின் பயிற்சியளிப்பவராகவும் முகாமையாளராகவும் இருந்து வருகிறார். சென்றமாதம் மலை நாடு சென்ற மாணவர் உதைபந்தாட்டக்கோஷ்டியின் முகாமையாளரும் இவரே.

இவர் பதவியேற்ற ஆண்டிலதான் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி சொந்தமான விளையாட்டு மைதானமொன்றை அயலில் பெற்றது. 32 விளையாட்டுப் போட்டிகளை அம்மைதானத்தில் நடாத்திய இவரைக் கௌரவிக்கும் முகமாக அங்குள்ள பார்வையாளர் பந்தலை 'தியாகராசா பந்தல்' என்று பெயரிட வேண்டுமென்ற பலரின் விருப்பத்தை உரிய அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

அவர் தனக்களிக்கப்பட்ட ஒரு பிரியாவிடையில் கூறிய இரண்டு வாசகங்கள்-

'அன்பினால் அன்பைவளர்க்கலாம்'

'விளையாட்டு வீரர்கள் கிழவராவதில்லை.'

-தேவன் யாழ்ப்பாணம்

## விரல்வழி விளக்கம்

மகாத்மா காந்தி கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்யும்போது இத்தகைய உத்தி ஒன்றைக் கையாளுவார். தமது இடதுகையை உயர்த்திக் கொள்வார். பின்பு தமது வலதுகையின் ஆள்காட்டிவிரலைக்கொண்டு இப்படி வரிசையாகச் சொல்லிச் சேர்ப்பார். 'இது தீண்டாதாருக்குச் சம உரிமை வழங்குதல், இது நூற்றல். இது-இந்து-முஸ்லிம் நட்பு, இது பெண்டிர்க்குச் சம உரிமை வழங்குதல். தவிர மணிக்கட்டு அஹிம்சையைக் குறிக்கிறது' என்று விளக்குவாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கிறீஸ்தவர் பாப்பரசரைத் தரிசிக்க காலாயமைந்த தோமையார்

## இன்று திருநாள் ஆரம்பம்

**லாசரஸ் தம்பு**

உண்மை எங்கே? நானே உண்மை, நானே வழி, நானே ஒளி, நானே வாழ்வு'' என்கிறார் இயேசு பெருமான். தன்னை வெளிப்படுத்தவே கிறிஸ்து பிறந்தார்.

இயேசு பிறந்து. இவ்வுலகில் உபதேசித்தார், அற்புதங்கள் பல செய்தார். ஜனத்திரள் அவரைப் பின் சென்றது. ஆனால் அவர் ஸ்தாபித்த சபையின் அத்திபாரம் உபதேசமும், அற்புதமும் அல்ல, 'கிறீஸ்துவே அதன் அத்திபாரம். கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்'. ஆகவே தாம் உலகத்தை விட்டுப் பரலோகத்திற்குப் போகும் வேளை சமீபித்த போது தம்மைத் தாம்தமக்கு அப்போஸ்தலர்கள் பன்னிருவருக்கும் பிரசங்கிக்கத் தொடங்கினர்.

விசேஷமாக தமது அப்போஸ்தலரோடு தனித்திருந்து தம்மைப்பற்றித் தமக்குப் பின்னால் பிரசங்கிக்கும் பொருட்டு முழு இரகசியங்களையும் அவர்களுக்குப் படிப்பிக்கலானார். ஆகவே பிலிப்பு செசெரியாவில் தம் பன்னிரு அப்போஸ்தலர்கள் தம்மைச் சரிவர அறிந்து கொண்டுள்ளார்களா வென்று அறியும் பொருட்டு அவர்களை நோக்கி ''என்னை யாரென்று சொல்லுகின்றீர்கள்'' எனக் கேட்டார்.


அதற்குப் பன்னிருவரின் பேரால் பேதுரு பிரதியுத்தரமாக, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றார். அதற்கு மறுமொழியாக கிறிஸ்து ''யோவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். உன் சுய அறிவினால் இதை நீ அறிந்துகொள்ளவில்லை. பரலோகத்திலுள்ள என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்று கூறினார்.

இக்கருத்துப்படவே புனித சின்னப்பரும் எபிசியருக்குச் சொல்லுகின்றார். ''நீங்கள் இனி அந்நியரும், பரதேசியுமாய் இராமல் பரிசுத்தவான்களுடைய நகரத்தாரும், சர்வேசுரனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர்கள். தீர்க்கதரிசிகள் எனப்பட்ட அத்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள். அதற்குகிறிஸ்துநாதர்தாமே ஆதி மூலக்கல்லாய் இருக்கிறார்.''

இப் பரிசுத்த குடும்பத்தில் தேவதிருவுளப்படி எங்களை அதாவது கீழ்த்திசையோரை பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவரான சந்தோமையாரே இணைத்து வைத்திருக்கிறார். எனவே இவரே எமக்கு ஞானப்பிதாவாக இருக்கிறார். இவராலேயே நாங்கள் அதாவது இலங்கை, இந்தியாவிலுள்ளோர் கிறீஸ்துவில் இணைக்கப்பட்டோம். அண்மையில் 6-ம் சின்னப்ப பாப்பரசராக நம்மை தரிசித்துப் போவதற்கு வழிகோலியவர் இவரே. ஆகவே இவரின் சீவிய வரலாறு அறிந்து அவரை நேசித்துப் போற்றிப் புகழ்வது எங்கள் கடமையென உணர்ந்தே

தேசத்திலுள்ள கலிலேயா நாட்டில் பிறந்து மீன்பிடிக்கும் தொழிலைச் செய்துவருகையில், அந்த நாளில் உலகத்தில் சஞ்சரித்த இயேசுநாதருடைய புதுமைகளைக் கேட்டு இயேசுநாதர் மெய்யாகவே உலகத்தை இரட்சிப்பவர் என்று விசுவசித்து, கர்த்தர் பிறந்த 31-ம் ஆண்டில் கர்த்தரிடத்தில் சீடராகச் சேர்ந்தார் அவரின் நல்ல மனதைக் கண்ட கிறிஸ்துநாதர் அவரைத் தம் பன்னிரு அப்போஸ்தவர்களில் ஒருவராகத் தெரிந்து கொண்டார்.

கிறிஸ்துநாதர் நேசித்த



எங்கள் முதியோர் எங்கள் நாட்டிலும் பல தேவாலயங்கள் புனிததோமையார் பேரால் கட்டியிருக்கின்றார்கள் இத் தேவாலயங்களில் பல பக்தர்கள் இன்று மார்கழி 12ந் திகதி நவதின ஆராதனைகளைத் தொடங்குகிறார்கள். இவைகளில் மிக அழகானதும் நூறு வருடங்களுக்கு மேற்பட்டதுமான ஓர் ஆலயம் மாதகலில் இருக்கிறது. அதிலுள்ள தோமையர் திருவுருவமே இங்கு படத்தில் காணப்படுகிறது.

சந்தோமையார் பலஸ்தீன்

லாசர் மரித்த சமயம் யூதேயா நாட்டுக்கு கிறிஸ்து போகச் சித்தமானபோது இதை இவரின் அப்போஸ்தலர்கள் அறிந்து, ''யூதர் இவரைக் கொல்லத் தேடுகின்றார்கள். கொஞ்ச நாளைக்குமுன் ஒரு விசைதேவரீரை கல்லால் எறிந்து கொல்லத் தேடியிருக்கையில் அங்கே அவர் மறுபடிபோகிறதெங்ஙனம்' என்றார்கள். அவர்கள் அப்படிச் சொன்னாலும் அங்கே போக இயேசுநாதர் சித்தமாய் இருப்பதை அர்ச். தோமையார் கண்டு மற்றச் சீடர்களைப் பார்த்து

''சுவாமியோடு கூட நாமும் போக வேண்டும். பிராணனைக் கொடுக்க வேண்டியிருந்ததால் அவரோடு நாமும் சாவோம்'' என்றார்.

பின்னுங் கர்த்தர் மரணத்தை அடைவதற்கு முந்தினநாள் இரவு இயேசுநாதர் சீடர்களைப் பார்த்து ''நாம் போகிற ஸ்தலத்திற்கு வழி உங்களுக்குத் தெரியுமோ'' என்றார். அதற்கு அர்ச், தோமையார் ''தேவரீர் போகிற ஸ்தலம் இன்னதென்றுநாங்கள் அறியாதிருக்கையில் அதிற் சேருகிற வழி எப்படி அறிந்திருப்போம்'' என்றார், அதற்கு இயேசு நாதர் ''தாம் வழியும் சத்தியமும் சீவனுமாய் இருக்கிறோம். நமது மூலமாய் நம்முடைய பிதாவினிடத்தில் சேரலாமொழிய வேறு வழியாய் ஒருவருஞ் சேரமாட்டார்கள்'' என்றார். திவ்விய கர்த்தருடைய பாடுகள் முகாந்திரமாக அர்ச். தோமையார் வெகுகஸ்தி அனுபவித்தாலும் இயேசுநாதர் உயிர்த்தெழுகின்ற சந்தோஷம் எப்போது வருமென்று காத்திருந்தார். ஆனால் அவர் மற்ற அப்போஸ்தலர்களோடு கூட இல்லாத சமயத்தில் கர்த்தர் அவர்களுக்குக் காண்பித்த சேதியைத் தோமையாரிடம் அவர்கள் சொன்னபோது தோமையார் ''ஆணிகள் உருவிய அவருடையகைகளை நான் காணாமலும், ஆணிகளால் உண்டான காயத்தில் நான் விரலை வையாமலும், அவருடைய திருவிலாவின் காயத்தில் என்னுடைய கையை வையாமலும் அவர்உயிரோடு எழுந்திருக்கிறாரென்று நான் விசுவசிக்கமாட்டேன்'' என்றார். எட்டு நாளைக்குப் பின்பும் அவரும் மற்றச் சீடர்களுங் கூடி இருக்கிற சமயத்தில் இயேசுநாதர் அவர்கள் நடுவில் எழுந்தருளி வந்தார். அப்போது கர்த்தர் தோமையாரைப் பார்த்து 'நாம் மெய்யாகவே எழுந்தருளினோம் என்று நீ விசுவசிக்கத்தக்கதாக ஆணிகள் உருவிய நம்முடைய கைகளைப் பார். அவைகளிலேயிருக்கிற காயத்தில் உன்னுடைய விரலை வை; உன் கரத்தையும் நீட்டி நமது விலாவில் வை; நீ அவிவிசுவாசமாயிராமல் விசுவாசமாய் இரு'வென்றார். தோமையார் அப்படிச் செய்து ஆண்டவருடைய திருக்காயங்களையும் கண்டு அவர் திருவுளம்பற்றின வார்த்தையையும் கேட்டு வந்திருக்கிறவர் மெய்யாகவே யேசுநாதர்தாமென்று விசுவசித்து முன்னமே தமக்கு வந்த விசுவாசக் குறைக்கு உத்தம மனஸ்தாபப்பட்டு அழுதுகொண்டு ஆண்டவருடைய திருப்பாதத்தில் விழுந்து 'என்னாண்டவரே, என் சருவேசுவரா' என்றார். அதற்கு கர்த்தர் 'நீ நம்மைக் கண்ணால் கண்டதினால் விசுவசித்தாயே, காணாமல் விசுவசிக்கிறவர்கள் பாக்கியமுள்ளவர்கள்' என்றார். அந்தப் புத்தியெல்லாம் தோமையார் மனதில் வைத்துக் கொண்டு சம்பூரண விசுவாசம் அடைந்து சாகுமட்டும் அதன்படியே நடந்தார்.

கர்த்தர் பரலோகத்திற்கு எழுந்தருளியபிறகு பரிசுத்த ஆவியானவர் சீடர்கள் பேரில் இறங்கிய போது தோமையார் மற்ற அப்போஸ்தலரோடு தேவவரப் பிரசாதங்களினால் நிறையப் பெற்று ஜெருசலம் நகரத்திலும் யூதேயா தேசத்திலும் கிறிஸ்து வேதத்தைப் போதிக்கத் தொடங்கினார். மற்ற அப்போஸ்தலர் உலகத்திலுள்ள வெவ்வேறு இராச்சியத்துக்குப் போகிறபோது இந்தியா தேசத்திற்கு தோமையார் நியமிக்கப்பட்டார். அவர் வருகிறபோது குழந்தை யேசுநாதரை முன்னிட்டியில் வணங்கிய மூன்று அரசர்களை அவர் கண்டு அவர்களால் நேசிக்கப்பட்ட யேசுநாதரிடத்தில் நடந்த வர்த்தமானங்கள் எல்லாம் அவர்களுக்கு வெளிப்படுத்தி உபதேசமெல்லாம்சொன்ன பிற்பாடு அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து கிறிஸ்து வேதத்தைப் போதிக்கிற திருத்தொழில் அவர்களைத் தம்மோடு கூடச் சேர்த்துக் கொண்டார். இதனன்றி தோமையார் யேசுநாதருடைய எழுபத்திரண்டு சீடர்களுள் தம்மோடு கூடவந்த ததேயூ என்கின்றவரை அனுப்பி மொசப்பெத்தேமியாவில் எதெஸ்லா என்கின்ற பட்டணத்தின் அரசனாகிய அப்காரென்கிறவனுடைய வியாதியை நீக்கி அவனுக்கு ஞானஸ்தானம் கொடுப்பித்தார். பிறகு தோமையார் எதியோப்பியா, அபிசீனியா, பேர்சியா, அர்மேனியா, இர்க்கானியா, பக்திரியானா மற்றும் பெரிய இராச்சியமான சீனா தேசத்திற்கும் போய் கிறிஸ்து வேதத்தைப் பிரகாசிக்கச் செய்தார்.

இலங்கைத் தீவிற்கும் சொக்கொத்தோரா வென்கின்ற தீவுக்கும் போன பிற்பாடு மலையாள இராச்சியத்துக்குப் போய் அதில் அநேக கிறிஸ்தவர்களை ஆக்கினார். பின் அவர் கந்தரம், காபூல், கப்பரிஸ்தான், கஷ்கார், திபெத், வங்காளம், நரசிங்கம்,சோழமண்டலம்,

(15-ம் பக்கம் பார்க்க)

இங்கிலாந்தில்

## இரு துறைக்குத் தெரிவான யாழ். மாணவர்



திரு. ரி. சரவணபவன் (21 வயது) இங்கிலாந்தில் சுவான் சீ பல்கலைக் கழகக் கல்லூரியில் நுண் உயிர்க் கலைக்கும் இரசாயன என்ஜினியரிங் துறைக்கும் விசேட பட்டப்படிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யோக்ஷயர் ஹடர்ஸ் பீல்ட் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த இவர் இரு துறைகளில் ஏககாலத்தில் விசேட படிப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவராவார். இவ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென் யோன்ஸ் கல்லூரி, ஆகியவற்றின் பழைய மாணவராவார். சுன்னாகம் மின்நிலையத்தைச் சேர்ந்த திரு. வி. ரி. சம்பந்தரின் ஒரே புதல்வர் இவர்.

30 வருட காலம் தங்கள் சேவையைத்
திறம்படச் செய்து கொண்டிருக்கும்
சன்லைற் றைக்கிளீனேர்ஸ் - சாயி றைக்கிளீனேர்ஸ்
ஸ்தாபனங்களை மறந்து விடாதீர்கள்!

தங்களுக்கு நாங்கள் செய்யும் சேவை:

* பட்டு உடைகளைத் தண்ணீரில் போடாது யந்திர மூலம் றைக்கிளீன் செய்வதிலும்,
* கேட்கும் நேரம் தவணை தவறாது கொடுப்பதிலும்,
* தூர இடங்களில் உள்ளவர்களுக்கு பார்சல் மூலம் அனுப்பி வைப்பதிலும்,

வட இலங்கையில் முதன்மை வகிப்பவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்!

சன்லைற் றைக்கிளீனேர்ஸ்,
பஸ் நிலையப் பக்கம், பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 474. தந்தி: றைக்கிளீன்.

எங்கள் கிளை ஸ்தாபனம்:-
சாயி றைக்கிளீனேர்ஸ்,
வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசித் தொடர்பு: 474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "சருகு தளிர்த்தது"

ஆரையம்பதி ஆ. தங்கராசா

இரண்டு வருடங்கள் 'ஆசிரிய கலாசாலைக்குள்' வாழ்க்கையை இன்பமாக களித்துவிட்டு முதன் முதலாக பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியனாக அவன் அந்த ஊர்ப்பாடசாலைக்கு வந்தான்.

ஆசிரியராக அந்த ஊருக்கு அவன் வருவதற்குமுன்பு அவனுக்கு அந்த ஊரைப் பற்றி எதுவுமே தெரியாது, இருபத்தியாறு வயது இளைஞனான அவன், புதிய உணர்ச்சிகளைத்தன் இதயத்தில் நிரப்பியவனாக வலிவான உறுதியோடும் தொண்டு செய்யும் உயர்ந்த நோக்குடனும் அந்த ஊர்ப்பாடசாலையில் படிப்பிக்க வந்தான்.

அந்த ஊர் ஒன்றும் பெரிய ஊரல்ல. சின்னஞ்சிறிய ஊர்தான். இருந்தபோதிலும் அதனது பொருளாதார உயர்வு மட்டக்களப்புப் பகுதியிலேயே அதனைச் சிறந்த உயர்ந்த கிராமமாகக்காட்டியது, கிராமத்தைச் சுற்றிலும் பரந்தநெல்வயல்கள். அருகில் தாமரை பூத்துக்குலுங்கும் அழகிய குளம். ஊரைவளைத்துப் பெரிய காடுகளும் சிறியமலைக்குன்றுகளும் அரண்களாக இருந்தன. அவை ஊருக்கு அழகையும் கொடுத்தன. ஊரின் மத்தியில் எப்பொழுதோ எவராலோ கட்டப்பட்ட பழைய சிவன்கோயில். நாகரீக வாடை சற்றும் புகுந்துகொள்ளாத பழமைக் கிராமம்.

இவைகளைத் தள்ளிவிட்டு மனிதர்கள் வாழும் ஊர் மனைப்பக்கம் வந்தால் நம் கண்களுக்குத்தட்டுப்படுவது மொத்தமாகஐம்பதுவீடுகள் இவற்றில் நாலைந்துவீடுகள் தள்ளி பெரிய அழகான கல்வீடுகளுள்ளனஒவ்வொருவீடுகளிலும் காணப்பட்ட நெற்குவிந்த பட்டறைகள் கண்களின் பார்வைக்கு அழகைத் தந்ததோடு அந்தக் கிராமத்தின் பொருளாதார வளர்ச்சியை மற்றவர்களுக்கு எடுத்தும் காட்டின. தென்னை, மா, பலா போன்ற மரங்கள் ஊரெங்கும் நிறைந்து கிடப்பது அந்தஊருக்குப் பசுமையைக் கொடுப்பதோடு உயர்ந்த பொலிவையும் அளித்தது.

அந்த ஐம்பது வீடுகளுக்கும் பெரிய வீடு மதிப்பு வாய்ந்த வீடு சின்னத்தம்பிப் போடியாரின் வீடுதான். இந்த வீட்டின் ஓர் அறையில்தான் நல்லதம்பியும் அவனோடுபடிப்பிக்கும்ஆரையம்பதி வேல்முருகும் குடிவந்தார்கள். அந்த அழகிய கிராமம் நல்லதம்பியின் மனத்தை வெகுவாகக் கவர்ந்துவிட்டது, கரிய யானைகள் போல் தோற்றமளிக்கும் மலைக்குன்றுகளின் அழகு பச்சைப்பசேலென காட்சியளிக்கும் பசும் வயல்களின் நாற்றிலிருந்து புறப்படும் இன்பத்தென்றல், கழனிகளில் வேலைசெய்யும் கிராமத்துக் கன்னியர்களின் தெய்வீக அழகு சூடுபோடும் பொழுதும் பொலிதூவும் பொழுதும் பாடி மகிழும் கிராமியப் பாடல்கள், தாமரை பூத்துக் குலுங்கும் எழில்குளம், கிராமிய மணங்கமழும் கொச்சை வாழ்வு, இத்தனையும் அந்தக் கிராமத்தில் இருந்ததால் அந்தக் கிராமம் நன்கு பிடித்துவிட்டது நல்லதம்பிக்கு.

மாலைவேளைகளில் ஊரின் வெளிக்காட்சிகளை ரசிப்பதற்காக நல்லதம்பி தனியாகக் கிளம்பிவிடுவான். காட்சிகளைக் கண்களிற் தேக்கி உணர்ச்சிகளைக் கனவுகளாக மாற்றி ஊரின் வீதிகளால் ஒருநாள் நடந்துசெல்லும் போது ஊர்முகங்களெல்லாம் அவனையே குறிப்பாகப் பார்ப்பதை அவன் பார்த்தும் பாராதவனுமாய்த்தன் பார்வையை எங்கையோ விட்டுவந்தவன்; அந்த முகத்தைக்கண்டான்.

அந்த முகம் ஓர் அழகிய பெண்ணின் முகம்.

அவள் பெயர் தங்கம்.

அவள் அந்த ஊர் மக்களாலேஒதுக்கிவைக்கப்பட்ட பொன்னம்மாவின் ஒரே மகள்,

பெரும்பாலும்மாலைவேளைகளில் அந்த வீட்டு முற்றத்தில்நின்றுகொண்டிருப்பாள் வீதியால் நடந்துபோகின்றவர்களுக்கு அவளது அழகிய தோற்றம் பட்டவர்த்தனமாகத் தெரியும். நல்லதம்பி பலநாள் அந்த வீதியால் போயிருக்கிறான். ஒருநாளாவது அந்தவீட்டுப் பக்கம் திரும்பவுமில்லை, அவளது அழகிய முகத்தைப் பார்க்கவுமில்லை. இன்றோ தற்செயலாகப் பார்க்கநேர்ந்தது.

அவளது அழகிய முகம் நல்லதம்பியின் மனத்தில் வந்துமோத எதுசெய்வதென்று தெரியாத ஒருவித மயக்கநிலையில் முதல்நாளைப் போக்கிய அவன் பின்புதான் அவளையும், அவளது வாழ்க்கையையும் மறைமுகமாக ஆராயத் துணிந்தான். அவனது ஆராய்ச்சியில் அவனுக்குக் கிடைத்தவிடை, அவள் ஊர்மக்களாலேயே ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருத்தியின் மகள், அந்தக் கவிதை மலருக்கு முப்பது வயதுக்குக் குறையாமலிருக்குமாம். ஒதுக்கி வைக்கப்பட்டவளின் மகளென்றபடியால் யாருமே அவ்வீட்டுக்கு இதுவரை பெண்கேட்டுப் போனதில்லையாம். அந்த ஊர் மக்கள் அவர்களை ஒதுக்கித் தனிக் குடும்பம்போல் ஆக்கிவிட்டார்கள், ஆனாலும் அந்த இரு ஜீவன்களும் மாண்டு மடிந்துபோய்விடாமல் ஒதுங்கியிருந்து தங்களைச்சுற்றி நடப்பதைக் கண்டும் கேட்டும் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவ் விபரங்களை நன்கு அறிமுகமான சிலரிடம் ரகசியமாகக் கேட்டறிந்த நல்லதம்பி மனம்வருந்தினான். அவளது களங்கமற்ற அழகு சபிக்கப் படுவதற்கா?

அவளைப் பார்த்ததிலிருந்து அவள் 'சோகநிழல்' படிந்த கனவு வாழ்க்கையைக் கேட்டதிலிருந்து. அவள் மீது அவன் அனுதாபம் கொள்ளத்தொடங்கினான், அந்த அனுதாபம் நாளடைவில் விசுவரூபமெடுத்து அவனையே ஒரு திருப்புத் திருப்பிவிட்டது. நல்லதம்பி தினமும் அந்த வீதியால் போகத் தொடங்கினான். காட்சிகளைக் கண்டு ரசிப்பதற்கு மட்டுமல்ல. தங்கத்தின் 'கவலை இழை' ஓடும் அந்தத் தனியழகைப் பார்ப்பதற்காகவுந்தான்.

பெரும்பாலும் அவன்உலாவப்போகும் அந்தஅந்திவேளைகளில் அவள்வீட்டின் முற்புறத்தில் நின்றுகொண்டிருப்பாள், விதியால் போகும் அவனுக்கு அது நன்கு தெரியும். அவளதுவீட்டைக் கடந்துபோகும்பொழுது அவனது இளமனம் படபடப்புக் கண்டு ஏதோ உணர்விலே தன்னையிழந்துஇன்பவேதனை காண, அவனதுகளங்கமற்ற கண்கள் அந்த வீட்டை நோக்கித் திரும்பும். ஒரு நொடிப்பொழுதுக்குள் அந்தக்கண்கள் தான் காண வேண்டியதைக் கண்டு தன்னுள் எடுக்கவேண்டியதை எடுத்துக்கொண்டு திரும்ப, அவன் அந்தவீட்டைக் கடந்து பல வீடுகளுக்கப்பால் சென்றிருப்பான்.

அவளை. அந்தத்தங்கத்தை அவன் மிகவும் நேசித்தான். உயிர்த்துடிப்பு அழகு மிளிரக்காணும் ஒரு அழகிய கவிதையை ஒருரசிகன் எந்தவிதத்தில் நேசிக்கிறானோ அந்தவித நேசிப்பு இரக்கத்தால், பாசத்தால், அன்பால், அழகால் உணர்வு மயங்கி உள்ளம் [illegible] ஒருகுறைவை நிறைவு செய் [illegible] நேசிப்பு'. இந்த நேசிப்பு நரம்போடு பின்னப்பட்டுக் குருதியோடு ஐக்கியமான ஜீவித நேசிப்பு. இதற்கென்றுமே அழிவில்லை. இருந்துவிட்டுப் பூக்கின்ற குறுஞ்சிமலர் போல், இந்த நேசிப்பும் மனித உள்ளத்தில் இருந்துவிட்டுத் தோன்றும்.

வழக்கமாகப் போவதைப் போல் அன்றும் அந்தவீதியால் அவன் போகும் பொழுது, அவள் அவனை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தாள். அந்தக்கவனிப்பை நல்லதம்பியும் கண்டான். அவளது பார்வையில் எதுவித உணர்ச்சியும் அவனுக்குத் தட்டுப்படவில்லை. ஆனால் அந்தக்கண்கள் ... ... அதை நினைக்கும்பொழுது, அவனை அறியாமலேயே அவனது கண்கள் அழுகின்றன. அந்தக் கண்களின் பார்வை, அந்தப் பார்வையிலே தொங்கிநிற்கும் ஜீவத்துடிப்பு அதில் தேங்கிக்கிடக்கும் உயிரின்நிராசை, அது சொல்லாமல் கூறும் சோகவரலாறு. அவனை ஒரு குலுக்குக் குலுக்கி 'நீயும் ஒரு மனிதன்தான்' என்று உணர்த்தவைத்தது!

அந்தப்பார்வையை அவன் கண்டபிறகு அவனுக்கு என்னசெய்வதென்றுதெரியவில்லை. அவன் மனம் மிகவும் நொந்து புலம்பியது. அந்த ஏங்கித் துடிக்கும் பார்வையைத் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் அவளது சோகவாழ்வில் தன் வாழ்வையும் கலக்கவேண்டுமென்று அவனது உள்ளம் விரும்பியது. ஒரு நல்ல ஆத்மா வஞ்சிக்கப்படுவதை அவனது 'பிஞ்சுணர்வால்' தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த நோயைத் தீர்க்க தன்னிடம் ஏதாவது மருந்துண்டா என்று பலமுறை யோசித்தான். அவனுக்கு விடை கிடைப்பது மிகவும் கண்டிப்பாக இருந்தது.

நல்லதம்பியின் போக்கு வரவர மாறுதலடைவதை அவனது நண்பன் வேல்முருகு உணரத் தொடங்கினான், சாப்பிடும்பொழுதும் தூங்கும்பொழுதும், படிக்கும்பொழுதும் மற்றவர்களோடு உரையாடும் பொழுதும் நல்லதம்பியின் போக்கு வேறுமாதிரியிருப்பதை வேல்முருகால் உணர முடிந்தது. நல்லதம்பியின் கண்களிலே அந்தக் கனிவு முகத்திலே, இரக்க சிந்தை கொண்ட அவனது போக்கில் ஒருவித திடீர் மாற்றம் ஏற்பட்டது அவனுக்கு வியப்பையளித்தது. அந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்னவென்பதைவேல்முருகால் ஊகிக்க முடியவில்லை. இந்தப் பரிதாப நிலையைக்கண்டு பொறுக்க முடியாமல், வேல்முருகு ஒருநாள் வாய்விட்டே கேட்டுவிட்டான். அவனுக்குக் கிடைத்த பதிலோ "ஒரு அழகியவண்ணப் பறவை அதுஉயிரையே உருக்கவைக்கும் சிரஞ்சீவிக் கீதம் இசைக்கும். ஆனால் அந்த வண்ணப்பறவை சிறகொடிக்கப்பட்டு, அழகு மறைக்கப்பட்டு அனாதரவான சிறையில் அடைக்கப் பட்டுக்கிடக்கிறது. இதன் சிறை உடைக்கப்பட்டு பழைய நிலைக்கு வரும் வரைக்கும் என் நிலையும் இப்படித்தான் இருக்கும்". வேல்முருகுக்கு, அவனது தத்துவ பாஷை விளங்காத ஊமை மொழியாகப் புலப்பட்டது. அவன் இந்த விளக்கத்தைக் கேட்ட பிறகு, நல்லதம்பியிடம் ஒன்றுமே கேட்பதில்லை.

ஊர்மக்களே ஒதுக்கி வைத்த ஒருத்தியைப் பற்றி, அதுவும் கேவலமான வாழ்வு நடத்திய ஒருத்தியின் மகளைப் பற்றி, ஏன் இவ்வளவு அக்கறைப் படவேண்டும். இது அவனுக்கே புரியவில்லை. ஆனால் அவனது உணர்வுக்கோ அந்த இளம் பெண்ணுக்கு ஊர்மக்கள் செய்யும் கொடுமைபட்டது ஒருதாய் செய்த குற்றத்துக்காக ஒரு பாவமுமறியாத பெண்ணைப் பழிவாங்குவது, அவ்வளவு நல்லதாக அவன் மனத்திற்குப்படவில்லை. ஒரு இளமங்கையின் உயிர்த்துடிப்புப் பொங்கியவாழ்வை, இயற்கை சிரித்தாடும் அழகை, எதையும் குறைகாணும் சமுகம் கலங்கிய குளம்போல் ஆக்கிவிட்டதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இந்தக் கொடுமையைத் தொலைக்கவே அவன் மனம் விரும்பியது. அவளது வாழ்க்கையின் அர்த்தத்தைத் தெளிவு செய்ய அவனது மனம் விரும்பிய காரணம், மற்ற இளைஞர்களை விட இவன் சற்றுவித்தியாசமானதோர் இளைஞனாய் இருந்ததால்தான்.

அவனுக்கு வயது இருபத்தாறுதான். கட்டுமஸ்தான தேகம், கவலைகளையே இதுவரை காணாத கவிதைக்கண்கள். குற்றமே தெரியாத குழந்தைமுகம், எவரையும் நேசிக்கும் விரிந்த இதயம், ஒருமுறை பழகினால் மற்றவர்கள் மறக்க முடியாத சுபாவம் கொண்டவன்தான் நல்லதம்பி. குடும்பப் பொறுப்பு இவனது தலையைத் தாங்குமளவுக்கு, இவனது குடும்பம் நொடிந்துகிடக்கவில்லை. கௌரவமான பணக்காரக் குடும்பத்தில் உதித்தவன்தான் நல்லதம்பி. தாய்தகப்பனுக்கு ஒரேயொரு மகனென்றால் கேட்கவும்வேண்டுமா? இந்தத் துணிவுதான் அவனைத் தங்கத்தின் வாழ்வில் தலையிடவைத்ததோ!

தங்கத்துக்கு முப்பது வயதுக்குக் குறையாமலிருக்கும். முப்பது வயதும் ஒருவயதா? இளமையின் ஆட்சி முப்பது வயதில்பட்டாபோகிறது. கவலைகளோடு காலந்தள்ளாமல் தன்னிச்சையாக ஒரு மங்கை வாழ்ந்தால் நிச்சயமாக அழகுபூத்துக்குலுங்கும் வயதுதான். முப்பதுவயது. தங்கத்தைப் பொறுத்தளவில் அவளது அழகு மற்றவர்களுக்கு நன்கு தெரிகிறது. அதே நேரத்தில் அவளது அழகிலே ஒரு சோக நிழல் ஊசலாடுவதையும் ஊகிக்கமுடிகிறது. நல்லதம்பிக்குத் தங்கம் மனைவியாக வரக்கூடியவயதா? கணவனைவிட வயதில் கூடிய மனைவிகள் வாழவில்லையா? திருமணம் செய்துகொண்டு குழந்தை குட்டிகளோடு இருக்கவில்லையா? நல்லதம்பிக்கு மனைவியாக வாய்க்கக் கூடியவள்தான் தங்கம், அதில் சந்தேகமில்லை.

அந்தக் கிராமத்துக் கோயிலிலே அன்று திருவிழா, திருவிழா என்றால் ஊரே அமர்க்களப்படும்படியான ஓர் உயிர்த்துடிப்பு. திருவிழாவைக் கண்டுஆனந்திக்க பக்கத்திலுள்ள கிராமத்து மக்களெல்லாம் வருவார்கள். அன்று அந்தக் கிராமமே ஒருவித உயிர்க்களையோடு தோற்றமளிக்கும். இன்று திருவிழா! அதனால் ஊர் அமர்க்களப்படுகிற காட்சியைக் காணமுடிகிறது. திருவிழாவுக்காக 'குருக்கேத்திரன் போர்!'

(12 ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன?

**குடும்ப வாழ்க்கைக்குப் புறம்பான துறவு மனப்பான்மையும், எதிரியான போகவாழ்க்கையும் வாழ்க்கையின் பயன்களாகமாட்டா.**

— டி. என் சுகி சுப்பிரமணியம் —

**வா**ழ்கிறோமே வாழ்க்கை இந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கலாம்? கேள்வி மலைப்பாகவும் இருக்கிறது. இதன் பதில் ஒருவரி இரண்டுவரிக்குள் அடங்காதது போலவும் இருக்கிறது.

உலக ஒட்டத்தையும், கோள் ஆராய்ச்சிகளையும் முற்பிறவி பிற்பிறவி நம்பிக்கைகளையும், மனித வளர்ச்சியையும் அரசியல் வாழ்க்கையையும் இக— பரசொர்க்க—நரக நினைவுகளையும், போர்-காதல் இன்னவும் போன்ற எச்சங்களை-எதிர்ப்புக்களை ஆராய்ந்து முடிவு கூறத் தொடங்கினால் உண்மையிலேயே நூறுபக்கமும் நூறாயிரம் பக்கமும் பதில் கூறுவதற்குத் தேவைதான்

சிந்திக்கத் தெரிந்த பெரியவர்கள் மதம், அரசியல், இலக்கியம் இசை, நாடகம் சமூகநூல் வரலாறு இவற்றின் வழியாக வாழ்க்கையின் பொருளுக்கு விடை கூறி இருக்கிறார்கள். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசைக்காக சரித்திர சாம்ராஜ்யங்கள் இழந்த முடிமன்னர்களின் வரலாறும் நமக்குத் தெரியும். வாழ்க்கைக்குள் உழலாமல் துறவிகளாக மடங்களில் ஒதுங்கி வாழ்கின்றவர்களின் ஒடுக்க வாழ்க்கையும் இதற்குரிய பதிலின் ஒரு பகுதியாக அமைகிறது.

பற்று, பாசம், கோபம், வேட்கை, குறிக்கோள் காரணமாக உயிரைத் திரணமாக மதித்து இறப்பவர்களின் சரிதமும் ஒரு பகுதியான விடையாக அமைகிறது.

எல்லாத்துறைகள், எல்லா மதஸ்தர்கள் எல்லா அரசியல் கொள்கைகள் இவற்றின் வழியாக ஆராய்ந்தாலும் ஆராய்வதும் வாழ்க்கையின் அர்த்தமாக வந்து அமையும்.

முடிவாக இருப்புக் கட்டும்போது எளிமையாக இனிமையாக குடியும் குடித்தனமுமாகக் குடும்பத்துள் வாழ்ந்து மகிழ்ந்து மடிவதுதான் வாழ்க்கை. இந்த முடிவுக்கு வருகிறோம்: வாழ்க்கையின் அர்த்தம் விட்டுக் கொடுத்து மன்னித்து மனப்பூர்வமாக மனிதத் தன்மையுடன் வாழ்ந்து மறைவது என்று தமிழ் இலக்கியங்களின் சாரம் சொல்கிறது. இந்தக் குடும்ப வாழ்வு பைத்தியக்காரத்தனம் இல்லாத பண்புக்குட்பட்ட வாழ்வாக அமைவதுதான் இதன் பொருள். வாழ்க்கை வாழ்வதற்கே. குடும்பஸ்தனாக வாழ்வதற்கே என்பதைத்தான் சிந்தனையாளர்கள் கூறிப் போயிருக்கிறார்கள்.

மகவைப் பெறுவது பெண்ணின் பெருமை. சான்றோன் ஆக்குதல் ஆண்மையின் அழகு போர் புரிவது வீரனின் கடமை. வீரனுக்கு வேல் வடித்துத்தருவது தொழிலாளர் கடமை. இவ்வாறு புறநானூறு கூறுகிறது.

'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்' என்னும் கருத்துத்தான் வாழ்க்கைத் தோட்டத்துப் பூக்களிலிருந்து எடுக்கப்பட்ட அத்தர்.

குடும்ப வாழ்க்கைக்காக ஒவ்வொரு மனிதனும் வீரனாகவும் தியாகியாகவும் உழைக்கிறான்; சாகிறான்; அறிஞனாகவும் ஆற்றல் உள்ளவனாகவும் வாழ்கிறான்: கல்வியை நம்புகிற மனிதன் போர்க்களத்தின் பக்கம் போகமாட்டான். கருவியை நம்புகிறவன் போர்க்களத்தில் முன்னே நிற்பான். மதுவை நம்பாதவன் மங்கை ஒருத்தியுடன் வாழ்வான். எனவே அறிவும் ஒழுக்கமும் சான்றோன் வாழ்க்கை என்னும் தத்துவம் பிறந்தது. போரும் போகமும் கயவர்களின் களியாட்டம் என்னும் தத்துவம் பிறந்தது எனவேதான் வீரனையும் உடல்பலமுள்ளவனையும்விட விவேகியையும், பலவீனமுள்ளவனையும் சமுதாயத்தில் பலமுள்ளவனாக நினைக்கிறார்கள். அஹிம்சை ஹிம்சையை விடப்பலம் நிறைந்தது என்னும் நமது பாரம்பரிய தத்துவத்தை அரசியல் விடுதலையின் போது காந்திஜி கடைப்பிடித்தார், கற்றுத் தந்தார். வாழ்க்கையின் சமாதானம் போராட்டத்தின் வழி அஹிம்சை என்னும் நூதன ஆயுதங்கள் பலநூறு ஆண்டுகளாக நமது தாயகத்தின் ஏடுகளில் இருந்தன. இன்று இதயங்களில் குடியேறி இருக்கின்றன.

குடும்ப வாழ்க்கைக்குப் புறம்பான துறவு மனப்பான்மையும் குடும்ப வாழ்க்கைக்கு எதிரியான போக வாழ்க்கையும் வாழ்க்கையின் பயன்கள் ஆகமாட்டா என்பதுதான் இந்திய கலாச்சாரம்.

மேலைநாட்டாரின் கல்வியும் அறிவும் இந்திய மண்ணில் ஊன்றிக்கொண்டு யந்திரங்களின் குவியல் உணர்ச்சி வெள்ளத்துள் மிதந்து கொண்டு நாம் நல்லவனாகவும் நற்குடும்பஸ்தனாகவும் வாழ முயற்சி செய்கிறோம்.

கல்விமுறையிலும் அறிவுத் துறையிலும் புதிய நோக்கங்கள் புதிய முறைகள் வந்தன. அதேபோல புதிய தீமைகளும் வந்துள்ளன. குடும்ப வாழ்க்கை சமாதான வாழ்க்கை, அஹிம்சை வாழ்க்கை அன்பு வாழ்க்கை என்னும் உள் சக்கரங்கள் யாவும் கலகலத்துப் போயிருக்கின்றன. மன அமைதிக்குப் பதில் அல்லோலகல்லோலம் எங்கும் எதிரொலி செய்கின்றது. எளிமைக்குப் பதில் ஏழ்மை பறையடிக்கின்றது. இல்லாமை எங்கும் கொஞ்சுகிறது. வறுமையும், வன்முறையும் வளர்ச்சியடைகின்றன.

சிறந்த குடும்பஸ்தன் ஆரவாரங்களின் அலைவரிசைக்குள் வந்து சிக்கமாட்டான் ஆசைப்பேய்களின் கரத்துக்குள் பிடிபட மாட்டான். பிறரைத் துன்புறுத்தி வெற்றிவாகை சூடான். நிச்சயமாகத் துறவியாக மடத்திலேபோய் உட்கார மாட்டான். நம்மிடையே பிறந்த மக்கள் அனைவரும் புரட்சி காரணமாக சிறைச்சாலைக்கும் புனிதம் காரணமாக அறச்சாலைக்கும் போவதாக வைத்துக்கொண்டால் அந்தச் சமூகவாழ்விலே ரஸம், இன்பம், கவர்ச்சிஇருக்குமா? செத்தபிழைப்பாக மாறிப் போம்.

சிறந்த குடும்பஸ்தன் எல்லாரையும் நம்பமாட்டான். எல்லோரையும் சந்தேகம் கொள்ளமாட்டான் தன் கருத்துக்களை முடிவு செய்வான். முடிவு தவறாக இருக்கலாம். எனினும் சமாதானத்தோடு முடிவு செய்வான். செய்த முடிவுக்காக [illegible] [illegible] முன்னேற்றத்[illegible]ம்பதிலாக அடி வேங்கையாகப் பாயாமல் ஆமை வேகமும் கொள்ளாமல் நிதானமான நடைநொடி, பாவனைகளுடன் வாழ்பவனே சிறந்த குடும்பஸ்தன். பெரிய பெரிய தியாக வெள்ளங்களில் சிறந்த குடும்பத்து மக்கள் குதிக்க மாட்டார்கள். தமது செயலில் நியாயம் இருந்தால்தான் வருவார்கள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்துக்காக தனது உயிரைப் பலியிடமாட்டான்.

பரிபூரணமான நியாயங்களைத் தேடிக்கொண்டு உயிரை விடமாட்டான் நியாயங்களும் பரிபூரணமாக இருக்கமாட்டா. அநியாயங்களும் பரிபூரணமாக இருக்கமாட்டா. குறைபாடு உடைய மனிதச் செயல்களில் குறையை மட்டும் மறந்துவிட்டு கிடைத்த நன்மையைப் பெரிதாகப் போற்றுவான்' மனித மனத்தின் நாகரிகந்தான் பெரிதே தவிர்த்து மனித நாகரிகமோ, யந்திர நாகரிகமோ, ஆடை அணி நாகரிகமோ இவர்கள் மனதைக் கவரமாட்டா. இவர்களுடைய முழு நோக்கமும் வாழ்நாள் பழுதுபடாமல் நல்ல சாவு சாகவேண்டும். வாழத்தெரியாதவன் சாகத் தெரியாதவன். ஒவ்வொரு குடும்பஸ்தனுக்கும் சாகத் தெரியவேண்டும். அதேபோல வாழவும் தெரிந்திருக்கவேண்டும்.

உறங்குவதுபோல சாக்காடு, உழைத்துவிட்டு உல்லாசமாக இருப்போம், உறக்கம் வருவதுபோல் சாவுவரும்; கண்ணை மூடினால் அதுவே வாழ்க்கை இதுதான் குடும்பத்துக் கோமான்கள் கொள்கை.

நரகத்திலே சொர்க்க வாழ்வு வாழ்வதுதான் குடும்ப வாழ்க்கை. உயிரோடு குடும்பவாழ்வில் ஈடுபடுவதுதான் மனிதமனநாகரிகம், வாழ்க்கையின் பண்பும் பயனும் எங்கோ எட்டாத உலகத்துள் இல்லை. இந்தக் குடும்பத்துள்ளே இருக்கிறது என்று எவன்— எவள் வாழ்கிறார்களோ அவர்கள் வாழ்க்கையின் அர்த்தம் புரிந்த ஞானிகள்,

சிறந்த குடும்பஸ்தர்கள் சதா உழைத்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். உழைப்பிற்குப்பின் ஓய்வை விரும்புவார்கள். ஓய்விலே மன அமைதியும், மன உணர்ச்சியும் காணுவார்கள்.

இந்த ஓய்வை ஆத்ம வளர்ச்சிக்காக மதச்சடங்குகளில் ஈடுபாடு செய்யலாம். சமூக வளர்ச்சிக்காகத் தொண்டுகளில் ஈடுபடலாம். தன் குடும்ப வளர்ச்சிக்காகவே ஊர் சுற்றுவது. கோவில் குளம் போவது, அணைகட்டு யந்திரசாலைகள் பார்ப்பது என்று சுற்றலாம்.

இந்த ஓய்விலே சுகம் கிடைக்கிறது. எனவே இதனையே வாழ்க்கையின் கருப்பொருளாகச் சிலர் வைத்திருப்பதைப் பார்க்கிறேன். பூஜை புனஸ்காரங்களில் நாட்கணக்காக

(13- பக்கம் பார்க்க)

## உலகை ஆள்வோம்

—பொலிகை ச. திருப்பதி—

மதியினால் உலகை ஆள்வோம்
மனவிருள் நீக்கி, மேலாம்
நிதிமிக உடையார் தம்மை
நெறியினிற் செலுத்தி இங்கே
கதியிலார் தம்மை யெல்லாம்
கதிபெற வாழ வைப்போம்
சதி செயும் வஞ்சர் தம்மை
சமர்புரிந் தழிவு செய்வோம்.

உழவனின் பெருமை பூவில்
உயர்வுறச் செய்வோம் சின்னக்
குழந்தையைத் தெய்வ மாக்கி
குவலயம் போற்ற வைப்போம்
பழனமீ தெல்லாம் பச்சை
பயிர்விளைந் தூணுண்டாக
விழவினை எடுப்போம் அன்பை
விளைக்கவும் கலைகள் செய்வோம்.

ஏழைகள் கண்ணீ ரின்றி
இன்புற வாழ வைப்போம்
கோழையை அழிப்போம் வீரம்
கோணிடா வகையே செய்வோம்
தாழைசேர் தரிசி லெல்லாம்
தண்பயிர் விளைவு கண்டே
ஊழையே நம்பு வோர்க்கும்
உதவிநாம் உவப்புக் கொள்வோம்.

பொறுமையை இழந்த புல்லர்
புன்மையைப் போக்கி இங்கே
வறுமையின் வேரை வெட்டி
வளமுற செய்தே நெஞ்ச
மறுகலை மாய்த்தே மண்ணில்
மகிழ்வினை வாழ வைப்போம்
சிறுமையே யில்லா உண்மை
திறனையே சிறக்க வைப்போம்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்கிய பாரம்பரியத்தை கட்டி எழுப்புவோம்!

# ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டல உறுப்பினர் டொமினிக் ஜீவாவுடன் ஒரு பேட்டி

**"காலம் வரும். அந் நாளில் இன்று துச்சமாக மதிக்கப்படும் இந்நாட்டு தொழிலாள விவசாய வர்க்கப் புத்திரர்களே இந்நாட்டின்கலைஇலக்கியங்களை சிருஷ்டிப்பார்கள்."**

—தெளிவாக, வலுவாக, அழுத்தந்திருத்தமாக ஈழத்து இலக்கிய சிருஷ்டிகர்த்தா டொமினிக் ஜீவா இந்தக் கருத்தைக் கூறியபோதெல்லாம், இடித்து இடித்து எழுதியபோதெல்லாம் நையாண்டி பண்ணி, சிரித்துப் புலம்பியிருக்கிறார்கள்.

ஆனால்—

ஈழத்து இலக்கியத்துக்கு புதுப்பாதை வகுக்க கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலம் அவர் உழைத்த ஓயாத உழைப்புக்கு பலனளிக்கும் காலம் இப்போது ஆரம்பித்துவிட்டது.

## மரபு உடைந்தது

பண்டிதர்களும், பட்டதாரிகளும், உயர்வகுப்பு மக்களும்தான் இந்நாட்டின் இலக்கியத்தை 'எடை' போடும் ஏகபோக உரிமையுள்ளவர்கள் என்ற மரபு முதல் தடவையாக உடைக்கப்பட்டிருக்கிறது.

கலையும் இலக்கியமும் யார் கைக்கு மாறவேண்டுமென்று 'முற்போக்கு எழுத்தாளர்கள்' கனவு கண்டார்களோ அந்தக் கனவின் முதல் அத்தியாயம் புரட்டப்பட்டுவிட்டது.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளைத் தொட்டு, கண்ணெதிரே காணும் வாழ்க்கைப் போராட்டங்களைப் படம் பிடித்துக்காட்டி, வாழ்க்கையோடு ஒன்றிணைந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்த படைப்பாளியான பாட்டாளி டொமினிக் ஜீவாவை ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் தமிழ் இலக்கிய குழு அங்கத்தவராக 'மக்கள் அரசு' நியமித்துள்ளது, உழைக்கும் வர்க்கத்துக்கு கிடைத்துள்ள ஒரு மதிப்பு என்று கொள்ளலாம்.

1960-ல் 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற தனது சிறுகதை தொகுப்புக்கு சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்ற ஜீவா 1970-ல் சாகித்திய மண்டல அங்கத்தவராகவே ஆகிவிட்டார்!

இலக்கிய தாகம் மட்டுமல்ல, இயன்றதைப் பிறந்த மண்ணுக்கும் வாழும் சமூகத்துக்கும் செய்துவிட வேண்டுமென்ற விடாப்பிடியான போக்கு ஜீவாவின் நாடித்துடிப்பு! செய்ய முடியாது என்று பலர் சலித்த வேலைகளை ஏன் செய்ய முடியாது என்ற கேள்வியுடன் தொடர்பவர் அவர்.

## இலக்கியம் அவர் மூச்சு

ஈழத்து இலக்கிய வளர்ச்சி- அவர் மூச்சு. மேடையில் ஏறினாலும், கையில் பேனா ஏறினாலும் ஓடும் சொற்கள் இதைச் சுற்றியே ஓடும்.

ஈழத்தில் திறமைசாலிகள் இருக்கிறார்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டிருப்பதில் தன்னை மறந்து இன்பம் காணும் பெருநோக்குக் கொண்டவர் ஜீவா!

கஷ்டத்தையும், நஷ்டத்தையும்பற்றிச் சிந்தித்துப் பார்க்காது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உழைக்கிறார்! மாதம் ஒரு முறை மலரும் அவரது சஞ்சிகை 'மல்லிகை'யை வெளியே கொண்டு வருவதற்கு அவர் தினமும் அங்குமிங்குமாக ஓடித்திரிவதையும், மண்டையைப் போட்டு உடைப்பதையும் அவரை அறிந்தவரே அறிவார்கள்.

ஈழத்தில் எழுதும் திறன் படைத்த எல்லாருக்கும் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படவேண்டுமென்பது அவரது இதயத்துப் பேராசை,

ஈழத்து கலை இலக்கியப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களை ஜீவா மனம் திறந்து பாராட்டுகிறார். 'மல்லிகை' அட்டையில் முகப்புப்படம் போட்டு கௌரவிக்கிறார்.

"இங்கு புதையல் இருக்க நாம் எங்கெல்லாமோ தேடி அலைகிறோமே!"- இது ஜீவா அதிகமாக உபயோகிக்கும் ஒரு வார்த்தை. இங்கு இருக்கும் புதையல்களை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். இது அவர் நோக்கம்.

கால் நடை, அல்லது ஒரு பழைய சைக்கிள்-வேகமான போக்கு வரத்துக்கு அவர் பாவிப்பவை இவைதான்!

தனக்கென ஒரு கொள்கையை வைத்துக்கொண்டாலும், மற்றவர்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் உயர்ந்த பண்பு கொண்டவர் ஜீவா. கருத்து முரண்பாடான இடத்தில் கூடச் சமாதானம் நிலைக்கவேண்டுமென்ற கருத்துடையவர் அவர்!

## சாதனை செய்வோம்

சூரியன் ஓய்வெடுத்துக் கொள்ளும் நேரத்தில் நான் டொமினிக் ஜீவாவைச் சந்தித்தேன்.

வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு—

"ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தில் இனி ஏதாவது மாற்றத்தைஎதிர்பார்க்கலாமா" என்றேன்.

"நிச்சயமாக! பெரிய சாதனையைச் செய்யப்போகிறோம். கடந்த பல வருடகாலமாக சாகித்தியமண்டலத்துக்கென ஒதுக்கப்பட்டு வந்த பணமெல்லாம் முடக்கப்பட்டு, தகுந்தபடி பயன்படுத்தப்படவில்லை. அங்கம் வகித்தவர்கள் 'மிச்சம் பிடித்து' அரசாங்கத்திடம் 'நல்லபெயர்' வாங்கப்பார்த்தார்கள். படைப்பாளிகள் வேறு யாரோவாகவும், அங்கத்தவர்கள் யாரோவாகவும் இருந்ததே இதற்குக் காரணம். இப்போதுபடைப்பாளிகளே அங்கத்தவர்களாக இருப்பதால், முன்னர் போல் சிருஷ்டி கர்த்தாக்களுக்கும் அங்கத்தவர்களுக்குமிடையேயிருந்துவந்த உறவற்ற நிலைமை இனி இருக்காது. அத்துடன், படைப்பாளிகளின் கஷ்டநஷ்டத்தை உணர்ந்தவர்கள் நாம். புத்தகம்போட்டு அதன் கஷ்ட நஷ்டத்தை அனுபவித்தவர்கள் நாம்! ஆகையால் எழுத்தாளர்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அந்தந்தவசதிகளை, தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்போம்!"

—டொமினிக் ஜீவா பேச [illegible] அவர் எதிர்காலத் திட்டங்களை [illegible] போலிருப்பது.

"சாகித்திய மண்டலத் அமைப்பு விதிகளில் மாற்றம் ஏற்படுமா?"

"பொது அமைப்பு விதிகளில் மாற்றம் ஏற்படாது. ஆனால் நிறுவன இயக்கத்துக்கு புதிய புதிய உருவங்கள் கொடுத்து, பெரிய சாதனைகளை நிகழ்த்துவோம். முன்னைய குழு பரிசு கொடுப்பதற்கு மட்டும் இருந்தது. இந்தப் பரிசு கொடுப்பதனால் பல 'பரிசு கேடுகள்' ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இனி 'இந்த பரிசு கேடு' இருக்காது. நாம் இந்தப் பரிசு கொடுக்கும் குழுவாக மட்டும் இயங்காமல், பரிசு பெருத நூல்களாக இருந்தாலும் தரமான, நல்லநூல்களில் 300 400 பிரதிகளை வாங்கி எழுத்தாளர்களை ஊக்குவிப்பதென கொள்கையளவில் முடிவுசெய்துவிட்டோம்." இதே போன்று படைப்பாளிகளைப் பலவகையிலும் உற்சாகப்படுத்தும் திட்டங்களை வகுத்துக் கொள்ள இருக்கிறோம்" என்று கூறியவர் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத் தமிழ் இலக்கியக் குழுவின் முக்கிய குறிக்கோள்களைத் தெரிவித்தார்

■ தேசிய இலககியபாரம்பரியத்தைக் கட்டி எழுப்புவது.

■ எழுத்தாளர்களுக்குத் தகுந்த பொருளாதார வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது.

O பரஸ்பரம் ஒவ்வொரு எழுத்தாளர் களிடையேயும் உறவை ஏற்படுத்துவது.

O சிங்கள சிருஷ்டிகளைத் தமிழிலும், தமிழ் சிருஷ்டிகளை சிங்களத்திலும் பிரசுரமாக்க வாய்ப்பையும் வசதியையும் உருவாக்குவது.

## தேசியஒற்றுமைக்கு முதலிடம்

"எப்படியான இலக்கியங்களை சாகித்தியமண்டலம் வரவேற்கும்?"

"நாடு அங்கீகரித்தகொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கான இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதேநேரத்தில் எந்தவிதமான கோஷ்டி மனப்பான்மைகளுக்கும், குறுகிய சில்லறை லாபங்களைப் பெறக் கூடியதான நோக்கங்களுக்கும் எதிராக நிற்போம். ஒரு 'பிரேம்'போட்டு இதற்குள்தான் இலக்கியம் படைக்கவேண்டுமென கூற மாட்டோம். பச்சையாகச் சொன்னால் மனித வாழ்க்கைக்கேற்ற எந்த நல்லஇலக்கியத்தையும் ஏற்கத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில், உதாரணமாக சாதி அமைப்புமுறை இருக்கத்தான் வேண்டும் என்றும் அது முற்றாக மனிதகுலம் அங்கீகரித்த கொள்கைகள் தான் என்றும் கூறிக் கொண்டுஅதற்கிசையவரும் இலக்கியத்தை ஏற்றுக் கொள்ளமுடியுமா? 'தேன் நிலவு' இலக்கியங்கள் முற்றாக நிராகரிக்கப்படும் அதே வேளையில், சில்லறை அரசியல் நோக்கக் கதைகளும், வகுப்புவாதக் கதைகளும் தூரத்தூக்கி வீசப்படும்."

## சிறிய தாவல்

"சாகித்திய மண்டலத்தில் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் திருப்தியடைந்துள்ளீர்களா?"

"பெரிய வெற்றியோ, அன்றிமுழுவெற்றியென்றோ நான் கூறவில்லை. இது ஒரு சிறிய 'தாவல்'. நமது பாதையில் முதல் வெற்றி கிடைத்திருக்கிறது. நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். தவறு செய்ய மாட்டோம் என்றும் உறுதியாகச் சொல்லவில்லை. ஆனால் இலக்கியத்தின் மீது ஏற்பட்டுள்ள பாசத்தின் மீதுதான் தவறுசெய்தாலும் செய்வோமே தவிர வேறு எத்தத்தவறையும் செய்ய மாட்டோம். எழுத்தாளர்களும் மிகவும் விழிப்பாக இருந்து இந்தஸ்தாபனத்தை படைப்பாளிகளின் நன்மைக்காகப் பயன்படுத்த தகுந்த ஆலோசனைகளைக் கூறிக் கொண்டிருக்கவேண்டும்."

"ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி ஏதாவது சொல்லமுடியுமா?"

"எமது எழுத்தாளர்கள் கற்பனுலோக எழுத்தாளர்களில்லை என்பதை சிறிய படைப்புகளுமே அறிவுறுத்தக்கூடியதாக இருக்கிறது. இங்குள்ள எழுத்தாளர்கள் அடிக்கடி சந்தித்துமோதிக் கொள்வதனால் பிரச்னைகளை உணர்ந்து நல்ல இலக்கியங்களைப் படைக்கமுடிகிறது"

## சிங்களத்தில் தமிழ்க் கதைகள்


எனது கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு வந்த ஜீவா தானாகவே, நல்ல தகவல் ஒன்றைத்தெரிவித்தார்.

'நல்ல சிங்கள சிறுகதைகள் 70, 80க்குமேல் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால்நல்ல தமிழ்ச் சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் படுவதாகத் தெரியவில்லை. இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு பல பிரபல சிங்கள சிறுகதை யாசிரியர்களுடன் பேசியுள்ளேன். அத்துடன் சாகித்தியமண்டலத்தினூடாக இந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுப்பேன்' என்றவர்—

'ஆறு சிங்களச் சிறுகதைகள், ஆறுதமிழ்ச் சிறுகதைகள் கொண்ட சிறுகதைத் தொகுப்பு ஒன்று விரைவில்

(14-ம் பக்கம் பார்க்க)

"நாடு அங்கீகரித்த கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டு தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கான இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதே நேரத்தில் எவ்விதமான கோஷ்டி மனப்பான்மைகளுக்கும், குறுகியசில்லறை லாபங்களைப் பெறக் கூடியதான நோக்கங்களுக்கும் எதிராக நிற்போம்."



★ பாமா ராஜகோபால்

# மாவிட்டபுரம் வெற்றிலைக்கு மவுசு ஏற்றிய ஒட்டகக் கதை

## எங்கள் கிராமம் - 5
## மாவிட்டபுரம்

அ. செ. முருகானந்தன்

இந்தச் சின்ன ஊரில் வழங்கும் ஒரு சின்ன உபகதை.

வெகுகாலத்துக்கு முன் அதாவது இலங்கையின் பூர்வ குடிமக்கள் ஒட்டகங்களைக் கட்டி மேய்த்து வந்த காலத்தில் திருக்கோணமலையில் நிலாவெளிப்பக்கமாகப் புல் மேய்ந்துகொண்டுநின்ற ஓர் ஒட்டகம் தன் நெட்டைக்கழுத்தை ஒருக்கால் முன்னே நீட்டியதாம். அம்மாத்திரத்தே அதன் தலை யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் வெற்றிலைத் தோட்டம் ஒன்றுக்குள் நுழைந்துவிட்டது தலையை மேலும்கீழுமாக ஆட்டி முருக்கங்குழையுடன் வெற்றிலைத் தழைகளையும் மொசமொசவென்று அது கடித்துத் தின்னத் தொடங்கவே வெற்றிலைத் தோட்டத்துக்குள் சருகு பொறுக்கிக் கொண்டு நின்ற தோட்டக்கார ஆச்சி தடியெடுத்து அதன் மூஞ்சியிலே படபடவென்று அடித்துக் கலைத்தாளாம் ஒட்டகம் அசையவில்லை மேலே இன்னும் தலையை நீட்டிக் கொழுந்துகளை முழுதாக வாய்க்குள் சுருட்டி வைக்கலாயிற்று. தோட்டக்கார ஆச்சி இந்த விநோதமான பிராணியின் கொடுமையைப் பார்த்துக் கலக்கமடைந்து குய்யோ முறையோ வென்று கூக்குரலிட்டவளாக ஒரு தடவை அது தலையைத் தாழ்த்திய போது அதன் கழுத்திலே எட்டிப்பிடித்தாள், இதற்குள்ளே அக்கம் பக்கத்துத் தோட்டங்களிலிருந்து ஆட்கள் திரண்டு வரும் ஆரவாரம் கேட்கவே ஒட்டகம் சட்டென்று தன் கழுத்தை வளைத்துப் பின்வாங்கிற்று. அந்தமாத்திரத்தே ஒட்டகத்தின் கழுத்தைப் பிடித்துத் தொங்கிய ஆச்சியும் திருக்கோணமலை நிலாவெளி போய்ச் சேர்ந்தாளாம். அதன்பின் அவள் யாழ்ப்பாணத்திற்கே திரும்பவில்லையாம். ஒட்டகமும் அதன் பின் ஒருபோதும் தன் கழுத்தை வடக்கே நீட்டத் தவறுவதில்லை,

இந்த உபகதை வெற்றிலைக்குப் புகழ்பெற்ற மாவிட்டபுரத்துக் குடிமக்கள் மத்தியில் இன்றைக்கும் வழங்கி வருகிறது. அக்கரைச் சீமையிலிருந்து கல்யாணம் கோவிற்திருவிழாத் தேவைகளுக்கு வெற்றிலை, வாழை இலை வாங்கிக் கொண்டு போகத் தோணி பிடித்துக் கொண்டு ஆட்கள் வந்து போனது பற்றியும் அக்கரையிலிருந்து மீன் பிடிக்க வந்தோர் இக்கரையில் நெல் குற்றும் சத்தம் கேட்டு இக்கரையிலும் ஏதோ ஊர்மனை இருப்பதாக அனுமானித்துக்கொண்டு திரும்பிப் போய் தங்கள் பெண்கள் குழந்தைகளுக்குத் தேவதை நாட்டுக்கதை சொல்லியது பற்றியும் இவ்வூரவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள்.

இவ்வூர் வெற்றிலைத் தோட்டங்களைப் பார்ப்பதற்கென்று சில காலத்துக்கு முன்னதாக குண்டசாலை கமப்பண்ணைப்பயிற்சி நிலையத்திலிருந்து பெண்களும் ஆண்களும் கூட்டமாக வந்து ஒவ்வொரு வெற்றிலைத் தோட்டமாக நுழைந்து வெளியேறியதைப் பார்த்தபோதுதான் எனக்கு இவ்வூரில் வழங்கிவரும் இந்தப் பழைய பாட்டிக்கதையும் நினைவாடிற்று.

வெற்றிலைத் தோட்டத்தைச் சும்மாபார்த்தால் மட்டும் போதுமா? வெற்றிலைச் செய்கைபற்றி அவர்களுக்கு வேண்டிய விபரங்களைத் தெரிவிப்பதற்கும் அனுபவ ஞானமுள்ள ஒருவர் கிடைக்கவேண்டுமல்லவா? அதற்குத் தக்க ஆள் கடைசியாக அவர்கள் சென்ற வெற்றிலைத் தோட்டத்தில் அகப்பட்டார். படித்த வாலிபர் அவர். படித்து விட்டு உத்தியோகம் பார்க்கபிரியப்படாமல் கோவிலின் வடக்கு வீதியை அடுத்துள்ள தமது தகப்பனார் தோட்டத்தில் வெற்றிலையும் வாழையும் நாட்டி மிக்க இலாப நயங்கண்டு பல காலமாகக் கமத்தொழில் செய்து வருகிறார். கிழக்கு வீதி மூத்தார் கதிரவேலுவின் மகன்தான் அவர். கதிரமலையான் என்பது அவர் பெயராம். தோட்டத்தில் மட்டுமன்றி பொதுக்கட்டத்திலும் அதாவது மேடையிலும் அவர் பேசவல்லவர்.

தேடிவந்தவர்களுக்கு வெற்றிலைச் செய்கைமுறைகளை ஆதியோடந்தமாக விளக்கிக் கூறினார், குண்டசாலைப்பிள்ளைகள் விரிவுரையாளர்முன் நின்று குறிப்பெடுத்துக்கொள்வது போல் அவர் கூறியதை அப்படியே கேட்டு எழுதினார்கள்.

வெற்றிலைப் பயிர்ச் செய்கைஎல்லா ஊர்களிலும் ஒரேமாதிரியாக நடைபெறுவதில்லை, கிழக்கு மாகாணத்து வெற்றிலைச் செய்கைக்கும் யாழ்ப்பாணத்து வெற்றிலைச்செய்கைக்கும்செய்கை முறையில் எவ்வளவோ வேறுபாடு உண்டு. கிழக்கு மாகாணத்தில் மணலைக் கூட்டி மேடிட்டு அதிலே காட்டுக்குச்சிகளை ஊன்றி அவற்றின்மேல் கொடிகளை வளரவிடுவார்கள். பெரும் பகுதியும் ஆற்றங்கரையை அடுத்துள்ளஊர்களில் அங்கு வெற்றிலை பயிரிடுவதால் அந்த ஆற்றோர மண் வளத்துக்கு அவ்வளவு பக்குவம் போதும். ஆனால் யாழ்ப்பாண நாட்டில் பிரதானமாக மாவிட்டபுரத்திலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலும் வெற்றிலைச் செய்கைக்குப் பக்குவமும் பராமரிப்பும் 'கனக்க' நடைபெறுகின்றன. அதற்கேற்றாற்போல் இவ்வூர் வெற்றிலைக்கும் சு[illegible]தையிலே ஒரு தனி 'மானம்' உண்டு.

முதலில் நாலு பக்கமு[illegible] சுற்றிவர இறுக்கமா[illegible] வேலி போட்டுவிட்டுத்தா[illegible] கொழுந்து தோட்டவே[illegible]க்குத் தொடங்குவார்க[illegible]

இங்கெல்லாம் வெற்றி[illegible] கொடி படருவது முன்[illegible]ங்கை என்ற கல்யாண மு[illegible]ங்கை மரத்தில். ஒவ்வொ[illegible] கொடியோடும் சேர்த்[illegible] நாட்டப்படு[illegible] முரு[illegible] தடியும் கூடவே செழித்[illegible] வளரும். முருக்கங்கு[illegible] ஆடு மாடுகளுக்கு நல்ல தீ[illegible]யாவதால் அவற்றிற்கு[illegible] சேர்த்து தண்ணீர் இறை[illegible]பது வீண்போவதில்லை. உ[illegible] கதையில் வரும் ஒட்டக[illegible]தின் வாய்க்கு எட்டிய[illegible] போல நம்மூர் ஆடுமா[illegible]ளுக்கு முருக்கங்குழை எ[illegible]டாத உயரமாக வளர்[illegible] தோங்கிப் போய்விடுவதா[illegible] அவற்றைநீளத்தடிகொண்[illegible] இலையிலையாகஒடித்துத்தா[illegible]




உங்கள் பரமவிரோ[illegible] அறுவை - ஒழித்திடு[illegible]

**பீ எச் சி**
நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு பீ எச் சி 10% தூள். சிறந்தது. பீ எச் சி 6% துணுக்குகளும், பீ எச் சி 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.

**களைக்கொல்லி 'M-50'**
'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக்'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.

**சுமித்தியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களைக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசொட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்

**களைக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.




லங்கெம் இலங்கை லிமிட்டெட்
செலிங்கோ ஹவுஸ், த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

LANKEM
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவார்கள் வெற்றிலைத் தோட்டத்தை நிரம்பத் துப்புரவாக வைத்திருப்பார்கள். ஒரு சருகு காண முடியாது. காக்காய் குருவி எச்சமிடாதபடி இரவிரவாகக் காவலிருப்பார்கள். தீட்டுக்காரர், துடக்குக்காரர், கண்டபடி தோட்டத்துக்குள்ளே நுழைந்துவிடாதபடி ஆசாரம் காப்பார்கள். நாளும் வேலையும் பார்த்து கொழுந்து நாற்று நடுகிருர்கள். சிமெந்துத் தொழிற்சாலை ஒன்று வந்து அக்கம்பக்கமாக அண்மித்துள்ள தோட்டந்துரவுகளெங்கும் புழுதியையும் தூசையும் வாரி இறைத்து இலைகுழைகளின் பசுமையை மாசுபடுத்தி விடுவது என்னவோ உண்மைதான். தொழிற்சாலை கல் அகழ்ந்த நிலப்பரப்பு வருங்காலத்தில் வெற்றிலை, வாழை புகையிலை பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பாக அமையும் என்ற நம்பிக்கையோ என்னவோ தொழிற்சாலை கிளப்பும் புழுதியைக் கழுவித் துப்புரவு செய்துகொண்டு பொறுமையாக இருக்கிருர்கள்.

சந்தை கூடும் நாட்களில் சந்தை விற்பனைக்கு வெற்றிலை கொண்டுபோவதற்கு இளம்பெண்கள் விடியற்காலை எழுந்து கொடிகளில் இலைபறிக்கும் காட்சி கண் குளிரும்கிராமியக்காட்சியாகத்தோன்றும். பறித்த இலைகளை வீட்டுக்குக் கொண்டு சென்று பலபேராகக் கூடியிருந்து இனம் இனமாகத் தேர்ந்தெடுத்து அடுக்கி கட்டுக்கட்டாகக்கட்டி அதன் பின் ஆண்கள் தலைச்சுமை வண்டிச் சுமையாக சந்தைக்கு எடுத்துப் போவார்கள். வெற்றிலைப் பயிர்ச்செய்கை இத்தனை கவனசிரத்தையாக

(12-ம் பக்கம் பார்க்க)


‘ஸ்டாம்’ எப்-34
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




# சமூக நாடகங்களை விட வரலாற்று நாடகங்களே நிலைத்திருக்கும்!

திரு. கரவைக்கிழார் 1965-ம் ஆண்டு நாடகத்திற்கு கலைக்கழகப் பரிசு பெற்றவர்; சிறந்த கவிஞர். ‘கடலில் கலந்த கண்ணீர்’ எனும் கவிதைக்காக ‘ஈழநாடு’ பரிசு இவருக்கு கிடைத்தது. நாடகங்கள் பல எழுதியுள்ளார். சிங்கள மொழிச் சட்டத்தால் கட்டாய ஒய்வில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ந் திகதி அனுப்பப்பட்டார். பின் திரும்ப அழைக்கப்பட்ட இவர் 1—12—70ல் இருந்து ஒய்வு பெறுகிருர். இலக்கியத்தில் நிறைந்த ஈடுபாடுள்ள இவர் கூறும் கருத்துக்கள் பயனுள்ளவை. சுவையான பேட்டி இது. படித்துப் பாருங்கள்.

வாழ்வுக்கு வளம் தருதல் வளமான இலக்கியங்கள். அந்த இலக்கியங்கள் சோர்வுற்ற மக்கள் உள்ளங்களில் உணர்ச்சியையும் எழுச்சியையும் கொடுத்து தனி மனித குறிக்கோளையும் சமுதாய குறிக்கோளையும் எதிர் காலத்தில் அடைவதற்குத் தூண்டுகோலாக இருக்கும். நமக்கு விருப்பமானவையெல்லாம் இலக்கியமாகிவிட முடியாது. அந்த இலக்கியங்களுக்கு இலட்சியங்கள் தேவை. அந்த இலக்கியங்கள் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற மாற்றம் பெறுன்றன, ஒவ்வொரு இலக்கியமும் அவை எழுதப்படும் காலங்களில் தோன்றி புதிய சமுதாய அமைப்புக்கு அல்லது அன்றுட சமூகத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு விடை அளிப்பனவாய் இருக்க வேண்டும். அப்படியான இலக்கியங்கள்தான் மக்கள் மனங்களில் நிலைத்திருக்கக் கூடியன,



இலட்சியம் உடைய இலக்கியங்களைப் படைப்பதற்கு சமூக உணர்வோடு கூடிய படைப்பாளியால்தான் முடியும். ஓர் இலக்கிய கர்த்தாவினுடைய வெற்றி அவனுல் படைக்கப்படுகின்ற இலக்கிய விற்பனைத் தொகையில் தங்கியிருக்கவில்லை அந்தப் படைப்பில் உடையவேட்கை உணர்வை எத்தனை மக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்தொழுக முயல்கிருர்கள் என்பதில்தான் தங்கியிருக்கிறது. அந்த இலக்கியங்கள்தான் அறிவுக்குத் தெளிவையும் உணர்வுக்குத் தூய்மையையும் மனதிற்கு அமைதியையும் தரவேண்டும்

இப்படியான படைப்பாளியை—கவிஞரை—நாடக ஆசிரியரை சொல்வல்லாளனை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது உயர்ந்த தோற்றம் கூர்மையான கண்கள், இனிமையான பேச்சு ஆழ்ந்து அகன்ற நுண்ணிய கருத்துக்கள் அவரிடம் இருக்கக் கண்டேன், உள்ளத்தில் உணர்ச்சி வடிவெடுத்த கவிதையில் அவர் ஓர் இலட்சியதாகம் கொண்ட எழுத்தாளர் ஆக என்னுல் அறிய முடிந்தது.

அவர்தான் கரவைக்கிழார் என்னும் திரு. கந்தசாமி.

ஈழத்தில் பல அறிஞர்களுக்குப் பரம்பரை இருக்கிறது விபுலானந்த அடிகள், பண்டிதமணி ஆகியோருக்கு இலக்கியப் பரம்பரை இருக்கிறது. ஈரோடு பெரியார் ஈ. வே. ரா. போல ஈழத்திலும் பகுத்தறிவுப் பாசறை அமைத்துப் புதிய அறிவு வழியில் ஒருபரம்பரையை உருவாக்கியவர் புலோலி கந்தமுருகேசனுர் அவரின் மாணவராகவும் அவரின் சிந்தனைப் பொறிகளில் புடமிட்டவராகவும் விளங்குபவர்தான் திரு. கரவைகிழார். அவருடன் நடாத்திய பேட்டியைப் படியுங்கள்; உண்மை விளங்கும்.

**பேட்டி கண்டவர்:**

**மயிலை. சிவ. சண்முகதாசன்**

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கரவைக்கிழார் ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்ருர். விவசாயப் பாடசாலையில் கற்பதற்கு உபகாரச் சம்பளம் பெற்ருர். சிறிது காலம் இந்தியாவில் விஞ்ஞானக் கல்வி பெற்ருர். 1951ம் ஆண்டு எழுதுவினைஞராகச் சேர்ந்த இவர் 19 வருட கால சேவையின்பின் இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். 1964-ம் ஆண்டு யூன் மாதம் 18-ந்திகதி சிங்களம் படிக்காத காரணத்திற்காக கட்டாய ஓய்வில் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டார். கிட்டத்தட்ட ஆறுமாதங்களுக்குப்பின் மீண்டும் கட்டாயமாகச் சேவைக்கு அழைக்கப்பட்டார். இதுவரை தன் இலட்சியத்தைக் கைவிடாத இவர் திறைசேரி சுற்றறிக்கை 700ன் கீழ் அரசாங்க அலுவல்களை சிங்களத்தில் செய்யமுடியாது என்ற காரணத்திற்காக 1-12-70 தொடக்கம் தனது 39-வது வயதில் ஒய்வுபெற்ருர்.

## பேட்டி - “கரவைக்கிழார்”

## படைப்பதெல்லாம் இலக்கியமாகாது அதற்கோர் இலட்சியம் வேண்டும்

பல துறைகள் இலக்கியத்தில் இருக்கவும் கவிதையை மட்டும் தாங்கள் எடுக்கக் காரணம்?

சிறு வயது தொடக்கம் பாரதி பாரதிதாசன் கவிதையில் ஆர்வம். அண்ணுவின் திராவிடநாடு பத்திரிகையை 1948-ல் இருந்து வாசித்து வந்தேன். இதனுல் சங்க இலக்கியத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. கவிதைத்துறையை ஆராயவேண்டுமென்ற ஆர்வத்தில் திருவாசகம் சித்தர் பாடல்களை நிறைய [illegible] சங்க இலக்கியங்களுடன் படித்தேன். அந்தக் கவிதையுணர்வில் ஊறித் திளைத்தமையால் கவிதை மின்னல்போல் என்னுள்ளத்தில் தோன்றியது. அநேக கவிதைகள் எழுதினேன். கந்தமுருகேசனுர் நேரடியாகவும், கடிதமூலமும் எனக்கு கவிதை இலக்கணத்தைச் சொல்லித்தந்தார். அவரது தொடர்பால் ஆழமான இலக்கியப் பயிற்சி எனக்கு ஏற்பட்டது. எழுதவேண்டுமெனத் தூண்டியவர் எமது நண்பர் நாக பத்மநாதனே.

இதுவரை எத்தனை கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள்.

அச்சில் வெளிவந்த கவிதைத்தொகுப்பு ஒன்று. இன்னும் பல கவிதைகள் விரைவில் இன்னொரு தொகுப்பாக வெளிவரவிருக்கிறது.

தாங்கள் கவிதையோடு நாடகம், கட்டுரைகள் எழுதுவதாக அறிகிறேன். தற்பொழுது தமிழில் எழுதப்படும் நாடகங்கள் பற்றித் தங்கள் கருத்தென்ன?

புதுமை வேட்கையோடு தரத்தைப் பாராது மரபைப் பேணுது எதையுமே அரவணைத்து எமது மொழிக்கும் இனத்திற்கும் ஊறு தேடும் வகையில் எழுதித் தயாரித்தும் நடித்தும் வருகிருர்கள். உலகத்தோடு ஒட்டி வாழ்கின்றபோது மற்றைய நாடுகளில் கையாளப்படும் உத்திகளை நாம் கையாளலாம். ஆனுல் உயிர்போன்ற நமது தமிழ்ப்பண்பையும் மரபையும் மறந்துவிடக்கூடாது. இந்தக்காலத்தில் பெரும்பாலும் நகைச்சுவை நாடகங்களே மிகுந்து காணப்படுகின்றன. நவரசங்களில் நகைச்சுவை ஒன்றே தவிர அதுவே நவரசமாகிவிடாது. நையாண்டியை நகைச்சுவை என எண்ணி நடித்துக் காட்டி மக்களை தவருனவழியில் இட்டுச் செல்கிருர்கள், ஒருசிலர். மனத்தைப் புண்படுத்தாது சிந்தித்துச் சிரிக்க வைப்பது நகைச்சுவை. அங்க சேஷ்டைகள் செய்வது, அருவருப்பான மொழியிலே மனத்தைப் புண்படுத்தி சிரிக்க வைப்பதுதான் நையாண்டி. நகைச்சுவை தவிர்ந்த மற்றைய ரசங்களும் ததும்பும்வண்ணம் தரமான நாடகத்தைத் தயாரிக்க அத்துறையில் ஈடுபட்டவர்கள் இடையருது முயலவேண்டும். ஆயிரம் பேச்சு மேடைக்கு ஒரு நாடகம் சமம் என்பது பெரியோர் வாக்காகும் பாமரர்களையும் படித்தவர்களையும் ஈர்க்க வல்லசக்தியுடையது நாடகம் என்பதால் நாடகத்தைக் கையாள்பவர்கள், மக்களுக்குப் பயன்தரத்தக்க கருத்துக்களை அவர்கள் முன்னேற்றம் அடையக்கூடிய வகையில் வழங்குவதை தமது முக்கிய கொள்கையாகக் கொள்வது சாலச்சிறந்தது. இன்று நம்மிடையே நிலவிவரும் சாபக்கேடான சாதிப்பிரச்னை, சீதனப்பிரச்னை, நாட்டுப்பற்றின்மை மொழிப்பற்றின்மை வேலையில்லாப் பிரச்னை போன்றவற்றைப்பற்றி மக்களைச் சிந்திக்கத்தூண்டி சமூகத்தில் ஒவ்வொருவரும் பாகுபாடின்றி தொழில் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

உழைக்காமல் சாப்பிடுவோர்தான் மிகவும் இழிந்தவர் என்பது ஆன்ருேர் வாக்கு. எனவே சமூக சீர்திருத்தத்திற்கு நாடகம் ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது. வரலாற்று நாடகத்தின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து அவற்றையும் மேடையேற்றி மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்ட முன்வரவேண்டும். வரலாற்று நாடகங்களையே மக்கள் விரும்பினூர்கள்; தங்கள் நாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகங்களையே பெரிதும் விரும்பி வரவேற்ருர்கள் என்றும் அந் நாடகங்களே ஷேக்ஸ்பியருக்கு பெருவெற்றியைத் தேடிக்கொடுத்தன என்றும் திறனாய்வாளர் தெரிவித்துள்ளனர்.

சமூக நாடகங்கள் அந்தந்தக்கால சூழ்நிலைகளைப் பிரதிபலித்து, அக்கால மக்களைத் திருப்திப்படுத்துவதோடு, வருங்காலச் சந்ததியினரைத் தன்பால் ஈர்த்து அவர்களுக்கும் திருப்தி கொடுக்கக்கூடிய தகைமை பெற்றதாகக் கருதுவதற்கில்லை. இன்றும் ஷேக்ஸ்பியரின் வரலாற்று நாடகங்கள்தான் மிகச் சிறந்தனவாக விளங்குகின்றன. சமூக நாடகங்களை எழுதி உலகப்புகழ் பெற்ற பெர்ஞட்ஷாகூட தனது சமூக நாடகங்களை விடச் ஷேக்ஸ்பியரின் வரலாற்று நாடகங்களே சிறந்ததென்பதை ஏற்றுக்கொண்டார்.

ஷேக்ஸ்பியரை சல்லடைக் கண்ணுகத் துளைத்த பெர்ஞட்ஷாகூட இறுதிக்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கவி நயம்—13

# செவ்வை நெறி காட்டிய ஔவையார்

அன்புள்ள தம்பி,
தங்கைகளே,

சென்ற பன்னிரண்டு வாரமாக நீங்கள் பலவகையான பாடல்களை வாசித்து இரசித்தீர்கள். அண்ணன் ஆடும் கிளித்தட்டையும், குப்பன் செய்த தப்பையும், பகிர்ந்து கொடுக்காத அண்ணனையும். அசுத்தம் நிறைந்த பையனையும் கண்டு களித்தீர்கள். வெருளியும், பலூன்காரனும், ஏழைச் சிறுமியும் காற்று மாமாவும் உங்களை மனமகிழச் செய்தார்கள். இவை எல்லாம் எளியஇனிய பாடல்களே. இக்காலப் புலவர்கள் பாடியவையேதான் இவை.

இற்றைக்கு எத்தனையோ நூறுவருடங்களுக்கு முன் குழந்தைகளாகிய உங்களுக்கென்றே பாடிய ஒரு புலவர் இருந்தார். அவர்பெயர் ஔவையார். குடுகுடுகிழவி. ஆனாலும் அவர் ஊர்தோறும் திரிந்து குழந்தைகளுக்கு நன்னெறிகளைப் போதித்தார். வாழும் வகைபற்றிச் சொன்னார். அவர் தான் குழந்தைகளின் உண்மையான குரு. குழந்தைக் கவிஞர்களின் குருவானபடியால் அவரைப்பற்றி நீங்கள் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும். அவரைப் பற்றிய பாடலைத்தான் இவ்வாரம் சொல்லியிருக்கிறேன். ஔவையார் எப்படிப்பட்ட புலவர்; மற்றப் புலவர்களிலும் பார்க்க எவ்வகையில் வேறானவர் என்பதை ஒரு கவிஞர் அருமையாகப் பாடியுள்ளார். பாடல் இது:-

## —இரசிகமணி கனக. செந்திநாதன்—

செந்தமிழ் நாட்டுக்
குழந்தைகட்குப் - பாடல்
தெளிவாய்ப் புரியப்
பாடுவதே
தந்தொழில் கடமை
நோக்கமெனக்-கொண்ட
தமிழ்ப் புலவர்நம்
ஔவையாரே.

சின்னஞ் சிறுவர்க்கு
நல்லபாடல்-சொல்லிச்
சிறப்பாய் வாழ்ந்திடச்
செய்தால்தான்
பின்னிந்த நாடு
மொழிவளரும்-என்ற
பேருண்மை சொன்ன
வர்
ஔவையாரே.

தள்ளாத வயதுக்
காலத்திலும்-கையில்
தடியை ஊன்றி
நடைநடந்து
பிள்ளைப் பாடல்களை
நாட்டிலெங்கும்-சொன்ன
பெண் குலத்
தெய்வம்நம்
ஔவையாரே.

பல வருடங்கள் வாழ்ந்தவர் அவர். ஊர்தோறும் சுற்றிப் பல அனுபவங்களைக் கண்டவர் அவர். அரச மாளிகையிலும் பொருளற்ற ஏழையின் குடிசையிலும் வாழ்ந்தவர் அவர். அறுசுவை உண்டி அருந்திய அவர் ஏழையின் கூழையும் விரும்பி உண்டார். அப்படி அவர் பெற்ற அனுபவங்களைக் குழந்தைகளுக்குப் பாடலாகச் சொன்னார். இனியதமிழில்எளிமையாகச் சொன்னார்.

அவர் குழந்தைகளாகிய உங்களுக்காகச் செய்த நூல்கள் நான்கு. அவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பவைகளாம். நீதிவெண்பா என்ற நூலையும் அவர்செய்ததாகச் சொல்கிறார்கள். இவற்றைக் குழந்தைகளாகிய நீங்கள் இளமையிலேயே மனப்பாடஞ் செய்து வைத்துக் கொள்ளல்வேண்டும்.

அவர் செய்த நூல்களை ஒன்றாகப்பாடலில் அமைத்துக் கவிஞர் தந்திருக்கிறார். மனப்பாடஞ்செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

நல்வழி மூதுரை
நீதிவெண்பா-உயர்
ஞானக் குறள்வெண்பா
ஆத்திசூடி
பல்லோரும் போற்றிடும்
கொன்றைவேந்தன்-இவை
பாடிக் கொடுத்தவர்
ஔவையாரே.

இந்த நூல்களைப் பற்றி எழுதியிருக்கும் அறிஞர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: சிறுவர்கள் நயமாகப் படிப்பதற்கு ஏற்றபடி இத்துணை எளிமையாக இயற்றியுதவிய ஆசிரியர் எவரும் இலர். நல்லதமிழ்ச் சுவையும் இயல்பான சொற்பொருள் ஒழுக்கமும் உண்மையும் நுண்மையும் திருத்தமும் பொருத்தமும் வாய்ந்து இனிமை கனிந்து... எளிமையாகவும் திகழ்கின்றன இவர் பாடல்கள். இந்த ஆற்றல் ஔவையாரைப் போன்ற கனிந்த பெரிய தாய்மையுள்ளம் வாய்ந்த அருட்சான்றோர்க்கே கிட்டும்.''

இப்படிப்பட்ட ஔவையாரை வாழ்த்தி அவர் நூல்களைப் படித்தல் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

செவ்வையாய்ச் செந்தமிழ்ப்
பிள்ளைகட்குப்-பாடல்
செய்யுங் கவிஞரைத்
தோற்றுவித்த
ஔவைப்பிராட்டியைப்
போற்றிநிதம்-தமிழ்
அன்புக்குழந்தைகள்
வாழ்த்திடுவோம்.

'ஔவைக்கிழவிநம்கிழவி' என்ற பாடலை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதனோடு இதையும் பாடி மகிழுங்கள். இதை எழுதியவர் கவிஞர் தமிழ்முடி. அவரது நூல் பிள்ளைக்கனியமுது. புத்தகப் பண்ணை (தியாகராயநகரம் சென்னை-17) என்ற நிலையத்தார் இந்த நூலை வெளியிட்டிருக்கிறார்கள். முழுப்பாடல்களையும் ஒருசேரத் தந்திருக்கிறேன். பாடிப்பாடுங்கள்.

செந்தமிழ் நாட்டுக்
குழந்தைகட்குப்-பாடல்
தெளிவாய்ப் புரியப் பாடுவதே
தந்தொழில் கடமை
நோக்கமெனக்-கொண்ட
தமிழ்ப் புலவர்நம்
ஔவையாரே.

ஆடி விளையாடும்
பிள்ளைகளும்-தாமே
அறிந்து பாடி மகிழ்ந்திடவே
பாடிக் கொடுத்தநம்
ஔவையாரைத்-தினம்
பணிந்து போற்றி
வணங்கிடுவோம்.

சின்னஞ் சிறுவர்க்கு
நல்லபாடல்-சொல்லிச்
சிறப்பாய் வாழ்ந்திடச்
செய்தால்தான்
பின்னிந்த நாடு மொழி
வளரும்-என்ற
பேருண்மை சொன்னவர்
ஔவையாரே.

தள்ளாத வயதுக்
காலத்திலும்-கையில்
தடியை ஊன்றி
நடை நடந்து
பிள்ளைப் பாடல்களை நாட்டி
லெங்கும்-சொன்ன
பெண்குலத் தெய்வம்நம்
ஔவையாரே.

நல்வழி மூதுரை
நீதிவெண்பா-உயர்
ஞானக் குறள்
வெண்பா ஆத்திசூடி
பல்லோரும் போற்றிடும்
கொன்றைவேந்தன்-இவை
பாடிக் கொடுத்தவர்
ஔவையாரே.

செவ்வையாய்ச் செந்தமிழ்ப்
பிள்ளைகட்குப்-பாடல்
செய்யுங் கவிஞரைத்
தோற்றுவித்த
ஔவைப் பிராட்டியைப்
போற்றிநிதம்-தமிழ்
அன்புக் குழந்தைகள்
வாழ்த்திடுவோம்.

## சின்னப் பெண்

—மு. சு. கதிர்காமத்தம்பி—

சின்னப் பெண்பார் சிரிக்கிறாள்
சிரிப்பு வலையில் மயக்கிறாள்
கன்னம் குழிந்து சிவந்திடவே
கனிந்து கதைகள் சொல்கிறாள்.
(சின்)

அன்னம் போல நடை நடந்து
அழகு காட்டி அழைக்கிறாள்
வண்ணமயில் போல் வளையவந்து
வையம் மறக்கச் செய்கிறாள்
(சின்)

முத்துப்போல முறுவல் சிந்தி
முயங்கி என்னை அணைக்கிறாள்
தத்தித்தத்திக் கிள்ளை போலத்
தாளம் போட்டு பேசுறாள்.
(சின்)

சொன்ன சொல்லுக் கேட்டு நின்று
செல்லக் கோபம் கொள்கிறாள்
சின்ன வேலை செய்வ தெல்லாம்
சோற்றுக்காமோ என்கிறாள்.
(சின்)


பின்னி விட்ட சடை இரண்டைப்
பிரித்துக் கரடி காட்டுறாள்
முன்னைப் பின்னைத் தொடர்பில்லாமல்
முழுப் பொழுதும் ஈர்க்கிறாள்.
(சின்)

பித்தன் போல இருந்த என்னைப்
பிள்ளை யாக்கிக் கொஞ்சுறாள்
நித்தம்போல முத்தம் தந்து
நெஞ்சில் நிறைந்து நிற்கிறாள்.
(சின்)

# ஒன்பது கிரகங்களுள் ஒன்றான புதன்

— க. து. பத்மநாதன் —

ஒன்பது கிரகங்களிலும் புதனே மிகச்சிறியது. மேலும் சூரியனுக்கு மிக அருகில் இருப்பதும் இதுவே புதன் சூரியனை 88 நாட்களுக்கு ஒரு முறை சுற்றிவருகின்றது. ஆனால் பூமியும் அதோடு சேர்ந்து சூரியனைச் சுற்றுவதால் புதன் வானில் ஒரு குறிப்பிட்ட இடத்தினின்றும் புறப்பட்டு திரும்பவும் அதே இடத்திற்கு வர 116 நாட்கள் ஆவதுபோல் தோன்றுகிறது. இவற்றுள் குறுகிய கால அளவு, புதன் தன் முந்தைய இடத்தைத் திரும்பவும் அடைவதை கதிரவனோடும் நட்சத்திரங்களோடும்சம்பந்தப்படுத்திப்பார்க்கும்போது கிடைத்த கால அளவாகும். இக்குறுகிய காலத்தைப் புதனின் விண்மீன் சம்பந்தமான சுழற்சி (Sidc real revolution) என்பர். புதனின் சுழற்சியில் நீளமான காலத்தை ஸைனுடிக்கல் சுழற்சி (Synodical revolution) என்பர்.




புதன் சூரியனைக் கடத்தல் 13-7-70 அல்லது 3 வருடங்களுக்கொருமுறை நிகழ்கிறது. மே 7-ம் திகதியன்றும் நவம்பர் 9-ம் திகதியன்றும் புதன்பூமியில்அயனப்பாதையின் தளத்தைக் கடந்து செல்கிறது. ஆகவே இத்தினங்களில்தான் சூரியனைக் கடத்தலும் நடைபெறுகிறது.

மே மாதத்தில் புதன் தனது இறங்கு கோளசந்தில் (Descending node) நுழைகிறது. இச்சமயத்தில் புதன் தனது அஃபீலியன் நிலையில் இருப்பதால் அது சூரியனிலிருந்து அதி தொலைவிலும் பூமிக்கு மிக அருகிலும் வருகிறது. இச்சமயத்தில் பூமியிலுள்ளவர்களுக்குப் புதன் மிகப் பெரியதாகத் தெரியும்.

நவம்பர்மாதத்தில்இதற்கு முற்றிலும் மாறுதலையான சூழ்நிலை ஏற்படுகின்றது. புதன் பெரிஹீலியன் நிலையில் இருப்பதால் அது சூரியனுக்கு மிக அருகிலும் பூமிக்கு வெகு தொலைவிலுமாகச் செல்கிறது. சூரியனை கடக்கும்போது அதன் பரப்பிற்கு எதிராகப் புதன் செல்லும் பாதையின் நீளத்தைப் பொறுத்து சூரியனைக் கடக்கும் கால அளவு மாறுபடும். சூரியனின் விட்டத்தின் பாதையில் குறுக்காகப் புதன் தன் பாதையில் சென்றால் சூரியனைக் கடத்தல் சுமார் 9 மணி நேரம் வரை நிகழும்.

சூரியனைக் கடத்தல் நிகழாத மற்ற நாட்களில் புதன் ஒரு பிறையை ஒத்த வடிவில்தோற்றம்அளிக்கும். புதன் தனது புறச்சேர்வு நிலையிலோ (Superior conjunction) அல்லது அந்நிலையை அடையும் தறுவாயிலோ இருக்கும்போது தான் ஏறக்குறைய அதன் முழு உருவைப்பார்க்கலாம். புதன் தன் முழுவடிவத்தில் இருக்கும்போது அது மிகச் சிறியதாகத் தெரியும். புதன் எங்கிருந்தாலும் நாம் அதைக் காலையிலோ மாலையிலோ மங்கிய ஒளியிலோ தான் காணமுடியும்.

ஈரிப்புவிகிதப்படி புதனின் நீண்ட வட்ட வடிவமான பாதையின்நீண்ட முனைகளை இணைக்கும் கோடு ஒரே இடத்தில் அமைந்திராமல் மெதுவாக நகர்ந்து ஞாயிறைச் சுற்றிவருவதாக அறியப்படுகிறது. புதன் செல்லும் அயனப் பாதையை விட சூரியனுக்கு மிக அருகில் வேறு ஏதேனும் ஒரு கிரகத்தின் அயனப்பாதை இருக்கலாம் என்றும் அப்பாதையில் செல்லும் கிரகத்தினால்தான் இவ்வெளிக்கவர்ச்சி ஏற்படுகிறது என்று வான ஆராய்ச்சியினர் கருதுகின்றனர். அப்படி ஒரு கிரகம் இருப்பதாக நம்புவதினால் அதனைக் கண்டுபிடித்து அதற்கு வல்க்கன் (Vulcan) எனப் பெயர் இடுவதுஎன்று இருக்கின்றார்கள்.

# அற்புத நிழல்

வெகுகாலத்துக்கு முன்பு தேவர்களே வியக்கும் வண்ணம் மகான் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய சாந்தமான புன்னகையும், தயையும், பொறுமையும், ஈகையும் ஆகியவற்றால் அவரது வாழ்க்கை பிரகாசித்து விளங்கியது. தேவர்கள் இவருக்கு ஏதாவது வரம்கொடுக்க விரும்பி அந்த மகானை அணுகி. 'தங்களுடைய கை பட்டதும் நோய்வாய்ப்பட்டவர் குணமடையும் சக்தி வேண்டுமா;' என்று கேட்டார்கள். அதற்கு மகான் 'வேண்டாம், அது கடவுள் செய்ய வேண்டிய காரியம்' என்றார். 'குற்றம் செய்தவர்களைத் திருத்தியும், நெறி தவறியவர்களை நேர்பாதையில் செல்லும்படி செய்தும் வழிகாட்டியாக இருக்க உங்களுக்கு இஷ்டமா?' என்று தேவர்கள் கேட்டனர். அதற்கு மகான், 'வேண்டாம்! அது தேவர்களின் தொழில் என்றார். 'சரி, தங்கள் தேஜஸால் மனிதர்களை ஆகர்ஷிக்கும் பொறுமை வடிவமாக இருக்க இஷ்டமா?' என்றார்கள். 'வேண்டாம்! மனிதர்கள் என்னை இறைவனாகப் பாவிக்க ஆரம்பித்துவிட்டால் பரமனை அவர்கள் மறந்து விடுவார்கள்' என்று அதையும்மறுத்தார் மகான். தேவர்கள், 'நீங்கள் ஏதாவது ஒன்று கேட்டுத்தான் ஆகவேண்டும்' எனப் பிடிவாதமாகச் சொன்னார்கள். 'நல்லது, எனக்குத் தெரியாமலேயே நான் பிறருக்கு எப்போதும் நன்மைசெய்து கொண்டேயிருக்கவேண்டும்' என்றார் அப்படியே அந்த மகான் சென்ற இடமெல்லாம் எங்கெங்கு அவர் நிழல் பட்டதோ அங்கங்கே வரண்ட நிலம் பசுமையாயிற்று; வாடிய செடிகள் தளிர்த்தன: வற்றிய ஆறுகள் பிரவாகமெடுத்தன; குழந்தைகளின் முகம் புதுமலர்போல் பிரகாசித்தது.

மக்கள் அவருடைய அடக்கத்தை மிகவும் பாராட்டி, அவர் பின்னாலேயே சென்றார்கள். அவருடைய அற்புதச் செய்கைபற்றி அவர் பெயர் மறந்துபோய் அவருக்கு 'அற்புதநிழல்' என்ற பெயரே உண்டாகி நிலைப்பட்டது.

பிரெஞ்சு - ரோத்க்ராஃப்ட்.
தமிழில்-சுந்தரேசன்ராமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்து கொள்ளலும்; கொடுத்தலும்!

முன்பின் தெரிவிக்காமல் விருந்தாளியாக யார் வருகிருரோ அவரையே நாம் அதிதி என்று சொல்லுகிருேம். பழைய நாட்களில் வீட்டில்சமையல் ஆனவுடன் வீட்டின் வெளிப்புறத்துக்கோ இல்லை கிராமத்தின் பொது இடத்துக்கோ வந்து விருந்தாளி யாரேனும் இருக்கிருர்களா யாராவது பசியோடு இருக்கிருர்களா என்று பார்த்து உணவு படைக்கவேண்டும் என்பது ஒவ்வொரு கிருகஸ்தனுக்கும் குலதர்மமாகவிருந்தது. நம் தர்ம சாஸ்திரங்கள் மைகள் மனிதனைத் தாக்குவதில்லை. இப்போது நியூயார்க்கும் டோக்கியோவும் பத்துத் திசையிலும் பரவி விட்டன. ஆகவே இந்த சூழ்நிலையில் விருந்தோம்பலைப் பற்றி நாம் மீண்டும் சிந்திக்க வேண்டும், இல்லாவிட்டால் அதிதி தேவனுக்குப் பதில் ராட்சசன் ஆகிவிடுவான். என்னுடைய வாழ்நாள் முழுவதும் நம் நாட்டிலும் அயல்நாட்டிலும் விருந்தோம்பலைப்பற்றி அறிவதில் கழிந்திருக்கிறது. விருந்தினரை உபசரிப்பதில் இல்லத்தவர்களுக்கு எத்தனை

■ அப்படி இயலாது என்ருல் நீங்கள் எனக்காகக் காத்திராமல் உரிய வேளையில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விடுங்கள். இல்லாவிட்டால் எனக்காகக் காத்திருந்தால் எனக்கு மனத்துயர் ஏற்படும். தங்களிடம் வர சங்கோசமாக இருக்கும்' என்று எழுதி விடுங்கள்.

■ யாரிடமாவது விருந்தாளியாகச் சென்றீர்கள் என்ருல் குறைந்த பட்சநபர்களையே அழைத்துப் போங்கள். நகரங்களில் ஒவ்வொரு மனிதரின் பராமரிப்

## விருந்தோம்பலில் கடைப் பிடிக்க வேண்டிய சில நியதிகளைப் பற்றி விளக்குகிருர் இக் கட்டுரை ஆசிரியர்

கிருகஸ்தனின் விருந்தோம்பல் நியமங்களைப்பற்றி நிறையப்பேசுகின்றன. ஆனு விருந்தாளிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்ற வரையறை ஏதும் தரவில்லை,

நம் பழைய நாகரிகம் கிராமங்களையே முக்கியமாகக் கொண்டது. கிராமங்களில் அதிதிகள் மிகவும் குறைவு. அவர்களை உபசரிப்பது ஆனந்தம் தரும் செயல். விருந்தாளிகள் பல தேசங்களினின்றும் வந்ததால் உபசரிப்பின்மூலம் அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்

சோதனைகள் ஏற்படுகின்றன என்பதை நான் அறிவேன். முன்னெல்லாம்விட இப்போது அதிதி தர்மத்தை நான் நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே முன்பு எப்படி கிருகஸ்தர்களுக்கு விருந்தோம்பலைப் பற்றி உபதேசித்தார்களோ அதுபோல இன்று விருந்தாளிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று உபதேசிக்க ஒரு ரிஷி உன் ம... எடுக்கவேண்டுமென்று கூறுவேன்!

சில நியமங்களை இதோ தருகிறேன்.

புக்கும் கணிசமாகச் செலவாகும். அதற்கான சக்தியை லேசில் பெறமுடியாது.

■ சில மனிதர்கள் தம் இல்லங்களில் விருந்தாளிகளுக்கு உணவு படைப்பார்கள், ஆனுல் அவர்களால் தங்கவும் உறங்கவும் இடம் தர இயலாது, அல்லதுஇடம் தரமுடியும் ஆனுல் உணவு வழங்க இயலாது.

■ முன்னெல்லாம் விருந்தாளிகள் அவரவரின் ஜாதி மதங்களைச் சேர்ந்தவரின் இல்லங்களுக்கே சென்றதால் அவர்களுடைய நித்திய பூஜை, நியமங்களை முறைப்படி எவ்வித இடையூறும் இல்லாமல் நிறைவேற்றிவர முடிந்தது. இப்போது நாம் விசாலமனமுடையவராகிவிட்டோம். ஜாதிமத பேதம் இல்லாமல் விருந்தினரை உபசரிக்கிருேம். ஆகவே நாம் விருந்தாளிகளாகப் பிறர்வீடு செல்லும்போது அவருடைய கருத்துக்கள், பழக்க வழக்கங்களைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். மரக்கறி உண்ணுபவர்களின் வீட்டில் மாமிச உணவை எதிர்பார்க்கக்கூடாது என நாம் உணர்வோம். ஆனுல்

**— 'காகா காலேல்கா' —**

ளும் வாய்ப்பு எளிதில் ஏற்பட்டது. ஆனுல் இப்போதோ கிராமங்கள் சிதைய ஆரம்பித்து நகரங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. ஓர் எல்லை வரம்பு இல்லாமல் நகரங்கள் பெருகிவருகின்றன. எங்கேயெல்லாம் கிழக்கு மேற்கு என்று எட்டுத் திசைகளிலும் பெருகுவது கடினமாகிவிட்டதோ அங்கேயெல்லாம் ஆகாசத்திலும் பூமிக்கடியிலுமாக நகரங்கள் வளர்கின்றன அங்கே செயற்கை வெளிச்சம், செயற்கைக்காற்று இவை காரணமாக இயற்கையின் கொடு

■ இயன்றவரை நகரில் வாழ்பவர்களின் விருந்தாளிகளாவதைத் தவிர்க்க வேண்டும்.

■ அப்படிச் சென்றுதான் ஆகவேண்டுமென்ருல் முதலிலேயே அறிவித்துவிடுவது சிறந்தது. அத்துடன் எத்தனை நாட்கள் தங்க நேரிடும் என்பதை குறிக்க வேண்டும்.

■ சிலஇல்லங்களில்உணவு அருந்தும் நேரம் குறிப்பிட்டிருக்கும். அந்தச் சமயம் செல்ல முடியாமற்போனுல் முன்பே சாப்பிட்டு வந்துவிடுவதாக அறிவித்துவிட வேண்டும்.

சிறுவிஷயங்களில்கூட இல்லத்தவரின் மனப்போக்கு கஷ்டங்கள் இவைபற்றிநாம் குறிப்பறிந்து நடக்கவேண்டும்.

■ உணவு முதலியவற்றில் விரதம் அனுஷ்டிப்பவர்கள் மற்றவர்களின் விருந்தினராகப் போகும்போது சூழ்நிலையைப் பொறுத்அ தமது அனுஷ்டானத்களைச் சற்றே தளர்த்திஞல் விரோதம் எதுவும் இல்லை, எல்லாவற்றிலும் சிறந்தது கிளம்புவதற்குமுன்னே தம் நியம—நிஷ்டைகளை இல்லாதவர்களுக்கு எழுதித் தெரிவித்து விடுவதுதான்.

■ இன்னெரு மதத்தவரின்விருந்தினராகப் போகும்போதுஅவர்களுடைய மனப்போக்கை மதித்து நாம் நடக்கவேண்டும். அதுமட்டுமல்ல; நம்மைப்பற்றிஅவர்கள் ஏதாவது கேட்டால்' நாம் நம் பண்பாட்டுச் சிறப்பைத் தற்புகழ்ச்சியாகப் பேசி அவர்களை இழிவுபடுத்தக்கூடாது.

■ நாம் விருந்தினராகப் போகும் இல்லத்தவரின் மனைவியர், குழந்தைகளுக்கு உபதேசம் செய்யும் எந்த வாய்ப்பையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. விருந்தினராகச் சென்று பிரசாரம் செய்யும் பொறுப்பு ஏதும் வேண்டாம் கூடியவரை இல்லத்தவர்க்கு சுமைஏதும் தரக்கூடாது என்பது விருந்தாளிகளின் முதல் தர்மமாக இருக்கவேண்டும்.

எல்லாத் தேசங்களிலும் விருந்தோம்பல் உண்டு ஒவ்வொரு கலாச்சாரமும் ஒன்ருெடொன்று வேறுபடாமல் இல்லை. ஒவ்வொன்றும் அதனதன் முறையில் வளர்கிறது. ஒவ்வொரு முறையிலும் நிறைகுறை இரண்டும் உண்டு, ஆகவே திறந்த மனத்துடன் அவற்றைப் பயின்று 'உலகமே ஒருகுடும்பம்' என்ற கருத்தைவளர்ப்போம்:

## நல்ல குடும்பம் அமைத்திடுவோம்!

நல்ல குடும்பம் அமைத்திடுவோம்—அதில்
நிம்மதி என்றும் சமைத்திடுவோம்!
செல்லக் கிளிகள் பெற்றிடுவோம்—வாழ்வில்
சீரும் சிறப்பும் அடைந்திடுவோம்!

வாழ்க்கையின் தத்துவம் கற்றிடுவோம் - அதன்
விளக்கம் எல்லாம் பெற்றிடுவோம்!
ஆழ்ந்த சிந்தனை ஊட்டிடுவோம் வாழ்வை
அழகாய் வாழ்ந்து காட்டிடுவோம்!

இல்லறம் என்பது நாமிருவர்—அதன்
நல்லறம் என்பது நமதிருவர்!
சொல்லறம் இதனை விண்டிடுவோம்—நல்ல
சாந்தி மார்க்கம் கண்டிடுவோம்

ஆசையை அடக்கி ஆண்டிடுவோம்—நல்ல
பாசம் மனதில் தோண்டிடுவோம்
நேசம் நெஞ்சில் வளர்த்திடுவோம்—அமைதி
நிலைபெற என்றும் உழைத்திடுவோம்

— அக்பர்தீன்

## வெள்ளைப் பூண்டின் பெருமை

சோவியத் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்மூலம், நோய்களைத் தோற்றுவிக்கும் சில நுண்ணுயிர்களை எதிர்த்துப் போராடுவதில், ஆன்டியாட்டிக் மருந்துகளைக் காட்டிலும் வெள்ளைப்பூண்டு மிகவும் சக்திவாய்ந்தது என்று தெரியவந்துள்ளது.

10 சதவீத வெள்ளைப் பூண்டுச்சாறு கலந்த திரவத்தைக் கொண்டு, 638 பக்டீரியாக் கிருமிகளைச் சோதித்துப் பார்த்தபோது, அந்தத் திரவம் அத்தனை கிருமிகளையும் கொன்றுவிட்டது ஒரு சதவீத வெள்ளைப்பூண்டுச்சாறு கலந்த திரவத்தைக் கொண்டு சோதித்துப் பார்த்தபோது அவற்றில் பலவும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

மேலும் இதேவகையான பக்டீரியாக்களைப் பென்சிலினே, ஒக்சிடெட்ராஸைக்கிளினே எதுவும் செய்ய முடியவில்லை என்றும், அன்டிபயோட்டிக் மருந்துகளும் கூட இவற்றை லேசாகத்தான் பாதித்தன என்றும் சோதனைகள் புலப்படுத்தியுள்ளன.

> வயதான மனைவியும், வயதான நாயும் எப்பொழுதும்கையில் தயாராக இருக்கும் பணமும் ஒரு மனிதனின் உயர்ந்த விசுவாசமுள்ள நண்பர்கள்.
>
> — டால்ஸ்டாய்

## மரக்கறி போண்டா

கடலைப் பருப்பு 1/4 இரு
கரட் 3
காலிபிளவர் கொஞ்சம்
பச்சைப்பட்டாணி 1/2 கோப்பை
வெங்காயம் 1/4இரு
பச்சைமிளகாய் 5
தேவையான உப்பு
கடலை எண்ணெய் 1/4 போத்தல்

முதலில் கடலைப் பருப்பைச் சிறிது தண்ணீர் விட்டு ஊறவைக்க வேண்டும். அதைச் சுத்தம் செய்தபின்னர் கல்லுரலில் போட்டு ஒரு மேசைக்கரண்டி உப்பையும் போட்டு துவைத்து எடுக்க வேண்டும். பின்னர் குறுணலாக நறுக்கி வைத்த கறட், காலிபிளவர்; பச்சை மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை இவற்றுடன் கலந்து உருண்டையாகப் பிடித்து எடுத்த பின்னர் வாணலிச்சட்டியில் எண்ணெயைக் காயவைத்துஇவ்வுருண்டைகளைப் பொரித்து எடுக்கவும். காரம் சாப்பிட விரும்புபவர்களுக்கு இது மிகவும் சுவையாக இருக்கும்.

## குழந்தையின் அறிவுவளர..

குழந்தைகளை வளர்ப்பது பெரிதல்ல; அவர்களின் அறிவை வளர்ப்பதே அதைவிடப் பெரிது. அல்லது தானே வளரும் அறிவையாவது தடைப்படுத்தாமலிருப்பது நல்லது

''சோற்றை உருட்டாதே! உருட்டினுல் தாய் தகப்பனை உருட்டிவிடுவாய்!'' என்று சொல்லாதீர்கள்.

''சோற்றை உருட்டிக்கொண்டிராதே! விரைவாய் சூட்டோடு' சாப்பிடு! இன்றேல் செரிக்காது!'' எனச் சொல்லுங்கள்.

''சாப்பிடும்போது ஒரு விரலை நீட்டிக்கொண்டே சாப்பிடாதே! சாப்பிட்டால் குடும்பத்திற்கு ஆகாது'' எனச் சொல்லாதீர்கள்'

''சாப்பிடும்போது ஒருவிரலை நீட்டிக்கொண்டே சாப்பிட்டால் விரல் நகத்தால் கண்ணுக்கு ஆபத்து'' எனச் சொல்லுங்கள்.

''இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே! போனுல் சாஸ்திரத்திற்கு ஆகாது'' எனச் சொல்லாதீர்கள்.

''இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே! போனுல் எந்தக் கழுதையாவது உதைக்கும்'' எனச் சொல்லுங்கள்,

—கி. ஆ, பெ,விஸ்வநாதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

என்ற மட்டக்களப்பு நாட்டுக்கூத்துவேறு ஆடப்போகிறார்களாம், மாலை மட்டதுதான் தாமதம் வேல் முருகு கோயிலுக்குக் கிளம்பிவிட்டான். ஆனால் நல்லதம்பியின் மனமோ பல எண்ணங்களின் மத்தியில் சிக்கித் தவித்தது. ஒரு முடிவுக்கு வராமல் அவதிகண்டது. கடைசில் இருமனத்தோடு அங்கே புறப்பட ஆயத்தமானான்.

கோயிலுக்குப் போவோர் வீதியால் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தனாக நல்லதம்பியும் போனான். கோயிலுக்கல்ல. தங்கத்தின்வீட்டுக்கு. கண்களை அக்கம்பக்கங்களில் ஒரு தரம் செலுத்தி மெதுவாகத் தங்கத்தின் வீட்டு வளவுக்குள் காலைவைக்கிறான். ஒரு குப்பி விளக்கு மங்கலாக எரிவதுமட்டும் தான் அவன் கண்களுக்குத் தெரிகிறது. மனிதர்களற்ற தீவில் போனவனின், மனப் பீதியோடு வீட்டைநோக்கிச் செல்லுகிறான். உடம்பு ஆறாக வேர்த்துக்கொட்ட வீட்டின் கதவைத் தட்டுகிறான். கதவு திறபடவில்லை. வீட்டிலுள்ளிருந்து ஒருவித ஓசையும் எழவில்லை. திரும்பவும் கதவைத்தட்டுகிறான். ",யாரி? என்னவேண்டும்?'' ஒருசுருதி குறைந்த குயிலின் குரல் வீட்டினுள்ளிருந்து வெளிக்கிளம்பியது. நல்லதம்பிக்குப் பதில்கூற வாய் வரவில்லை சிலையாட்டம் நின்றவன் ஏதோ ஓர் உணர்வால் தன்னை மறந்து 'நான் தான்உங்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியர், கதவை திறவுங்கள்'' சத்தம் போட்டுச் சொல்கிறான். ஒரு சில நிமிஷங்களுக்குப்பின்படீரென்று கதவு திறக்கப்படுகிறது.

நல்லதம்பி வீட்டுக்குள் காலைவைக்கிறான், சோகமயமான கோலத்தோடு. தங்கம் மட்டுமே திகைப்படைந்தவளாய் நிற்கிறாள். அவன் ஏதுசெய்வதென்று புரியாமல் குழம்பிநின்றவேளையில் அடுக்களைப்பக்கமிருந்து ஓர் உருவம் வருவதை உணர்ந்தான். அந்த உருவத்தைப் பார்த்தானோ என்னவோ அந்த உருவம் அவனைப் பார்த்த மாத்திரத்தில் 'மாஸ்ரர் தம்பியா வா தம்பி, இரு தம்பி'' என்று கூறிக்கொண்டு ஒரு கதிரையைத் தூக்கிப் போட்டது. கண்களை அகலத் திறந்து அந்த உருவத்தைப் பார்த்துவிட்டு கதிரையில் அமர்ந்துகொள்கிறான் அவன்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு தங்கத்தின் அம்மா வாயைத் திறக்கிறாள். 'தம்பி எங்களைப்பத்தி கேவலமாக இந்த ஊரே சொல்லி வருவதைக் கேட்டிருப்பீங்கஇல்லையா'-அவளது வார்த்தைகள் வரமுடியாமல் வெளிவருகிறது. 'ஆமாம் ஊர்நாலும் கதைக்கும். அதற்கு வேறென்ன வேலையிருக்கிறது' - உணர்ச்சித் துண்டங்களாக வார்த்தைகள் அவனது வாயிலிருந்து வெளிக்கிளம்புகிறது. தங்கம் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து மேசையில் வைக்கிறாள். தங்கத்தின் இளமை பொங்கும் எழிலை இமைகொட்டாமல் பார்த்த நல்லதம்பியைநோக்கி'தேத்தண்ணியைக் குடியுங்க தம்பி' என்று பொன்னம்மா கூறுகின்றாள். ஒருவித சந்தோஷமுமின்றி தேநீரைப் பருகிவிட்டு நிமிர்ந்த அவனைப் பார்த்து 'தம்பி நீங்களெல்லாம் எங்க வீட்டுக்கு வரலாமா? எங்களால் நீங்க பழிக்காவதை நாங்க விரும்பல்ல' தங்கத்தின் அம்மாதான்சொல்லுகிறாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நல்லதம்பியின் முகம் சிவந்து விரிகிறது. அவனது அழகிய கறுத்தமீசை துடித்து நிமிருகிறது. அடுத்தகணம் 'ஊரைப்பற்றி நீங்க ஒண்ணும் நினைக்கத் தேவையில்லை. உங்கள் குடும்பத்தைப்பற்றி ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்திருக்கிறேன் அந்த முடிவு பலநாள் என் மனத்தோடு போராட்ட மடித்து இன்று வெற்றி கண்டிருக்கிறது. உங்கள் மனம் விரும்பாவிட்டாலும் நான் அந்த முடிவைச் செய்தே தீருவேன்' மகுடியின் நாதத்தால் கட்டுண்டு கிடக்கும் நாகபாம்புபோல் நல்லதம்பியின் வார்த்தைகளைக்கேட்ட தங்கமும் பொன்னம்மாவும் ஆனார்கள்.

மௌனத்திரையால் மறைப்புண்டுகிடந்த அந்த இரு உள்ளங்களும் திணுக்கிட்டு விழித்து பரிதாபமாக அவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்க அவன் ''இதுவரை தங்கம் செத்தது போதும். இனி மேலும் சாக நான் அனுமதிக்கப்போவதில்லை. ஒரு பெண்ணின் இளமை, ஆசை, காதல். இன்பம் வீணாய்ப்போவதை ஒரு நல்ல இதயம் படைத்த இளைஞன் பொறுத்துக்கொள்ளமாட்டான். ஊர் பழித்தாலென்ன. சமுதாயமே இகழ்ந்தாலென்ன நான் கவலைகொள்ளப்போவதில்லை. எங்கள் ஊருக்குப் போகும்படி எனக்கு மாறுதல் வந்துவிட்டது. அதனால் நான் தங்கத்தை என் வாழ்க்கைத் துணைவியாக அன்பு மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்துவிட்டேன். என் தீர்மானத்தை ஒருத்தருமே மாற்ற முடியாது அடுத்த கிழமை தயாராக இருங்கள், என்னோடு புறப்பட நான் வருகிறேன்.'' வார்த்தைகளைக் கக்கிவிட்டு, வேகமாக வெளியேறும் நல்லதம்பியை, அந்த ஆதரவற்ற 'இரு உயிர்களும்' இமை கொட்டாமல் சனிவாகப் பார்த்தவண்ணமே நின்றன!

(யாவும் கற்பனை)

# மாவிட்டபுரம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவிட்டபுரத்திலும் அதன் சுற்றயல் கிராமங்களிலும் நடைபெறுவதினாற் போலும் இவ்வூர்களில் கமக்குடி மக்களின் இல்லங்களில் வெற்றிலைச் செல்வம் ஈட்டிய லட்சுமி கடாட்சம் நிறைந்து பொலிகிறது. வெற்றிலை போட்டுக்கொண்டாலே முகத்துக்கு ஓர் அழகும் பேச்சில், செயலில் ஒரு புதிய உற்சாகமும் நாலு பேர் மத்தியில் ஒரு நல்லிணக்க நல்லுறவு மனப்பான்மையும் ஏற்படுகிறதல்லவா? பழையநாளில் இன்றைக்கும் கூடத்தான் வெற்றிலையை வைக்காத சுபகாரியங்கள் தமிழ்மக்கள் வாழ்க்கையில் அரிது என்றே சொல்லலாம். பழம்பாக்குடன் வெற்றிலை சுவாமி சந்நிதிவரை போகிறது. நிச்சய தாம்பூலமாக மணமக்களை சோடிசேர்த்துக் கல்யாணங்களை நிர்ணயிக்கும் வெற்றிலை, கல்யாணப் பந்தலுக்கு கன்னிக்கால் நாட்டியதுமுதலாக புதுத் தம்பதிகளின் முதற்சந்திப்பு வரை நின்று சோபனம் கொட்டி குலவி மகிழ்கிறது. 'வெற்றிலை பாக்குச் சிவக்குதில்லை மச்சானே உன் நினைவால்' என்று கொஞ்சுகிறாள் ஆசைக்காதலி. வெற்றிலைத் தோட்டங்களை தமிழ் வைத்தியர்மாரும் முற்றுகையிடுவார்கள், வெற்றிலைச்சாற்று எண்ணெய்காய்ச்சுவதற்கு...

0 0 0

பின்னை ஒருபிடி வெற்றிலை கையிலே கொண்டுபோமன். இவ்வளவுதூரம் வந்துவிட்டு வெறுங்கையுடன் போகலாமா'? அந்தவாலிபர்தான் அவர்களுடன் பேசிக்கொண்டே பறித்த ஒரு கைப்பிடியளவு கொழுந்து வெற்றிலையை மாணவிஒருத்தியின் கையில் வைக்கிறார். அவரது அன்பளிப்புக்கு முகம்மலரச் சிரித்து துதி செலுத்தி அதனை ஏற்றுக்கொண்ட அவள் தெருவோரமாக உச்சிவெயிலில்பொறுமையாக அவர்களுக்காகக் காத்து நின்ற வாகனம் நோக்கி விரையும் சகமாணவத் தோழியருடன் சேர்ந்துகொள்கிறாள்.

அவர்கள் உதடுகள் சிவப்பேறி அழகூட்ட இன்னும் பாக்கு, சுண்ணாம்பு இரண்டும் வேணுமே! இந்த இரண்டும் இல்லாமல்கூட வெறும் துளிர் வெற்றிலையை மென்றாலே அப்பெண்களின் மென்மையான மாந்தளிர் உதடுகளில் சிவப்பு ரோஜா மலரும் கண்டீரோ! (தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பின் அனுபவம்-4

'அதுசரி. கதையிக்கை கதை வழியையல்லோ மாற விட்டுவிட்டம்' என்றுர் நண்பர்.

போச்சு!

'சரிதான்' நாங்கள் எங்கையோவல்லோ வந்திட்டோம்' என்றுர் மற்றவர்.

எங்கும் தேயிலைத்தோட்டங்கள. சுற்றிச்சுற்றிச்செல்லும் பாதைகள். எனக்கும் பாதையை மட்டுக்கட்ட முடியவில்லை. எல்லாம் ஒரே அச்சிலே வார்த்த பாதைகள். இந்தத் தோட்டப் பதைகளின் துப்புரவுபற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது யாரையும் கவரும் அழகில் பாதைகள் உள்ளன. ஒரு கஞ்சல், கடதாசி, புல்லுக்கில்லு எதுவுமே கிடையா.

நாங்கள் சென்று கொண்டிருக்கும் பாதையுடன் வேறுெரு பாதை வந்து இணைகிறது. அப்பாதைவழியாக அன்பர் ஒருவர் வந்துகொண்டிருக்கின்றுர். 'அவரைக்கேட்டுப்பார்ப்போமே' என்று நாமும் சந்தியடியில் நிற்கின்றேம்.

'இந்தப் பாதையாலே மெயின் ரோட்டுக்குப் போகலாமா?'

'போகலாமுங்க. எங்கு போகணுங்க?'

'இராகலை ரவுணுக்கு!'

'அங்குதானுங்க நானும் போய்க்கிட்டிருக்கேன். வாங்க.

'நுவரெலியாவுக்கு இப்ப பஸ் இருக்குமா?'

'இப்போ என்னங்க நேரம்!'

'ஆறு-பத்து!'

'பஸ் இருக்குதுங்க. கறக்டா ஆறரைக்கு ஒரு மெயில் பஸ் வருமுங்க. அது தப்பினு அடுத்தபஸ் இரவு ஒன்பதரை மணிக்குத் தானுங்க,

'சரியாய்ப்போச்சு! கொஞ்சம் கெதியாய் நடவுங்கோ. இல்லையென்றுல் இந்த பஸ்ஸை விட்டுவிட்டு ஒன்பதரைமணிவரைகாத்து நிற்கவேண்டிவரும்' என்றேன் நான்.

'ஆமாங்க. நாங்கூடத்தான் சீக்கிரமாய்ப் போவணும் ஒரு கிழவி செத்துப் போயிட்டுதுங்க. அடுத்த மலையிலே அவங்க பிள்ளையைக் கூட்டீட்டு வரணுமுங்க' என்றவாறே அந்தத் தொழிலாளர் வேகத்தைக் கூட்டுகின்றுர்.

இந்த மலைக்கு அடுத்த மலைக்குமிடையில் நான்கு மைல் தூரமாம், ஆளொன்றையழைத்துக்கொண்டு ஒரு மணித்தியாலத்துக் கிடையில் திரும்பவேண்டுமென்று அவர் நடக்கின்றுர். அதாவது போகவர எட்டு மைல்களை ஒரு மணித்தியாலத்தில் நடந்து முடிக்கத்திட்டம் கிட்டத்தட்ட எங்கள் யாழ்ப்பாணத்து 'டபிள் டெக்கர்' வேகம் இது. எங்கடை 'டெக்கருகள்' இந்த மலைநாட்டுத் தொழிலாளரிடம் கொஞ்சம் பாடம்கேட்டாற்பரவாயில்லை.

ஊ! மனிதருடன் நடக்க முடியாது ஒரு மாதிரி உடம்பைப் 'போசக்குமாசக்காய்' வைத்திருக்கின்ற எங்களுக்கு இந்த நடை சரிவராது. உறுப்புகள் பொறிஞ்சு விழுந்தாலும் விழும்போல் இருக்கு. இது எழுச்சிநடை.

அதற்கு உடல் உறுதிவேண்டும். எங்கடை உடற்கட்டுக்கும் தூக்க நடைக்குந்தான் ஒத்துவரும்.

என்றாலும் வந்துவிட்டோமே!

பஸ் தயாராகநிற்கின்றது. இது எங்கடை பகுதி வசுவல்ல. நேரம் என்றுல்நேரந்தான். எங்களை விரைவாக நடக்கவைத்து வசுவில் ஏற உதவிபுரிந்த அந்தத் தமிழ்த் தொழிலாளரை வாழ்த்தி வசுவில் ஏறி அமருகின்றேம்.

(வளரும்)

**- கவிஞர் வி. கந்தவனம் -**

# இந்த வாழ்க்கை...

(6- பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுகிறுர்சள். தன்னலமான செயலில் ஈடுபட்டு, வாழ்க்கையில் பொருளீட்டுவதற்கு வருகின்ற காலத்தில் மன அமைதி — உடற்சுகம் இரண்டின் காரணமாக நியாயத்திற்குப் புறம்பானதைக் கண்டும் காணுததுபோல் இருக்கிறுர்கள். இரட்டை வாழ்க்கைவேஷமனத்துடன் இவர்கள் இருப்பதால் சமூகத்தில் வெறுக்கப்படுகிறுர்கள்; குடும்பத்துள்ளே பாராட்டப்படுகிறுர்கள். எதைக் கண்டும் சும்மா இருக்கும் சுகத்தை அறிவது சிறந்த குடும்பஸ்தர்களுக்குப் பொருந்தாது.

மதத்தின் பெயராலோ, அரசியல் ஆட்சி முறையாலோ மக்களை உழைக்கச் சொல்லிவிட்டுத் தன்னளவில் உழைக்காது உடலில் அழுக்குப்படாது வாழ்கிறவர்கள் சமூகத்தின் நோய்க்கிருமிகள், சிறந்த ஆட்சி என்று எதைச் சொல்லுகிறேம். எதிலும் செயல்படாத அரசுதான் சிறந்த அரசு. செயல்படுகிறவர்கள் பிறருடைய குறைபாட்டுக்குக் காரணமாவார்கள். விமர்சகர்களாகவே வாழ்ந்துவிட்டு, எதையும் சிருஷ்டி செய்யாமல் தளுக்காகப் போவது சிலரதுவாழ்வின் நோக்கம்.

அரசாட்சியிலும் சரி. தனிப்பட்ட ஒரு சிலரின் வாழ்க்கையிலும் சரி செல்வாக்கு உள்ளவர்களுடன் ஒட்டிக்கொண்டு ஒத்துப் பாடுவதுதான் முன்னேறிகள் காணும் வாழ்க்கைத் தத்துவமாக இருக்கிறது. கூடுமானவரை தன்னிலும் வறியவர்களிடம் தாழ்ந்து பணிந்து தலைகுனிந்து நிற்பதும், தம்மின்மெலியாரிடம் சர்வாதிகாரம் செய்வதும் சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கிடக்கும் நாகரிகப் பாம்புபோல-கரவு வாழ்க்கை வாழுவார்கள். எல்லோரையும்நண்பராகவோ, எல்லோரையும் விரோதியாகவோ எண்ணுமல் யார் வழி தனக்கு லாபங்கள்-பதவிகள் -பண வருவாய்கள் உண்டோ அவர்களுக்குக் கூழைக் கும்பிடுபோட்டு குனிந்து வாழ்வது குறுகிய மனமுடையோர் வாழ்வு.

முன்னணியில் நிற்காமல் பின்தங்கிநின்று பிறருக்கு ஆபத்தும், தனக்கு சம்பத்தும் என்று காரியம் சாதிக்கும் மனிதக் கொக்குகள் வாழ்க்கை ஓடையில்நிறைய இருக்கின்றன. தன்னை மிகத் தாழ்ந்தவனுகை, ஊழியனுக, ஆச்சாரியர்கள் முன்பும், மந்திரிமார்கள் முன்பும் காட்டிக்கொண்டு, வசதியைச் செய்வார்கள்; தவறு செய்துகொள்வார்கள்.

இவர்கள் பேச்சிலே உண்மையோ, நடத்தையில் உண்மையோ, பழகுவதில் உண்மையோ இருக்காது. எதையும் மூடுவது மறைப்பது வேஷங்கட்டுவது என்றிருக்கும். இடத்துக்குத் தக்கபடி வாழும் ஒணுன்களும் இவர்களும் ஒத்த மனத்தவர்; ஒத்த நிறத்தவர்; ஒத்த குணத்தவர் மனத்திலிருந்தே மனத்தின் ஆசைகளை நிறைவேற்றுவார்கள்' வஞ்சித்தே வளத்தை அடைவார்கள்.

இவர்கள் பேணுவதுபோக்கிரித்தனம்; செய்வது வஞ்சகம்; பேசுவது உலக நாகரிகம், தனக்கு வசதி செய்கிறவனுக்கு வாய்க்கு ருசியாகப் பேசுவதும், சோம்பி இருப்பதும், உடலையும்மனத்தையும் வருத்திக்கொள்ளாமல் வளப்படுத்துவதும் இவர்கள்இயல்பு. உண்மையாகப் பாடுபட்டால் உடல் இளைத்து நொறுங்கிப்போம். தலைநரைத்து கண் இடுங்கிப் போம். அதேசமயம் வேலை செய்ததுபோலப் பாவித்து பாவனைசெய்து தன்னைவளர்த்துக்கொள்வார்கள்.

காரணம் இவர்களுக்கு உழைப்பைவிட உடலின் மீது ஆசை அதிகம்; நேர்மையைவிட பணத்தின்மீது ஆசைஅதிகம்; நெஞ்சைவிட பஞ்சுமெத்தைமீது படுக்க ஆசை அதிகம். குறிக்கோளைவிட, குறுகிய வழிகளில் பிடிப்பு அதிகம். பிறர் காணுமலும், பிறர் கண்டாலும் அதனை லட்சியம் செய்யாமலும் இருப்பார்கள். காலத்தின் சுவடுகள் தன் உடம்பில் படாமல் பசுமையாக பால்யர்களாக வாழ்வார்கள். ஆசைகளை அறிந்து அளந்து அதனையும் பயனுக்குவார்கள்.

உடலையும் உள்ளத்தையும் இளமையாக வைத்துக்கொள்வதுதான் இவர்கள் எண்ணமே தவிர்த்துஉழைப்பும் உறுதியான கொள்கை மீது நம்பிக்கையும் இருக்காது.

இவர்கள் எண்ணம் குறைவான உழைப்பு; நிறைவான வருமானம். சக்தியைச் சேமிப்பார்கள். திருப்தியுடன் வாழ்வார்கள். அதாவது மகிழ்வாக வாழ்வது ஒன்றே இவர்கள்தம் குறிக்கோள். நீண்டநாள் வாழவும்திட்டம் வைத்திருப்பார்கள்.

குடும்ப வாழ்க்கையில் இத்தகையவர்களும் இருப்பார்கள். இவர்கள் சந்தனமரம் போன்றவர்கள். அதாவது பிறருடைய நட்பு, உழைப்பு, செல்வாக்கை உறிஞ்சி மணமுடன் வாழும் மரங்கள் இவர்களுக்கு மாருக எரிவிறகுபோல் பயன்படும் குடும்பஸ்தர்களும் உத்திரங்கள், மரக்கலங்கள் செய்யப்படும் மரம்போன்ற உறுதி வாய்ந்த குடும்பஸ்தர்களும் நம்மிடையே இருக்கிறுர்கள்.

எரிவிறகாக இருப்பது நல்லதா? தேக்குமரமாக இருப்பது நல்லதா? இந்த இரண்டிலும் சேராத சந்தனமரமாக இருப்பது நல்லதா?

வாழ்க்கையின் அர்த்தம் இவ்வளவுதான். எரிவிறகும் தேக்குமரமும் பிறர் கண்ணில் படுவதில்லை. சந்தனமரந்தான் படுகிறது. நெஞ்சிலேவந்து மணம்வீசுகிறது. தன்னை மறைத்துக்கொண்டு பிறரைக்குளிர்வித்து அவனை நெஞ்சார அணைத்துக் கொண்டு உறிஞ்சிவிடுவார்கள்.

சந்தனமரத்தையும் புல்லுருவி இனத்தோடு மிகப் பெரிய சான்றேர்கள் இணைத்துவிடுவார்கள். எரிந்து சாம்பராகும் மரமாக இருப்பது மிகவும்மேல். தேக்குமரத்து உத்திரமாக நமது குடும்பவாழ்க்கை இருக்குமானுல் இன்னும்மேல். பல்லாண்டுகாலம் நமது பரம்பரைக்கு வீடுகொடுத்த பலனைப் பெறுவோம்.

இதுவே என் விளக்கம்; வாழ்வைப்பற்றிய சிந்தனை.

# பஞ்சாமிர்தம்

## ஏகாந்தமான பொருளே!

கடவுளுக்கு உண்மையில் எவரிடமும் விருப்போ வெறுப்போ கிடையாது- அவர் பற்றற்றவர். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பார்ப்பதில்லை அவருக்கு எல்லோரும் சமம். அவருக்கு தாயில்லை, தந்தையுமில்லை. மனைவி மக்களில்லை. உற்றுரும் மாற்றுருமில்லை, அவர் பிறப்பிறப்பற்ற ஏகாந்தம். சில மனிதர், தங்கள் சொந்த நன்மைக்காக, தங்களுக்கும் கடவுளுக்கும் சில தொடர்புகள் இருப்பதாக நினைத்துக்கொள்வதுண்டு. அதனுல் அவர் தாயுமாவார், தந்தையுமாவார்' உள்ளொளியுமாவார்.

— பாகவதம்.

## அவர் எழுதிய தமிழ்

பாண்டித்தியம் உடையோர்களும் பாண்டித்தியம் இருப்பதாக நினைத்துக்கொள்வோர்களும் கவிகள் கூறத் தொடங்கிவிடுகிறுர்கள். கவித்திறமை இருப்பதற்குப் பாண்டித்தியம் ஒருவாறு அவசியமென்றுலும், பாண்டித்தியம் இருப்போர்களுக்கெல்லாம் கவிதா சக்தி இருப்பதில்லையென்பதை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். இலக்கண வித்துவான்கள் கூட தாம் கவி பாடாமல் இருந்தால் இது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்ளுகிறுர்கள். இங்ஙனமாக உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்துபோய்விட்டது... உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறுர்கள். அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புதுநாவல்கள் எழுதுகிறுர்கள்: அவர்களுக்கு கொஞ்சம் லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறுர்கள். இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை. அச்சிட்டால் வாங்குவாரில்லை. ஆகவே நூலாசிரியர் தமக்கு தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபட வழியில்லாமல் வேறு தொழில் செய்யப் போய்விடுகிறுர்கள்.

—சி. சுப்பிரமணிய பாரதி.

## மௌனம் கலக நாஸ்தி

ஓர் இளைஞன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவனுயிருந்தும், புத்திசாலியானபடியால், படித்த பெரியோர்கள் மத்தியில் அதிகம் பேசாது மௌனமாகவே இருப்பான். இதைக் கவனித்த அவனுடைய தந்தை, 'மகனே! நீயும் அவர்களுடன் கலந்து உரையாடாமல் ஏன் இப்படி மௌனமாயிருக்கிறுய்?' என்று பரிவுடன் கேட்டான். அதற்கு மகன் சொல்வான்: 'தந்தையே! எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப்பற்றி அவர்கள் கேட்டுவிட்டால் நான் வெட்கித் தலைகுனியவேண்டுமென்பதற்காக பேசாமல் இருந்துவிடுகிறேன். சில தினங்களுக்குமுன் ஒரு குடியானவன் பிய்ந்துபோன தன் செருப்பில் ஆணிவைத்துத் தைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவ்வழியால் வந்த போர் வீரன் ஒருவன் குடியானவனிடம் போய் தன் குதிரைக்கும் லாடம் அடித்துவிடும்படி வெருட்டினுன். குடியானவனின் கதி நமக்கும் ஏற்படலாமல்லவா?'

—பாரசீகக் கவி ஷெயிக் மூஸ்லி அலதின்.

## தசமாப்த பூர்த்தி

நூறு வயதுக்கும்மேல் வாழ்ந்துவிட்ட 310 பேர் இப்பொழுது ஜப்பானில் இருக்கிறுர்களாம். இவர்களில் ஆண்கள் 62 பேர்மட்டுமே. மீதி 248 பேரும் பெண்கள். கடந்த செப்டம்பர் 15-ம் திகதி ஜப்பானில் 'வயோதிபர் தினம்' கொண்டாடப்பட்டபோது பிரதம மந்திரி சேட்டோ இவர்களுக்கு வெள்ளியால் செய்த பட்டயங்களைப் பரிசளித்தார்.

## 'குல்லூக பட்டர்'

1934-ல் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் ஸேர். ஆர் கே. சண்முகம் செட்டியார் காங்கிரஸ் தலைவரான ராஜாஜிக்கு 'குல்லூக பட்டர்' என்று பட்டம்சூட்டினுர் மனுதர்மசாஸ்திரத்துக்கு 'குல்லூகபட்டர்' வியாக்கியானம்கூறியதுபோலவே மகாத்மாகாந்தியின் கொள்கைகளுக்கு விளக்கம் கொடுக்கிறுர் என்பதே அதன் அர்த்தம் (சென்ற ஒன்பதாம் திகதி ராஜாஜிக்கு 91 ஆண்டுகள் பூர்த்தியா கின.)

தயாரிப்பு: — வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நாடகங்களை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் என்றைக்கும் பொருந்தும் வாழ்க்கைக் கோடுகளை வைத்து நாடகங்கள் அமைத்த ஷேக்ஸ்பியர் இன்றும் என்றும் உயிர்த்துடிப்புடன் இருந்துவருவார். ஆனல் அன்றுடப் பிரச்சினையையே மையமாக வைத்துப் பெரும்பாலான நாடகங்களை அமைத்துவிட்டேன். ஆதலால் நான் மறைந்துவிடுவேனே என்று நினைக்கின்றேன் என்று கூறியுள்ளார்.

அதனுல்தான் தாங்கள் 'தணியாத தாகம்' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினீர்களா?

ஒருவகையில் அப்படியும் கூறலாம். சமூக நாடகத்தின் முக்கியத்துவத்தையும் உணராதவனல்ல. சீதனக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு 'மறுமலர்ச்சி' என்ற சமூக நாடகத்தையும் வேறு சில சமூக நாடகங்களையும் எழுதியுள்ளேன். தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நிற்கும் தமிழர்களின் இன்றைய பரிதாப நிலையில் வரலாற்று நாடகங்களும் சமூக நாடகங்களும் நிறைய மேடை ஏற்றப்பட்டு, மக்களின் உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்யவேண்டும்.

கவிதைகளில் உணர்ச்சி முக்கியமா, பொருள் இலக்கணம் முக்கியமா?

சிறந்த பொருளை உள்ளடக்கிய நிறைந்த உணர்ச்சி ததும்பும் கவிதை படைக்கப்பட வேண்டுமென்ற கொள்கை உடையவன் நான். உணர்ச்சியும் பொருளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. உணர்ச்சி காட்டாற்று வெள்ளம் போன்றது. காட்டாற்று வெள்ளத்தை வகைப்படுத்தி வரம்புகட்டி கழனிக்குப் பாய்ச்சுவதுபோல உணர்ச்சியையும் சிறந்த பொருளோடு சேர்த்து வழங்கும்போதுதான் கவிதையைப் படிப்போர் இழிந்த நிலையை அடையாது உயர்ந்த நிலையை அடைவர். உள்ளத்து உணர்ச்சியை ஆள்பவர்கள் புலவர்கள். அவர்கள் தத்துவ ஞானிகளைவிட மக்கள் உணர்ச்சியை ஆள்கிருர்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. எனவே அத்தகைய சக்திவாய்ந்த கவிஞன் பொருளைப் பொருட்படுத்தாது உணர்ச்சிமட்டும் வழங்குவதென்பது எதுவித பயனையும் விளைவிக்காது.

அண்மைக் காலத்தில் கவிதை வடிவங்களை மாற்றி வருகின்றுர்கள். பொதுவாக ஒரு பகுதியினர் வசனம் போலவே கவிதை எழுதுகிருர்களே இதனுல் மரபு இலக்கணம் புறக்கணிக்கப் படுகிறதே இது பற்றித்தங்கள் கருத்து?

இந்த முறையில் எல்லோருமே எழுதத்தொடங்கினுல் தமிழுக்கே சிறப்பாக அமைந்த சிலேடைபோன்ற கவிதைகள் தோன்றுமல், அந்நடைகளே மறைந்து ஒழியலாம். வசனத்திற்கும் கவிதைக்கும் வேறுபாடு உண்டு. எல்லாவற்றிலும் சமரசம் காணவேண்டுமென எண்ணுவது மூடத்தனம். பாட்டுக்கு கவிதைக்கு என சில தனித்தன்மைகள் உண்டு. ஓர் உவமை கொண்டு அதை விளக்க விரும்புகிறேன். மருந்தை உடனடித் தேவைக்கு உயிரைக் காப்பாற்றுவதற்கு ஊசிமூலம் வழங்குகிருர்கள் அத்தகைய ஊசிமருந்து போன்றதே கவிதை அத்தகைய கவிதைகளை படித்ததும் நாடி நரம்புகள் முறுக்கேறுகின்றன. செயல்செய்ய வேண்டுமென்ற துணிவும், துடிப்பும் எழுகின்றன. வசனத்திற்கு அத்தகைய சக்தி இல்லாததற்குக் காரணம் கவிதைக்கு உள்ள உணர்ச்சியும் ஒலிஅமைப்பும் வசனத்தில் இல்லாமையே. உணர்ச்சியும் ஒலிஅமைப்புந்தான் கவிதைக்கும் வசனத்திற்கும் உள்ள வேறுபாடு. அந்த வேறுபாட்டை நீக்கி கவிதையை வசனம்போல்எழுதுவோர் கவிதையை மறைமுகமாக அழிக்க முயலுகிருர்கள்.

பொருள் முதல் வாதமே படைப்பிலக்கியத்தின் முக்கிய கருவாகஇருக்கவேண்டுமென சிலர் சொல்லி வருகிருர்களே, அது பற்றிதங்கள் கருத்தென்ன:

மனிதவாழ்வில்பொருளும் வேண்டும். அருளும் வேண்டும். மனதிற்கு அமைதியையும் இன்பத்தையும் தருவதற்கு பொருளேவேண்டும். என்று கூறுவதுபுறத்தளவில் செல்வச் செருக்கையும் செழிப்பையும் தரக்கூடியதாக அமையலாம். ஆனல் வாழ்வில் குறிக்கோளாகிய தனிமன அமைதியையும் இன்பத்தையும் தந்திடுமா என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றேம். ''பொருளற்றுர் பூப்பர் ஒருகால் அருளற்றுர் அற்றுர் மற்றுதல் அரிது'', ''பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள'' என்பது வள்ளுவர் வாக்கு. எனவே, அருளுள்ளம் கொண்டவனிடத்தே உள்ள பொருள்தான் மற்றவனுக்கு இன்பத்தையும்மன அமைதியையும் தரத்தக்க தன்மைவாய்ந்தது. பொருள் செழிப்பு மட்டுமுள்ளவர்கள் மன அமைதி பெற்றுர்களா? ஜோன் ஸ்ருவட் மில் என்ற அரசியல்ஞானி தமது 25 வயதிலேயே நாடி நரம்புச் சோர்வுக்குள்ளானுன். அக்காலத்திலேயே அவர் தன் புத்தகங்கள் மூலம் பெரும்பொருளையும் புகழையும் ஈட்டியிருந்தார். ஆனல் அவை மன அமைதியைத் தரவில்லை. இயற்கைக்கவிஞன் வேட்ஸ்வேர்த்துடைய அருள் அமைந்த பாடல்களை படித்துத் தான் இழந்த தனது மன அமைதியையும் இன்பத்தையும் தான்பெற்றதாக தனது வாழ்க்கைக் குறிப்பில் அவர் எழுதியுள்ளார். எனவே பொருளே வேண்டுமெனக் கூறுவதை விடுத்துப் பொருளும் அருளும் வேண்டுமென்பதே சிறந்தது.

தாங்கள் அரசாங்க ஊழியராக இருந்து ஓய்வுபெறுகிறீர்கள் அரசகருமமொழியால் முன்பொருமுறை தாங்கள் பாதிக்கப்பட்டிருந்தீர்கள். அரசகருமமொழிச் சட்டமும் தமிழ் அரசாங்க ஊழியர்பற்றியும் தாங்கள் ஏதாவது சொல்லமுடியுமா?

அநீதியைத் தொடர்ந்து கட்டாயமாக அமுலாக்கினுல் அது நீதியாகிவிட முடியாது. அரசாங்க ஊழியர்களும் பொதுமக்களேதான் என்பதை உணர்ந்துதான் அண்மையில் அரசாங்கஊழியர் ஒரு பகுதியினருக்கு அரசியல்உரிமை வழங்கப்பட இருப்பதாக அறிகிறேம். தமிழ்ப் பொதுமக்களாகியதமிழ்அரசாங்க ஊழியர்கள், அவர்கள் சம்மதமின்றி ஒருதலைப்பட்சமான முறையில் சிங்களச்சட்ட அமுலுக்கு ஆளாகி இன்றும் இன்னலுக்கு ஆளாகிக் கொண்டே இருக்கிருர்கள். இந்த நாட்டிலே வாழ்கின்ற ஓர் இனமக்களுக்கு இல்லாத ஒரு நிபந்தனையை மற்ருெரு மக்கள்மீது, அதுவும்உரிமை குறைந்த அரசாங்க ஊழியர்மீது திணிப்பதுமிக அநீதியானது. இந்த அநீதியை எதிர்த்து தொழிற்சங்க ரீதியிலே அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் போராடிக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருந்தால்போதும். பல்வேறுபட்டுப்பிரிந்திருந்தால் தொழிற் சங்கம் வலிமை இழந்துவிடும் என்று சில பெரியார்கள் சொல்லிவருகிருர்களே. அப்படியானுல் ஒரேதொழிற் சங்கத்தின் கீழேதமிழ் ஊழியர்கள் சேர்ந்து தங்கள் உரிமைகளுக்காகப் போராடினுல் என்ன?

சிங்களம்மட்டும் சட்டத்திற்குப் பிறகு தொழிற்சங்கத்துறையிலே, சிறப்பாக தமிழ் அரசாங்க ஊழியர் அங்கம் வகித்த தொழிற் சங்கத்திலே நிகழ்ந்தவற்றை சிறிது நினைத்துப்பார்த்தால் உண்மையான நிலை எமக்குப் புலப்படும். தங்கள் கேள்விக்கும் விடை கிடைக்கும், 1956-ல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியபோதும் 1961-ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் தான் அரசாங்க திணைக்களங்களிலே நடைமுறைப்படுத்துவதென 1960-ல்சுற்றறிக்கை மூலம் அரசாங்கம் அறிவித்தது. அச்சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்கள் அந்நேரத்தில் அரசாங்கலிகிகர்சேவைச்சங்கம் என்று சொல்லப்படுகின்ற ஜி. சி. எஸ். யூ. யூனியனில் தான் இருந்தார்கள். சிங்கள ஊழியர்க்கு ஏற்படாத இன்னல் தமிழ் ஊழியர்க்கு சிங்களம்மட்டும் சட்டத்தினுல் ஏற்பட்டது. அந்த இன்னலைக் களைவதற்கு ஆவன செய்யுமாறு இரு இன ஊழியர்க்கும் அங்கம் வகித்த ஜி. சி. எஸ். யூ.வை தமிழ் அரசாங்க ஊழியர்கள் 600க்கு மேற்பட்டவர்கள் எழுத்துமூலம் கேட்டனர். இந்தச்சட்டத்தினுல் எவ்வகையில் தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை ஆராயக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு கேட்டிருந்தனர். கூட்டத்தை நடத்தாமல் விட்டதால் தமிழ் அரசாங்கஊழியர்கள் மொழிவழி பிரிந்து தமக்கெனத் தம் தொழிற் சங்கமொன்றை ஏற்படுத்தினர். தொழிற்சங்கத்தினுடைய அடிப்படை நோக்கம் யாதெனில் தனிப்பட்ட ஓர் அங்கத்தவருக்குத் தானும் அநீதி இழைக்கப்பட்டால் அதனைக் களைந்து நீதியைப் பெற்றுத்தருவதுதான். அந்த அடிப்படை நோக்கத்திற்கு எதிராக பல ஆயிரக்கணக்கான தமிழ்அரசாங்கஊழியர்கள் பாதிக்கப்பட்டபோது சங்கம் நீதி கோரி போராடத் தவறியது. ஓர் இனத்தின் நலத்தைப் பாதித்து இன்னேர் இனம்வாழவேண்டுமென்ற நியதி இருக்குமட்டும் தொழில்துறையில் பல இனமக்கள் வேலைசெய்யும் மட்டும் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கமென்ற ஏற்பாடு இன்னலை விளைத்து ஒற்றுமையைக் குலைத்து ஓர் இனம் வாழ, மற்ற இனம் மாள வழிவகுக்கும்.

மொழிவழி பிரிந்து தொழிற்சங்கங்கள் செயற்படும்பொழுது தொழிலாளர்களிடையேயும் வகுப்புவாதம்தோன்றி நாட்டின் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாகுமல்லவா,

நான் மேலே கூறிய அதே விடையைத்தான் இதற்கும் கூறலாம். தனிப்பட்ட ஒருவர் நலம் பாதிக்கப்படும் பொழுதே போர்க்கொடி உயர்த்தவேண்டிய சங்கம் பேசாதிருந்துவிட்டு பாதிக்கப்பட்டவர்கள் தமக்கென ஒரு சங்கம் நிறுவியதும் அதனைப் பார்த்து வகுப்புவாதமெனக் கூறுவது தொழிற் சங்க அடிப்படைக்கே மாறுனது. எமர்சன் என்கிற [illegible] படி ஒருவனைத் தவறுக [illegible] னுவது [illegible] ஆனல் அவர்கள் எண்ணுவதோடுமட்டும் நில்லாது ஒரு பகுதியினரை இன்னலுக்கு ஆளாக்கிவருவது எத்தகைய குற்றம்?

இன்றைய நாளில் தமிழ்மக்கள் பொதுவாகச் செய்ய வேண்டியது என்ன?

தமிழ்மக்கள் எல்லோரும் ஒத்த உணர்வு பெறுதல் வேண்டும்: 'உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்' என்றுர் வள்ளுவப் பெருந்தகை. தமிழ்மக்களிடையே சாதி வேறுபாடுகள் ஒழிக்கப்படவேண்டும். அதுசிறிது காலத்தில் ஒழிந்துவிடுமெனக் கருதுகின்றேன். தமிழர்கள் எல்லோரையும் ஒத்த உணர்வு உள்ளவர்களாக வாழச் செய்யும் சக்தி வாய்ந்தது தமிழ்மொழி ஒன்றுதான். தமிழ் எங்கள் உயிர். என்பதாலே-வெல்லும் தரமுண்டு. தமிழருக்கிப் புவிமேலே" என்று பாரதிதாசன் பாடியதற்கு ஒப்ப எல்லோரும் தமிழை உயிராக மதித்து தன்னலமற்ற பொது நலத்தைப்பேணி அறத்தின் அடிப்படையில் சமுதாயத்தை நிறுவ தொண்டு செய்ய வேண்டும். இன்று தலைவர்கள் மிகுந்து விட்டார்கள். தொண்டர்கள் குறைந்துவிட்டார்கள். பாரதியின் பாட்டு எனது ஞாபகத்திற்கு வருகிறது.

ஊருக்கு உழைத்திடல்
யோகம் - நலம்
ஓங்கிடுமாறு
வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்
போதும் - உளம்
பொங்கலிலாத அமைதி
மெஞ்ஞானம்
பக்கத்திருப்பவர்
துன்பம் - தனை
பார்க்கப் பொருதவன்
புண்ணியமூர்த்தி
ஒக்கத் திருந்தி
உலகோர் - நலம்
உற்றிடும் வண்ணம்
உழைப்பவன் யோகி

இந்நிலைமை எய்திட தொண்டர்கள்- நாட்டிலும் மொழியிலும் நீங்காத பற்றுக்கொண்ட தொண்டர்கள்தான் இன்று தேவை.

# நமது நூல் நிலையம்

## பகவான் ஸ்ரீ சத்தியசாயிபபா கதை

ஸ்ரீகரி பதிப்பகவெளியீடு

பகவான்சத்தியசாயிபாபாவின் வழிபாடு இன்று பல இடங்களிலும் இடம்பெற்று ஆத்மீக ஒருமைப்பாடு தோன்றுதற்குரிய சுமுகமான சூழ்நிலையில் இந்நூல் வெளியாகியுள்ளது.

'மருத்துவரிடம் நோய் நீக்கச் செல்வோர் மருத்துவரிடமும் அவர் தரும் மருந்திடமும் எவ்வளவு நம்பிக்கை வைக்க வேண்டுமோ அவ்வளவு நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று சான்றேர் சிலர் செப்பியதை இந்நூல் கற்போர் மனதிற் கொள்வது நல்லது.' என்று நூலுக்கு முன்னுரை வழங்கிய திரு. உ. இ. தமிழ்ச் செல்வன் குறிப்பிட்டு மன நம்பிக்கையோடு இப்புத்தகத்தைப் படிக்கவேண்டுமென்பதை வற்புறுத்துகின்றுர்.

இந்நூலைச் சிங்களமொழி பேசும் திரு. யு. ஜி. சியனேரிஸ் என்பவர் தமிழில் வெளியிட்டுள்ளமை சாயிபாபாவின் பக்தி இனம் மொழி ஆதிய எல்லைக்கப்பால் செறிந்துள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றது.

— ஈஞ

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 12-12-70

(செய்திகள்: காலை 6-35, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல் வகை, 7-45 இவ்வார பிரமுகர், 8-00 பௌத்த நற்சிந்தனை, 8-15 ஞானமிர்தம், 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.
9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 சொல்லம்பு, 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர்மலர், 12-00 எமது அதிதி, 1-05 பெண்ணுலகம்.

344 மீ, அன்ட் 61 மீ,
மாலை 4-25 சங்கமம் 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை. 7-00தாளவாத்தியக்கச்சேரி 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித்தொகுப்பு, 9-45பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

## தேசிய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சோஷலிச நாடொன்றில் வெளியிட மக்கள் எழுத்தாளர்குழு துரிதமாக வேலை செய்துகொண்டிருக்கிறது" என்ற தகவலையும் கூறினுர்.

'இந்த சாகித்திய மண்டல உறுப்பினர் பதவி கிடைத்தபின்னர் ஏற்பட்ட வரவேற்பு பற்றிக் கூறமுடியுமா?

'பொதுவாக என்னைத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் நேர்முகமாகச் சந்தித்து வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொண்டார்கள். கடிதம் தந்திமூலமும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிருர்கள். பல ஸ்தாபனங்கள் வரவேற்பு வைக்கக்காலம்கேட்டு எழுதியுள்ளன. ஒருசில பண்டிதர்கள்கூட பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள். மிக நெருங்கிய நண்பர் ஒருவர் என்னை யாழ். வீதியொன்றில் சந்தித்து, 'இது யாழ்ப்பாணத்துக்குப் பெருமையடாப்பா' என்றுர். ஆனல் இந்தப் புகழ்ச்சி இகழ்ச்சியல்ல. எதிர்காலக் குறிக்கோள். அதாவது —

'உண்மையான தனித்துவ இலக்கியத்தை நமது பாரம்பரியத்துக்கு விட்டுச் செல்ல வேண்டும். ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு தனிப் பாரம்பரியம் உண்டு. இப்படிச் சொல்வதால், மற்ற நாடுகளுக்கு எதிரிகள் என்றல்ல கருத்து. வருங்கால சந்ததி நமது தேசிய இலக்கியப் பாரம்பரியத்தை நினைவுகூருமானுல் அதுவே என்னைப் போன்றவர்களுக்குப் போதும். கடந்த இருபதிதைந்து ஆண்டு காலத்தில் நான் ஏதோ என்னுலானதைச் செய்திருக்கிறேனென்றுல் அதற்குக் காரணம் இந்தநாட்டு மக்களின் அன்பும்ஒத்துழைப்பும்தான். பரிசுகள் எல்லாம் அதற்கு அப்புறம்தான்.

இப்படிக் கூறி முடித்தார் ஜீவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MANOHARA**
Jaffna
Daily 4-45,7 & 9-45 p.m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)

**REGAL**
Jaffna
Daily 4-45,7 & 9-45 p.m.
Poya days 4 shows
Sean Connery
in
THUNDER BALLS

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன்
நடித்த
**மாட்டுக்கார வேலன்**

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
**யாழ். வெலிங்டன்**
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ

முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்



**கண்ணன் என் காதலன்**
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நயினாதீவிலுள்ள பள்ளி வாசலுக்கு அண்மையில் சுமார் 25 பரப்பு வருமான தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பென்சி பெலஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2554

நன்றாகத் திருத்தப்பட்ட 15 ஏக்கர் நடுத்தர வகுப்புக் காணி. பிரதான வீதிக்கு அண்மையில் புளியங்குளத்தில் உண்டு. ஞா. தேவராசா, 83/1, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 2560

வீடு பூர்த்தியடையாதது. இரண்டு பரப்புக் காணியில் பிறவுண் ரோட்டில். சுற்று மதில், கிணறு, மலகூடம், காய்க்கும் தென்னை, பலா, மா, மரங்கள். லாண்ட் இன்வெஸ்ட்மென்ற், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். போன்: 7453. 2558

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வில்லியஸ்-ஈசி பிறைமும் மருந்து விசிறும் யந்திரமும் விற்பனைக்குண்டு, செபஸ்தியான், மைலங்காடு, ஏழாலை தெற்கு. சுன்னாகம். 2564

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சிவாஜி -- சரோஜாதேவி
நடித்த
**புதிய பறவை**

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக் காணியும் விலை ஐம்பதாயிரம். கடன் வசதி கிடைக்கும், வெஸ்ட் டன்றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 2562

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலையத்துக்கு ஒரு பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியை தேவை. தகமை அனுபவம் முதலியவற்றைக் குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல 2563, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2563

### தேவை

யாழ்ப்பாண அரசாங்க ஆஸ்பத்திரியில் சேவை செய்யும் வைத்தியருக்கு ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் வீடு தேவை. டாக்டர் ஞானசம்பந்தர், 13, பண்டிங் லேன், மட்டக்களப்பு என்னும் விலாசத்திற்கு எழுதவும். 2568

**புத்தக விளம்பரம்**
சோதிடவாசகம்
2-ம் புத்தகம்
ஆசிரியர்கள்:
த. கணபதிப்பிள்ளை,
மு. சின்னப்பு
விலை ரூபா - 2-25
தபாற்செலவு -/60 சதம்.
கிடைக்குமிடம்:
1. ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
2. மு சின்னப்பு, இளைப்பாறுகைபெற்ற ஆசிரியர், அளவெட்டி.
2588

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்,
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**காதல் பறவை**

### EXCELLENT SITES

Available lands for building business houses, living houses, agricultural and industrial projects. Collaborators are welcome. Outright sale and or lease favourably considered. Apply 284, K. K. S. Rd., Jaffna. 2546

### பயிற்சி

மோட்டார் றிவைன்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு: இன்டஸ்றியல் இருவ்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 2553

### வகுப்புக்கள்

(பெண்களுக்கு மாத்திரம்)
பற்றிக் (Batik) கட்டி—சாயம் (Tie Dyeing) போடுதல், திரை (சேலை) யில் அச்சிடுதல் (Screen Printing) துணி வர்ணம் பூசுதல் (Fabric Painting) ஆகியன கூடிய சீக்கிரத்தில் நீங்கள் தனியாகச் செய்யக்கூடிய முறையில் கற்றுக்கொள்ளலாம். ஆரம்ப மாணவர்களும் தொழில் நுணுக்கங்களை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். ஜோதி அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: எட்டு வகுப்புக்களுக்கு ரூபா அறுபது. 2548

## இலங்கைக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மயிலாப்பூர் ஆகிய பிரதேசங்களுக்கும் போனார். கடைசியில் அவர் மயிலாப்பூரில் அநேகரை சத்திய மறையில் சேர்த்து ஒரு தேவாலயம் கட்டுவதற்கு அரசனை அனுமதி கேட்டார். பிறமதத்தினர் மறுத்துவிட்டனர்.

இப்படியிருக்கையில் இந்து சமுத்திரம் அழித்து கரை ஓரத்தில் பிரமாண்டமான மரம் ஒன்று ஒதுங்கியது. அதை அரசன் அரண்மனை கட்டுவதற்கு உதவுமென்று யானை, ஒட்டை, குதிரை ஆகியவற்றை கூட்டிப்போய் மிகுந்த பிரயாசைப்பட்டும் இழுக்க முடியாமல் போயிற்று இதை தோமையார் அறிந்து அரசனிடம் போய்

(16-ம் பக்கம் பார்க்க)


# யாழ். வின்ஸர் வெண்திரையில்

இப்பொழுது திரையிடப்படுகிறது! தினசரி 4 காட்சிகள்



★ ராஜன்
★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
★ கண்ணையா
★ ஆர். வாசு
★ புஸ்பமாலா


நடித்த



**ஏன்?**

டைரக்ஷன்:
ராமண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சிதானந்த மகராஜ் இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் அமைக்கப் பட்டுள்ள திவ்விய ஜீவன மண்டபத்தைத் திறந்து வைக்கிறார், அந்த மண்டபத்தின் உள் தோற்றத்தின் ஒரு பகுதியே இப் படம்.


## முக்கிய அறிவித்தல்

அநேகம் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்கள் மில்க் வைற் சோப் மேலுறை, இனும் பொருட்கள் கொடுக்கும் திட்டத்தை சித்திரை புதுவருட பிறப்பு வரைக்கும் நீடித்துள்ளோம். அன்பர்கள்வழமைபோல் மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், நன்றி — அதிபர்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

தபால் பெட்டி இல 77 யாழ்ப்பாணம்,


## இலங்கைக்..

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

"அந்த மரத்தை நான் மட்டும் இழுத்தால் எங்கள் கோயில்களைக் கட்டவும், அந்த மரத்தை எங்கள் கோயில் கட்டுகிறதில் செலவழிக்கவும் உத்தரவு கொடுப்பீரோ' வென்று கேட்டார். இது அவராற் கூடாதென்று எண்ணி அரசன் உத்தரவுகொடுத்தான்.

தோமையார் தமது நம்பிக்கையை ஆண்டவர் பேரில் வைத்துத் தமது இடுப்பில் சட்டைமேற் கட்டியிருந்த கச்சையின் நுனியை அந்த மரத்தின் ஒரு கொம்பில் கட்டி சிலுவை வரைந்து ஒருநெடிடியை இழுக்குமாப் போல் சுலபமாக இழுத்துப் போனார். அந்தப் புதுமையைக் கண்ட அநேக சனங்கள் ஆச்சரியப்பட்டதுமல்லாமல் அந்த அற்புதத்தைக் கண்டு அரசனும் அவன் குடும்பமும் அநேகம் பிரஜைகளும் ஞானஸ்தானம் பெற்றார்கள். தோமையார் மிக நேர்த்தியான கோயிலைக் கட்டிய பிறகு வெளியிற் கல்லினால் ஒரு சிலுவை செய்து ஒரு கல்லின்மேல் நாட்டி 'தூரத்திலிருந்த சமுத்திரத்தின் தண்ணீர் அந்த கற்சிலுவை மட்டும் வந்து சேருகிறபோது மேலை நாடுகளிலிருந்து குருக்கள் நம்மைப்போல் சத்திய வேதத்தைப் போதிக்க இங்கே வந்து சேருவார்கள்' என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னார். அவர் சொன்னபடியே சமுத்திரத் தண்ணீர் அந்தச் சிலுவையின் அருகில் சேருகிறபோது அர்ச் சவேரியார் இந்தியா தேசத்தில்சேர்ந்து தோமையப்பரைப்போல் சத்திய வேதத்தைப் போதித்தார்.

ஆகலால் தோமையார் ஒருசமயத்தில் முன் சொல்லப்பட்ட கற்சிலுவை முன் பாசத்தனியே முழங்காலிலிருந்து வேண்டிக் கொள்ளும்போது வேதவிரோதிகள் அவரிடத்தில் போய் அவர்மேல் விழுந்து காலால் உதைத்து அடித்து இம்சித்தனர். ஈட்டியினால் அவரைக் குத்தினான். அப்படியே அவர் வேதத்துக்காகப் பாடுபட்டு பிராணனைவிட்டார். அவர் மரணம் அடைந்த பிறகு அவருடைய சரீரத்தை மகாபூச்சியத்தோடு கிறீஸ்தவர்கள் வைத்திருந்து அவருக்காகக் கட்டிய சந்தோமையார் ஆலயத்தில் பத்திரமாக அடக்கம் செய்தார்கள். இதைத் தரிசிக்குமாறு ஆண்டுதோறும் மார்கழி 21-ந் திகதி பக்தர்கள் இவ்வாலயத்திற்கு கோடா கோடியாய் வந்து போகிறார்கள்.

ஈழநாடு

சாதாரண வருடம் கார்த்திகை மாதம் 27-ந் திகதி [12-12-70]

## திவ்விய ஜீவனம்

யாழ்ப்பாணத்தின் முன்னேற்ற சரித்திரத்திலே இன்று பொன்னான நாளாகும்.

கலை அழகுடன்கூடிய திவ்விய ஜீவன சங்கத்தின் நவீன மண்டபத்தைத் தீபமேற்றித் திறந்துவைக்கவும், அகில இலங்கை தெய்வீக வாழ்க்கை மகாநாட்டை நடத்திவைத்து அருளாசி வழங்கவும் சுவாமி சிதானந்தஜி மகராஜ் அவர்கள் இங்கு பறந்து வருகிறார்கள். அவர்களை 'வருக வருக' என்று வரவேற்கின்றோம்.

அரசியலில் சிக்கித் திகைத்து, ஆக்கைக்கே இரை தேடி அலமந்துள்ள நமக்கு, வாழ்க்கையிலே புதுவழி காட்டி ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்க வருகிறார்கள் அம் மகான்.

கிடைத்தற்கரியது இம் மானுடப்பிறவி. மிருக வாழ்க்கை வாழ்ந்து இதனைக்குட்டிச்சுவராக்கிக்கொள்ளாமல், உடலையும் உள்ளத்தையும் யோகாசனங்கள்மூலம்தூய்மையாக்கிப்பலப்படுத்திதெய்வீகஇன்ப வாழ்வு வாழ மனித குலத்துக்கு வழிகாட்டுவதே திவ்விய ஜீவன சங்கத்தின் மேலான நோக்கமாகும்.

மேலை நாடுகள் இதன் மேன்மையை உணர்ந்து அதிகம் பயன்படுத்திக்கொள்ளுகின்றன, ஆனால் நாமோ இது நமது ஆன்மீகச் செல்வமாயினும் இதைப் பயன்படுத்தாமல், கூடாத வழி சென்று தவிக்கின்றோம்,

யாழ்ப்பாண மக்கள், வீண்கவலைகளைவிட்டொழித்து நல்ல வழியில் வாழ வழிகாட்ட புதிய மண்டபத்தை சுவாமி அவர்கள் தம் பொற் கரங்களால் திறந்து வைக்கின்றார்கள், சிறப்பாகக் கல்லூரி மாணவர்கள் இப்பயிற்சிகளைப்பெற்று, தெய்வீக வீரர்களாக புது நம்பிக்கையுடன் முன்னேறி வாழ இது நல்[illegible]ப்பாகும். இன்பமே சூழ்க், எல்லோரும் [illegible]

## சமசமாஜ ..

(2-ம் கலத் தொடர்ச்சி)

பொறுமை இழக்காத அவர் கூட, பார்லிமெண்டில் பேசுகையில், 'தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களில் சிங்களத்தைத் திணித்தால் புரட்சிவருமென்றும் எச்சரித்தார். திரு. எஸ். ஜே. வி. தனிச் சிங்களச் சட்டத்தை ஒப்புக்கொண்டிருப்பின் அவர் இவ்விதம் எச்சரிக்கை செய்வானேன். இதிலிருந்தே அவர் இதை ஒப்பவில்லை யென்பது நிரூபணமாகிறது.

நவரங்கஹலாவிலே அரசியல் நிர்ணயசபை கூடிய போது, தமிழ், சிங்களம் இவ்விரு மொழிகளும் பாவிக்கப்பட்டன. சிங்களப் பேச்சுகளெல்லாம் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. இது நல்லதோர் சகுனமென்றும் மொழி விஷயமாகத் தமிழுக்குச் செய்யப்பட்ட பெரிய அநீதி, இமாலயத்தவறு, புதிய அரசியல்மூலம் நீக்கப்படுமென்றும் நம்பிக்கைகொள்ள இடமளித்தது. கூட்டு முன்னணி அரசாங்கத்திலே இடதுசாரிக் கட்சிகள் இருப்பதால், மொழி விஷயமாகத் தமிழருக்கு மீண்டும் நீதி கிடைக்குமென்றும் பலரும் நம்பியுள்ளனர். அந்த நம்பிக்கை வீணாக முடியாது.

சோஷலிஸ நாடுகளிலே சிறுபான்மையோர் பிரச்னையையும், மொழிப் பிரச்னையையும் எவ்விதம் தீர்த்துள்ளனரென்பதைஅனுபவமிக்க சோஷலிஸ்டான டாக்டர் என் எம். நன்கு அறிவர். தமிழருக்கும் நீதி கிடைக்கவும், இந்நாட்[illegible] சமூக

அமைதி நிலவவும், சோஷலிஸப் பாதையில் நம் நாடு முன்னேறவும் செய்ய சமசமாஜ கட்சித் தலைவரும் நிதி அமைச்சருமான டாக்டர் என். எம். முக்கு இது நல்லதோர் அரிய சந்தர்ப்பமாகும்; அவரே நழுவவிடின் தாயின் நாட்டை யார்தான் காப்பது!

## சரிதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்தது. ஸ்ரீதர் இல்லறத்திற் புகமாட்டார். துறவறமே அவர் இயல்பு என்று எல்லாரும் நினைத்திருந்த வேளையில் 1936ல் அவர்திடீரெனமறைந்தார். உறவினர் அவரைத் தேடிப் பிடித்து அழைத்து வந்தனர். 7 ஆண்டுகள் தனிமையாக வாழ்ந்தார். உலகப் பற்றை எல்லாந்துறந்தார். செல்வஞ்செழித்தமாளிகைச் சுகத்தை மறந்தார். ஸ்ரீதர் சிவானந்தருக்காகவே பிறந்தவர் சிவானந்தர் தமது நூல்களால் ஞானப்பாலை ஸ்ரீதருள் அள்ளிப்பொழிந்தார். சிவானந்தரையே படித்தார், நினைத்தார், துதித்தார் 1943-ல் ஸ்ரீதர் சிவானந்தரிடம் சரண் புகுந்தார்.

ஸ்ரீதர் காவிகட்டத்துடிக்கவில்லை. சுவாமிப்பட்டம் பெறத்தவிக்கவில்லை. நேராக சேவையிற் புகுந்தார். சிவானந்த மருத்துவ மனையில் நோயாளருக்கு அன்னை போல் உதவினார். அவரை டாக்டர் ராவ்ஜி என்று எல்லாரும் அழைக்க ஆரம்பித்தனர். ஸ்ரீதர் ஆசனம், பிராணாயாமம், பந்தம், முத்திரை, த்ராடகம், நௌலி, பஸ்தி, தியானம், நாமஜபம், சங்கீர்த்தனம் ஆகிய எல்லாச் சாதனங்களிலும் முதன்மை பெற்றார். வேதாந்த நூல்களையும், யோகநூல்களையும் கற்றுத் தெளிந்தார்.

10-7-1949-ல் குருபூர்ணமி தினத்தில் சிதானந்தர் புத்தர், சைதன்யர் போன்று காவியுடையணிந்து மகா தேஜஸ்வியாக விளங்கினார். சுவாமி சிதானந்தர் நாடெங்கும் குருநாதருடன் யாத்திரை செய்தார். அவரது எளிமை, தூய்மை, தெளிவு, அறிவு, அமைதி, பொறுமை, புன்னகை அனைத்தையும் மேனாடு மெச்சி வரவேற்றது.

### இலங்கைக்கு 3-வது வருகை

1950-ம் அக்டோபர் மாதத்தில், சுவாமி சிவானந்தஜியின் இந்திய-இலங்கை யாத்திரையின் போதும் சிதானந்தஜி இலங்கை வந்திருந்தார். மீண்டும் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 10 நாள் விஜயத்தை மேற்கொண்டும் இவர்இலங்கைவந்திருந்தார்.

## சுவாமி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10 மணிக்கு அவர் திறந்துவைப்பார். அதைத் தொடர்ந்து 3 நாட்கள்வரை நடைபெறும் முதலாவது அகில இலங்கை திவ்விய ஜீவன மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவார். சுவாமி சிவானந்த மகராஜ் அவர்களின் சிலையும் இன்று திறந்துவைக்கப்படும்.

### இன்றைய நிகழ்ச்சிகள்

ஓய்வுபெற்ற மாஜிஸ்திரேட் திரு. செ தனபாலசிங்கத்தின் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியில் ஸ்ரீ ச குமாரசாமிக் குருக்கள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ரங்கானந்தஜீ, யாழ்ப்பாணம் நாகவிகாரை பிரதம குரு வண. நந்தராம நாயகதேரோ, வண எல் ஆர் அன்ரனி, சேய்க்ரசருக் ஹுசேன் லெப்பே ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜ் காலை11-15க்கு 'அருளுரை' வழங்குவார். பிற்பகல் 12-30க்கு மகேசுவர பூஜையும் இடம் பெறும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டுடிசம்பர் மாதம் 12ந்திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.


## திருமண அழைப்பு

### தர்மாம்பாள்-கனகநாயகம்

எங்கள் புத்திரி தர்மாம்பாளுக்கும் மூளாய்-சுழிபுரம் காலஞ்சென்ற ச. கந்தையாவின் புத்திரன் கனகநாயகத்துக்கும் கார்த்திகை மாதம் 28-ந் திகதி (13-12-70) ஞாயிற்றுக்கிழமை இரவு டெமற்றக்கொடாவிலுள்ள புகையிரத ஊழியர் விடுதித் தோட்டத்தில் 8-ம் நம்பர் இல்லத்தில் திருமணம் நிகழும். உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம. தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

திரு. திருமதி இளையதம்பி, வட்டுக்கோட்டை மேற்கு.

2569


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org